விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 05 வியாழக்கிழமை (21.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 245

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# யார் மறுத்தாலும் விசாரணை நடக்கும்

## நவநீதம்பிள்ளை உறுதி



(கொழும்பு)

அரசாங்கம் நுழைவு அனுமதி வழங்க மறுத்தாலும் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை சட்ட மீறல்கள் தொடர்பிலான விசாரணைகள் இடம்பெறும் என்று ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க....

## ஒரு வருடத்துக்கு பொதுத் தேர்தல் இல்லை

(கொழும்பு)

இன்னும் ஒரு வருடத்துக்காவது பொதுத்தேர்தல் நடத்தப்பட மாட்டாது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஆளும் கட்சியின் நாடாளுமன்ற குழுக்கூட்டத்தின் போது ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் அரசாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் ஊடகங்களுக்கு அபிவிருத்திகள் தொடர்பாக கருத்துக்களை வெளியிடும்போது கவனமாக செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

அண்மைக்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை சுட்டிக்காட்டி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊடக அறிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி இதன்போது அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கு பணிப்புரை விடுத்தார். (எ-11)

## விசாரணைகளுக்கு உதவ ஐ.நா செயலர் கோரிக்கை

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளிற்கு உதவுமாறு ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அவரின் பேச்சாளர் ஸ்ரீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை ஆணையகத்தினால் உருவாக்கப்பட்ட மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்துடன் ஒத்துழைக்குமாறு செயலாளர் நாயகம் இலங்கையை கேட்

19 ஆம் பக்கம் பார்க்க....

## பாதை நிர்மாணிப்பில் பெரும் நிதி மோசடி

(கொழும்பு)

வடக்கு ரயில் பாதையை புதிதாக நிர்மாணிக்க அரசாங்கம் 149 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவு செய்துள்ளதாக, இலங்கை ரயில்வே ஊழியர்களின் பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் எஸ். பீ.விதானகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக

19 ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டமைப்பு இன்று புதுடில்லி பயணம்

### சனியன்று மோடியுடன் பேச்சு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்று வியாழக்கிழமை புதுடில்லிக்கு பயணம் செய்யவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இவர்கள் எதிர்வரும் 23ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக செய்தி

19 ஆம் பக்கம் பார்க்க....

## காலநிலை மாற்றம் பெரும் பாதிப்பு வரும்

(கொழும்பு)

காலநிலை மாற்றம் காரணமாக இலங்கையின் கரையோர மற்றும் விவசாய மூலவளங்களில் ஏற்படும் சேதம், இந்த நூற்றாண்டின் இறுதியளவில் நாட்டின் பொருளாதாரத்தின், மொத்த உள்நாட்டு உற் பத்தியில் 6 வீதமான பாதிப்பை ஏற்படுத்தும என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசியாவுக்கான காலநிலை மற்றும் பொருளாதாரம் குறித்த அறிக்கை ஒன்று கூறியுள்ளது.

கணிசமான எண்ணிக்கையிலான இலங்கையர்கள் இன்னமும் விவசாயம், கால்நடை உற்பத்தி, உள நாட்டு மீன்பிடி போன்ற மழை வீழ்ச்சியை நம்பிய வருமான மூலங்களில் தங்கியிருக்கிறார்கள் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின், அறிவு முகாமைத்துவம் மற்றும் நீடித்த அபிவிருத்திக்கான துணைத் தலைவர் பிந்து லொஹானி தெரிவித்துள்ளார்.

ஆகவே, கடுமையான காற்றின

20 ஆம் பக்கம் பார்க்க....



இலங்கை, எழுச்சி பெறும் தேசத்தின் சவால்கள் எனும் தொனிப்பொருளில் கொழும்பு, கலதாரி ஹோட்டலில் நேற்றுடன் நிறைவடைந்த பாதுகாப்பு மாநாட்டில் பாரதிய ஜனதாக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான சுப்பிரமணியன் சுவாமி உரையாற்றியதன் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அவரை வரவேற்றார். அதனைப் படத்தில் காணலாம்...

## மோடியை அழைக்கிறார் ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)

இலங்கையர்கள் எதிர்பார்ப்பதால் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நரேந்திர மோடி இலங்கைக்கு வரவேண்டும் என்று இலங்கை மக்கள் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு செய்தியாளர்களை சந்தித்தபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

சீன ஜனாதிபதி, ஜப்பானிய பிரதமமந்திரி ஆகியோர் இலங்கைக்கு வரும்போது ஏன் இந்தியப் பிரதமருக்கு இலங்கை வரமுடியாது என்று மக்கள் கேட்பதாகவும் மகிந்த தெரிவித்தார்.


பதவியேற்பு நிகழ்வின் பின்னர் தாம் மோடிக்கு அழைப்பு விடுத்ததாக குறிப்பிட்ட ஜனாதிபதி, எதிர்வரும் நவம்பரில் நடைபெறும் சார்க் மாநாட்டின்போதும் மோடியை

19 ஆம் பக்கம் பார்க்க....

100% எழுத்து மூலமான உத்தரவாதத்துடன் எண்ணி
30 நாட்களில் அவுஸ்திரேலியா பறக்கலாம்
தனியாளாக ஆஸி பறக்க விரைந்து வாருங்கள்.
100% சட்ட ஆலோசனை. 7 பேருக்கு மட்டுமே.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(சு-8256)

## கூட்டமைப்பின் இந்தியப் பயணம் அரசாங்கத்துக்கு சாட்டையடி!

### மனோ கணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

சுப்பிரமணியன் சுவாமி என்ற ஒருவரை இங்கே அழைத்து வந்து, அவரை இந்திய அரசின் பிரதிநிதி என்று, அப்பாவி சிங்கள மக்கள் மத்தியில் உருவகப்படுத்தி காட்ட, இலங்கை அரசாங்கத்தால் முடியுமானால், இந்திய அரசின் கதாநாயகனான நரேந்திர மோடியை சந்தித்து, 13-ம் திருத்தம் தொடர்பாகவும், அதை மேன்மேலும் விரிவாக்குவது தொடர்பாகவும் உரையாட தமிழ்த் தேசியக் கூட்டமை

19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அமைச்சர் மேர்வின் சில்வா திருந்திக் கொள்ள வேண்டும்

## பொது பல சேனா ஆவேசம்

அமைச்சர் மேர்வின் சில்வா முதலில் தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டுமென பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

ஏனையவர்கள் தொடர்பில் விமர்சனங்கள் செய்வதற்கு முன்னதாக அமைச்சர் மேர்வின் சில்வா தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும். தனது மகனை திருத்த வேண்டும் என்றும் கூறினார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் கூறினார்.

ஏனையவர்களை குற்றம் சுமத்துவதனை நிறுத்திவிட்டு தனது பிழைகளை அமைச்சர் திருத்திக்கொள்ள வேண்டும்.

மனிதர்கள், கடவுளர் மற்றும் குற்றவாளிகளுக்கு எந்த சந்தர்ப்பத்தில் எவ்வாறான மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்பது எமக்கு தெரியும்.

அது தொடர்பில் எவருக்கும் எங்களுக்கு பாடம் கற்பித்துக் கொடுக்க வேண்டியதில்லை.

வரலாற்றுக் காலம் முதல் மன்னர்களின் அவையில் அந்தரே போன்ற கோமாளிகள் இருந்துள்ளனர். இவர்கள் மக்களை மகிழ்ச்சிப்படுத்தி வந்துள்ளனர்.

அமைச்சர் மேர்வின் சில்வாவும் இவ்வாறு மக்களை மகிழ்வூட்ட கோமாளித்தனமான காரியங்களில் ஈடுபட்டு வருகின்றார் என கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். (எ-11)

# கண் சிகிச்சை பிரிவை அமைக்க காணி வழங்கியது மாநகரசபை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பஸ் நிலையத்துக்கு அருகாமையிலுள்ள யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான காணி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.பஸ் நிலையத்தில் தற்போது துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் இயங்கி வருகின்ற 7 பரப்புக் காணியே யாழ்.போதனா வைத்தியசாலையின் கண்சிகிச்சை பிரிவுக்கென யாழ்.மாநகர சபையால் வழங்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக குறித்த காணியில் இலங்கை மின்சார சபை இயங்கிவந்த போதிலும் காணியினை உரிமைகோரிய யாழ்.மாநகர சபை அதனை தற்போது வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளது.

குறித்த காணியில் அமைந்துள்ள ஒல்லாந்தர் கால கட்டடத்தினை இடிக்காமல் அதனைப் பாதுகாக்கும் பொருட்டு கண் சிகிச்சைப் பிரிவினை அமைக்குமாறு யாழ். மாநகர சபையில் நேற்று நடைபெற்ற விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு காணி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த காணி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ளமையினால் அனைத்து வைத்தியசாலை நடவடிக்கைகளுக்கும் இலகுவாக இருக்கும்.

கண்சிகிச்சைப் பிரிவு வைத்தியசாலை வளாகத்தினுள் அமைவதனால் நோயாளர்கள், வைத்தியர்கள் இலகுவாக கடமையில் ஈடுபட முடியும்.

குறிப்பாக நீரிழிவு நோயுள்ள நோயாளர்களுக்கு கண் பார்வை குறைபாடும் காணப்படுவது வழமை. ஆகையினால் இரண்டு நோய்களுக்கும் சிகிச்சை பெறவேண்டியது அவசியமானதாகும்.

கொழும்பு வைத்தியசாலையிலும் கண் சிகிச்சைப் பிரிவு வைத்தியசாலைக்கு அருகாமையிலேயே காணப்படுகின்றது எனத் தெரிவித்தார் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.பவானந்தராஜா. (எ-4)

# நான்கு ஆலயங்களில் ஒரே இரவில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் அருகருகே இருந்த நான்கு ஆலயங்கள் உடைக்கப்பட்டு அங்கிருந்த தங்கம் மற்றும் வெள்ளியிலான பொருட்கள் செவ்வாய்க்கிழமை இரவு திருடப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் நேற்று புதன்கிழமை தெரிவித்தனர்.

இத்திருட்டு சம்பவம் சுதுமலை வடக்கு பகுதியில் அமைந்துள்ள சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய வளாகத்தில் இடம் பெற்றுள்ளது.

சிவனாலயத்தின் முன்புறத்திலிருந்த இரு கதவுகளையும் உடைத்து மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான நகைகளை எடுத்துள்ளதுடன், சுற்றுமதிலால் ஏறி முருகன் ஆலய வசந்த மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த கிரீடத்தையும் திருடிச் சென்று அதில் பொருத்தப்பட்டிருந்த தங்கக் குடைகளை எடுத்துக் கொண்டு கிரீடத்தை சிவ ஆலயத்தில் வைத்துள்ளனர்.

பின்னர் அருகாமையிலுள்ள அம்பாள் ஆலயத்தின் கூரை வழியாக உள்ளே சென்று அங்கு காவலாளி கடமையிலிருந்த போதிலும் ஐம்பொன்னால் செய்யப்பட்ட வேல் மற்றும் முடி என்பவற்றை எடுத்துச் சென்று வெளி மண்டபத்தில் வைத்து உருக்கிப் பார்த்து விட்டு அவற்றை அவ்விடத்திலேயே விட்டுச் சென்றுள்ளனர்.

மேலும் மேற்படி மூன்று ஆலயங்களுக்கும் முன்புறமாக அமைந்துள்ள வைரவர் ஆலயத்திற்குச் சென்று மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த விக்கிரகத்தை திருடியுள்ளனர்.

இத் திருட்டுச் சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (எ-6)

# கடற்படை சிப்பாய் பிணையில் விடுதலை

(கிளிநொச்சி)

வெற்றிலைக்கேணிப் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த கடற்படை சிப்பாயை 50 ஆயிரம் ரூபாய் சரீரப் பிணையில் செல்ல கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் நேற்று புதன கிழமை உத்தரவிட்டார்.

அத்துடன், மேற்படி வழக்கை எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதிக்கு நீதவான் ஒத்தி வைத்தார்.

வீடொன்றினுள் கடற்படை வீரர் கடந்த 13ஆம் திகதி அதிகாலையில் அத்துமீறி நுழைய முற்பட்ட வேளை ஊர் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

தொடர்ந்து, பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட கடற்படை வீரர், கிளிநொச்சி நீதிமன்றத்தால் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

தொடர்ந்து, மேற்படி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேக நபருக்கு நீதவான் பிணை வழங்கினார். (எ-11)

# ஜப்பான் அமைச்சர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

ஜப்பானிய காணி, போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை உதவி அமைச்சர் மனபு சகையசெவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தார்.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிட்டோ ஹொபோ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மக்கள் தொடர்பாடல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி ஹெகலிய ரம்புக்வெல, ஜனாதிபதியின் செயலாளர் லலித்வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஷேனுகா செனவிரத்ன மற்றும் ஜப்பானிய பிரதிநிதிகள் பலரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (எ-11)

ஸ்ரீ ராகவேந்திரா ஜோதிட ஆராய்ச்சி மையம்
(மயிலாப்பூர், சென்னை, தமிழ்நாடு)
ஜோதிட மாமணி மயிலை வீரா
யாழ்ப்பாணம் வருகை
தொடர்புகளுக்கு 0766240632
வாருங்கள், வந்து நேரில் சந்தியுங்கள்
21.08.2014 முதல் 08.09.2014 வரை
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரை
கிரகத்தால் ஏற்படும் தோஷங்கள் மற்றும் பரிகார பூசைகள், ஜாதகம் பார்க்க, எழுத வந்து நேரில் பார்த்து நற்பலன் அடைவீர்கள்.
தொடர்புகளுக்கு:
ஈழத்து சபரிமலை
கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்
கோண்டாவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
0212227688, 0777110629
(7464)

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392
(சி-8247)

உடனடி வேலைவாய்ப்பு
புதியதோர் எதிர்காலத்தை நோக்கி...
வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டத்தினருக்கான பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன.
50 பேருக்கு மட்டும் முன்னுரிமை
இன்றே உடன் அழைக்க :- 0777981471, 0771363797
குறிப்பு:- தங்குமிடம் & உணவு இலவசம்.
வயதெல்லை 18-40
(சி-8255)

SALE SALE SALE SALE
யாழ்ப்பாணத்தில்...
கேசவன் புத்தக நிறுவனம் யாழ். Rashmi புக் மார்ட் நிறுவனத்துடன் இணைந்து நடாத்தும்
மாபெரும்
தமிழ் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்
யாழ்.தட்டாத்தெரு சந்தி
ரஷ்மி புக்மார்ட் முன்றலில்
ஆகஸ்ட் 28 வரை
பல்லாயிரக்கணக்கான தலைப்புக்களில் லட்சக்கணக்கான எண்ணிக்கையில் அதிரடி விலைக்கழிவுகளுடன்...
அனைவரையும் அழைக்கின்றோம்.
வாசிப்பை நேசிக்க வைப்போம்.
077 222 8980
(சி-8252)

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Swiss Agency for Development and Cooperation SDC
Swiss Cooperation Office Sri Lanka

**TENDER NOTICE**

Swiss Cooperation Programme Office Jaffna invites tender for the following civil works from **ICTAD registered contractors**. The documents can be collected from the locations given against each action from 21st August, 2014.

| Lot Number | Description of work | Minimum ICTAD level required | Contact Location |
|---|---|---|---|
| 7F-07872.02-(iii) | Rehabilitation Kiranchchi-kulam, Poonagary. | C8 in irrigation | 18/10, Wymen road, Nallur, Jaffna. |

- The tender document could be obtained upon the payment of non- refundable tender fee of Rs.1,000.00 (Rs. One Thousand only) from 9.30 am to 3.00 pm week days only.
- Contractor should submit a request letter to collect the document on the Company's business letterhead.
- Certificate of ICTAD registration and related experience should be submitted with the tender document.
- Quotations should be received either by post or hand for deposit in the special 'sealed box' available at SDC, Jaffna Office before 3rd Sept, 2014, 9.00 am.
- Name of the tender should be written on top left hand corner of the envelope.
- Tenders will be opened at 9.30 am on the same day at SDC, conference hall and representatives of contractors can be present.

Swiss Cooperation Programme Office Jaffna
Head of office
(சி-8251)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு, நீதி தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் கூட்டம்



நெடுஞ்சாலைகள அமைசசு, நதியமைசசு, பாதுகாபபு மறறும நகர அபிவிருததி அமைசசுககளின ஆலோசனைச சபை கூட்டங்களில கலநதுகொளவதறகாக ஜனாதிபதி மஹிநத ராஜபக்ஷ நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற கட்டடத்தொகுதிக்கு சென்றிருந்தார்.

# 250 மில்லியன் ரூபா செலவில் 17 ஆணைக்குழுக்கள் நியமனம்

## ஜே.வி.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடந்த 2005 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதிற்குள் அரசாங்கம், 250 மில்லியன் ரூபாய் செலவளித்து ஜனாதிபதி ஆணைக் குழுக்கள் 17 நியமிக்கப்பட்ட போதிலும் அவற்றில் அநேகமானவற்றின் அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் அரசாங்கம் ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை, அவை செயற்பட்ட காலம், அவற்றுக்கான செலவு போன்ற விபரங்களை நாடாளுமன்றத்திற்கு அறிவித்தது.

இவற்றின் அறிக்கைகளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டுமென அநுர திஸாநாயக்க எம்.பி, கேட்ட போதும் அவ்வாறு சமர்ப்பிக்க வேண்டுமென சட்ட ஏற்பாடு இல்லையென அரசாங்கத்தின் பிரதான அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# நாட்டின் தேசியபாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு முன்னொரு போதும் இல்லாத வகையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி தயாரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் ஆரம்பமான பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், சௌபாக்கியம் கைக்கு எட்டிய தூரத்தில் தென்படுகின்றது.

சமாதானத்தையும், பாதுகாப்பையும் எவ்வாறு நிலைநாட்டுவது என்பது குறித்த அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் நோக்கிலேயே இந்த மாநாடு நடத்தப்படுகின்றது.

பாதுகாப்பு, சௌபாக்கியம் மற்றும் அபிவிருத்தி ஆகியன ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய விடயங்களாகும்.

இந்த விடயத்தை கருத்திற் கொண்டே நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (இ)




# இன்றைய இராசி பலன்

21.08.2014

(ஆவணி 05, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

ஏகாதசி பிற்பகல் 1.06 மணிவரை

திருவாதிரை முன்னிரவு 9.29 மணிவரை

இராகுகலம் 1.35 - 3.05 மணிவரை

சுபநேரம் 7.35 - 9.05 மணிவரை

ஏகாதசி விரதம்

வளவன்

**மேடம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், அந்நியர் சந்திப்புண்டு.

**இடபம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மிதுனம்:** நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், ஆழ்ந்த சிந்தையுண்டு, சயனசுகமுண்டு, பெரியமனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனை பிராத்திப்பீர்கள், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்துசேரலாம், வருமானம் அதிகரிக்கும், உறவினர்களின் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**துலாம்:** தடைகளை தகர்த்து தன்னிறைவு காணும் நாள், எதிர்பாராத சம்பவங்கள் நடைபெறலாம், விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேருவர், புதிய திட்டங்கள் கைகூடும்.

**விருச்சிகம்:** அனுசரித்து செல்வதன் மூலம் ஆதாயம் பெறுவீர்கள், எதையும் யோசித்து செய்வது நல்லது, வேலைச்சுமை கூடும், எடுத்த [illegible] பிரயாசை எடுக்கவேண்டிய நாள்.

**தனுசு:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், கௌரவமான நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், தொழில் முன்னேற்றத்திற்கு பெண்வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.


**கும்பம்:** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமை அடைவீர்கள், புதிய முதலீடுகள் செய்வது பற்றி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மீனம்:** உதவி செய்தவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், வாகன சுகமுண்டு, பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் கண்ணீர் இலங்கையின் கர்வம்

## கலைஞர் கருணாநிதி அறிக்கை



இந்தியாவின் கண்ணீர், இலங்கையின் கர்வம் என்ற தலைப்பில் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் கலைஞர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை .கேள்வி பதில் வடிவிலான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கேள்வி :- இலங்கையிலே சிறைப்பட்டிருந்த மீனவர்களையெல்லாம் விடுவிக்க இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்த"போதிலும், இலங்கை கடற்றொழில் அமைச்சர், தமிழக மீனவர் படகுகளை விடுவிக்க முடியாது என்று தெரிவித்திருக்கிறாரே?

கலைஞர் :- இலங்கை அரசு இப்படியெல்லாம் மாற்றி மாற்றிப் பேசி இந்திய அரசுக்கு விளையாட்டு காட்டிக் கொண்டிருக்கிறது. ஏதோ தமிழக மீனவர்கள்பால் அக்கறை உள்ளவரைப் போலவும் இந்திய சுதந்திரத்தின் மீது மிகுந்த மரியாதை கொண்டிருப்பவரைப் போலவும் காட்டிக் கொள்ள, இலங்கை ஜனாதிபதி மீனவர்களை விடுவிப்பதாக அறிவிக்கிறார். ஆனால் அந்த நாட்டின் கடற்றொழில் அமைச்சர் திட்டவட்டமாக, தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிக்க முடியாது என்று அறிவித்திருக்கிறார்.

இலங்கையிடம் இவ்வாறு 62 படகுகள் சிக்கியிருக்கின்றன. அந்தப் படகுகள் இல்லாமல் தமிழக மீனவர்கள் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையான தங்கள் தொழிலினை நடத்த முடியாது. செய்தியாளர்கள், இலங்கை அமைச்சரிடம், இந்திய மீனவர்களின் விசைப படகுகள் விடுவிக்கப்படுமா? என்று கேட்டதற்கு இந்திய மீனவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட 62 படகுகளை விடுவிக்கும் பேச்சுக்கே இடமில்லை என்று இரக்கமின்றித் தெரிவித்திருக்கிறார்.

அந்த விசைப்படகுகளை விடுவிக்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் 24 ஆவது நாளாக தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

மத்திய அரசின் சார்பில், அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் இந்தப் பிரச்சினை பற்றி மீனவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார். ஆனால் தமிழக அரசு? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (இ)


# தயாளு அம்மாளுக்கு டில்லி நீதிமன்று ஜாமீன்



2ஜி அலைகற்றை ஒதுக்கீட்டில் நடைபெற்றதாக கூறப்படும் முறைகேடுகள் தொடர்பான வழக்கில் அமலாக்கத் துறை தாக்கல் செய்திருந்த குற்றப்பத்திரிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியின் மனைவி தயாளு அம்மாளுக்கு ஜாமீன் வழங்கி டில்லி நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

83 வயதான தயாளு அம்மாளுக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் அவரை வழக்கிலிருந்த முழுவதுமாக விடுவிக்க கோரிய மனுவை சிறப்பு நீதிபதி ஒ.பி. சையினி தள்ளுபடி செய்தார். (இ)

# இலங்கைக்கு ஏன் சென்றார் சுப்பிரமணியசுவாமி-தேசிகன்



பா.ஜ.க. தலைவர் சுப்பிரமணிய சுவாமி எதற்காக இலங்கை சென்றார். எந்த அதிகாரித்தின் பேரில், அந்நாட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார் என விளக்கம அளிக்குமாறு மத்திய அரசுக்கு தமிழக காங்கிரஸ் தலைவர் பி.எஸ். ஞான தேசிகன் கோரிக்கை விடுத் துள்ளார.

காங்கிரஸ் தலைவர் ஜி.கே. மூப்பனார் பிறந்தநாள் விழா நேற்று சென்னை சத்தியமூர்த்தி பவனில் கடைப்பிடிக்கப்பட்டது. இதனையொட்டி, பத்திரிகையாளர் சந்திப்பும் நடைபெற்றது.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில், பா.ஜ.க.அரசு இலங்கை தமிழர மறுவாழ்வுக்கு நடவடிக்கை எடுக்கும என கூறியிருப்பது மகிழ்ச் சியளிக்கிறது. ஆனால், பா.ஜ.க. தலைவர சுப்பிரமணிய சுவாமி எதற்காக இலங்கை சென்றார். எந்த அதிகாரித்தின் பேரில், அந்நாட்டு ஜனாதிபதி மஹிந்தவை சந்தித்தார் என்பது குறிதது மத்திய அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என கூறினார். (இ)

# கச்சதீவை மீட்கும் வழக்கு ஒத்திவைப்பு

கச்சதீவை மீட்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு விசாரணை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கச்சதீவை மீட்கக்கோரி திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில், நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பில் தமிழக வருவாய்த்துறை ஏற்கனவே தொடர்ந்த வழக்கையும், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தொடர்ந்த வழக்கையும் இணைத்து விசாரிக்குமாறு நீதிமன்றத்தினால் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இதனையடுத்தே இந்த வழக்கு விசாரணை திகதி குறிப்பிடாமல் உச்சநீதிமன்றத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ)

# தலைமன்னார் வர முயற்சித்த இலங்கையர் தமிழகத்தில் கைது

(இராமேஸ்வரம்)

தலைமன்னாருக்கு சட்டவிரோதமாக செல்ல முயற்சித்த இலங்கைத் தமிழர் தமிழகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழகத்துக்கு வந்திருந்த இலங்கை அகதி ஒருவரை படகு ஒன்றின் மூலம் தலைமன்னாருக்கு அழைத்துச்செல்ல முயற்சிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ்ர் ஒருவரும் மற்றுமொருவரும் இலங்கை தமிழ் அகதி ஒருவரை சட்டவிரோதமாக அழைத்துச்செல்ல முயன்றுள்ளனர்.

வவுனியாவை சேர்ந்த 54 வயதான பிரான்ஸிஸ் என்பவரே தமது நண்பர்களை சந்திப்பதற்காக தலைமன்னாருக்கு செல்ல முயற்சித்துள்ளார்.

அவரை படகு மூலம் அழைத்து செல்வதற்காக மண்டபம் முகாமில் இருந்த சண்முகம் என்பவர் 40 ஆயிரம் ரூபா பெற்றுக் கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் அவரை படகு மூலம் அழைத்துச்சென்று நடுக்கடலில் உள்ளூர் மீனவர்களிடம் ஒப்படைத்து விட்டு குறித்த படகுக்காரர் தமிழகம் திரும்பியுள்ளார்.

இந்தநிலையில் உள்ளூர் மீனவர்கள், பிரான்ஸிஸ்ஸை தலைமன்னாருக்கு அழைத்து செல்லாமல் மீண்டும் கோடியக்கரை கரையோரத்துக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளனர்.

இதனையடுத்து அவரை கைது செய்த தமிழக பொலிஸார் விசாரணையின் பின்னர், படகு உரிமையாளரையும் இலங்கை தமிழ் அகதியையும் கைது செய்தனர்.

பிரான்ஸிஸ் என்ற இலங்கையர் ஏற்கெனவே 2005 ஆம் ஆண்டு பிரான்ஸ்"க்கு சென்ற நிலையில் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னரே மும்பாயின் ஊடாக சென்னைக்கு வந்துள்ளார் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (இ)

# பொன்சேகாவின் முன்னாள் செயலாளருக்கு பிடியாணை



(கொழும்பு)

ஜனநாயக்கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத்தளபதியுமான சரத் பொன்சேகாவின் முன்னாள் செயலாளர் ஹரிபிரய டி சில்வாவிற்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய வீரர்களுக்கு பாதுகாப்பளித்து அவர்களை, அரச விரோத செயற்பாடுகளுக்காக பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் பிரசன்னமாய் இருக்காததை அடுத்தே நீதவான் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

ஜனநாயக்கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத்தளபதியுமான சரத் பொனசேகா மற்றும் அவருடைய முன்னாள் செயலாளர் ஹரிபிரய டி சில்வா ஆகிய இருவருக்கு எதிராகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெறுகின்றது.

நேற்றைய விசாரணையின் போது ஹரிபிரய டி சில்வா சமுகமளிக்காமையை அடுத்தே நீதவான் ரோஹினி வல்கம மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

பொன்சேகாவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சாலிய பீரிஸ், தனது கட்சிக்காரர் சுகவீனமடைந்துள்ளதாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தார். இதனையடுத்து வழக்கை செப்டெம்பர் 4 ஆம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்தார். (இ)





பிரபல பொருளியல் ஆசானும் தமிழ்த் தேசிய அரசியலின் தீவிர செயற்பாட்டாளரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் தலைவருமான சி.வரதராஜன் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் வட மாகாண முதலமைச்சர் அஞ்சலி செலுத்துவதையும், அவரது இறுதி ஊர்வலத்தையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TCT Multi Trade Centre
## நிஜம் நிஜம் நிஜம்

*30.08.2014 வரை நல்லூர் உற்சவ காலத்தினை முன்னிட்டு ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம் வழங்கும் வியாபார சலுகைகள்!!!*

✛ Maam, Munchee, Little lion, Master, Luckyland , Maliban ஆகிய பிஸ்கட் வகைகள்

✛ பேபி சோப், சோப் வகைகள், Cleaning பொருட்கள், சலவைத்தூள் வகைகள்

✛ Delmege Soya, Ruhunu Soya, Lanka Soya, Prima Noodles வகைகள், தேயிலை வகைகள், சமபோசா

✛ குளிர்பான வகைகள் (Smak, Kist),(Orange barley , Lemonade) சோடா வகைகள்,

✛ Oats வகைகள், Chocolate வகைகள்

✛ Senitany Napkin வகைகள்

உட்பட 90 வகையான பொருட்களுக்கு இலவச இணைப்புக்கள்

✛ மீன்ரின் வகைகள், Ceylonta Tea வகைகள்

✛ Fortune,Tastyy எண்ணெய் வகைகள், MD Jam வகைகள்

✛ Pepsi, Mirinda, Fanta, Necto , Barly, 7up ஆகிய சோடா வகைகள் Sun quick Cordial வகைகள் தண்ணீர் போத்தல் வகைகள்

✛ குழந்தைகளுக்கான Soft Love Baby Diaper, Pampers Baby Diaper, Eco Plus Serviette Tissue

✛ Protinex, Nestomolt, Comfort, Fair & Handsome, Garnier Hair Dye

இவற்றுடன் 80 பொருட்கள் எங்கும் இல்லாதவாறு விசேட விலைகுறைப்பு செய்யப்பட்டுள்ளது

இவை தவிர 100 இற்கு மேற்பட்ட பொருட்கள் தொடர்ச்சியாக விலை குறைப்பு செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவது யாவரும் அறிந்ததே.

✛ Enfa பால்மா வகைகள் Sustagen ஆகியவற்றில் ஏதாவது ஒன்றினை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு நாளாந்த அதிஷ்டம்

✛ ரூபா 10658/- பெறுமதியான Gass, Empty, Regulator, Gass Cooker ஆகியவற்றினை ரூபா 9700/- இற்கு கொள்வனவு செய்யும் வசதி

✛ Philips மின்குமிழ் வகைகளில் ஏதேனும் ஒரு மின்குமிழ் கொள்வனவு செய்து 100 ரூபா பெறுமதியான அன்பளிப்பு சீட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்

✛ Osram மின்குமிழ் ஒன்றினை கொள்வனவு செய்து CFL மின்குமிழ் அல்லது குமிழ் மின்குமிழ் ஆகியவற்றை உடனடியாக வெல்லும் வாய்ப்பு இத்துடன் மாத இறுதி *குலுக்கலில்* துவிச்சக்கர வண்டி ஒன்றினை வெல்லும் வாய்ப்பு

வெளிநாட்டிலிருந்து தாய் மண்ணை தரிசிக்க வந்துள்ள எமது உறவுகளுக்கு !!!

குழந்தைகளுக்கான உணவு வகைகள் (Baby Food)

வெளிநாட்டு உணவு வகைகளான Tulip, John West, Bornholms,Bon Appetit என்பவற்றுடன் மேலும் பல பொருட்களை எம்மிடம் பெற்றுக் கொள்ள முடியும்

மேலும் எமது வாடிக்கையாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான Child & Mother Care Unit புதிதாக ஸ்தாபிக்கப்பட்டு புதுப் பொலிவுடன் காணப்படுகின்றது.

உங்கள் ரிசிரிக்கு உடன் விரைந்து சலுகை மழையில் நனையுங்கள்

நிபந்தனை : கையிருப்பு உள்ளவரை மட்டுமே

***"எமது வாடிக்கையாளர் உச்ச பயன்பாட்டை பெறுவதற்கு எந்த ஒரு நியாயமான வியாபார போட்டியினையும் நாம் எதிர் கொள்ள தயாராகவுள்ளோம்"***

***அறப்பணியே முதல் பணி*** (சி/8250)

**ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்**
**527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**தொ.பே. இல: 021-222-8025/ 021-7451895/ 0777511285**


# பொலிஸ் உத்தியோகத்தர் இருவர் விபத்தில் சிக்கினர்

யாழ். பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் இருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விபத்தொன்றில் படுகாயமடைந்ததுடன் அவர்களில் ஒருவர் கோமா நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய பொலஸார் தெரிவித்தனர்.

கந்தசாமி கேதாரன் (வயது 26), நலின் பிரதீபன் (வயது 27) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்புத்துறைப் பகுதிக்கு விசாரணைக்காக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது நாய் குறுக்காக ஓடியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ)


## வாடகைக்கு உண்டு

வேம்படி வீதி, யாழ்ப்பாணம் எனும் இடத்தில் மேல்மாடி இரண்டு அறைகள், சமையலறை, இணைந்த குளியலறை மற்றும் மலசல கூட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-021 222 6836, 077 8999716 (சி-8239)

## JAFFNA ACADEMY & SCHOOL OF TECHNOLOGY
## ST.JOHN'S COLLEGE

க.பொ.த [உ/த] – இரண்டாம்,மூன்றாந் தடவைகள்
தமிழ் மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றும்
மாணவர்களுக்கான [இருபாலருக்கும்]
கணித, உயிரியல் பிரிவுகள் ஆரம்பம்.

**வகுப்புக்கள் ஆரம்பம் – 2014.09.10**
**புதன்கிழமை மு.ப 8.30 மணி முதல் 12.30 வரை**

குறிப்பு:– ◆ வெளி மாவட்ட மாணவர்களுக்கு விடுதி வசதிகள் வழங்கப்படும்.

◆ விண்ணப்ப படிவங்களை இல.446,பிரதான வீதியிலுள்ள அக்கடமி காரியாலயத்திலோ அல்லது சென்.ஜோன்ஸ் கல்லூரி காரியாலயத்திலோ 2014.08.25 முதல் காலை – 9.00 மணி முதல் பி.ப – 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாள் 2014.09.05 வெள்ளிக் கிழமை பி.ப 3.00 மணிவரை.**

Principal
St.John's College - Jaffna

C–8249

Director
Jaffna Academy & School of Technology

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: 6 ¾ செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: MBBS, MD / வைத்தியர்<br>தொ.இ: B/1743 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: 47 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, CIMA - Following<br>தொ.இ: G/2604 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: 26 ¼<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / சொந்த வேலை<br>தொ.இ: B/1745 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 54 செவ் 8 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2605 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 61 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSc, MSc / குடிவரவு உத்தியோகத்தர்<br>தொ.இ: B/1747 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 20 சூரி செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/Lஎதிர்பார்ப்பு: பெண் விவாகரத்தானவர், ஒரு பெண் பிள்ளை உடையவர்.<br>தொ.இ: G/2612 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 39 செவ் 8 இல்<br>உயரம்: 5'9"தகைமை/தொழில்: BA / நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>தொ.இ: B/1748 | பிறப்பு: 1970 கிறிஸ்தவம்(RC)<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: O/L / அரச உத்தியோகம்<br>தொ.இ: G/2613 |

## கல்யாண மாலை
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(... கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளை அடுத்து முஸ்லிம் தீவிரவாதக்குழுக்கள்

## கண்காணிப்பு இடம்பெறுகிறது என்கிறார் பாதுகாப்பு செயலர்

முஸ்லிம் தீவிரவாதம் குறித்து கண்காணிக்கப்படவுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தப்பாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னர சில குழுக்கள் இயங்கத் தொடங்கியுள்ளதாகவும் அவை குறித்து கண்காணிக்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் சிங்கள தமிழ் மக்கள் மட்டுமன்றி முஸலிம்களும் பாதிக்கப்பட்டிருந்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அழுத்தங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் சில தற்பாதுகாப்பு குழுக்கள் உருவாக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான சில குழுக்கள் சர்வதேச இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேணி வருவதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இனவாத சிந்தனைகள் அதிகரித்துள்ளதாகவும் இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டுமெனவும் அவர தெரிவித்துள்ளார்.

பரச்சினைகளுக்கு உரிய முறையில் தீர்வு காணப்படாவிட்டால் மீளவும் இன முரண்பாடுகள் வெடிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் அடிப்படைவாத கொள்கைகளை முன்னெடுத்த சில குழுக்கள் மீள ஒருங்கிணைவதில் நாட்டம் காட்டி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாணவர்களை கிளர்ச்சியில் ஈடுபடுத்த சிலர் முயற்சித்து வருவதாகவும் இவ்வாறான பிரச்சினைகளின் காரணமாக தொடர்ந்தும் தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் நிலவி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் குழுக்கள் சில சர்வதேச இஸ்லாமிய அமைப்புகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

அமெரிக்காவின் சென்டர் போர் கொம்பிளெக்ஸ் ஒப்பரேசன்ஸ் என்ற அமைப்பிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இத்தகைய விடயங்களை அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இனக்குழுக்களிடையே மதவாதம் தலைதூக்குவதை தடுப்பதே யுத்தத்திற்கு பிந்திய இலங்கையின் கரிசனைக்குரிய விடயமாக உள்ளது. அதற்கு தீர்வு காணாவிட்டால் எதிர் காலத்தில் இன ரீதியான பதற்ற நிலை தலைதூக்கலாம்.

யுத்த காலத்தில் விடுதலைப்புலிகளால் முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டனர், இதன் பின்னர் அவர்களை தங்களது பாதுகாப்பை தாங்களே உறுதிசெய்யத் தொடங்கினர்,

விடுதலைப்புலிகளின் தோல்விக்கு பின்னர் இந்த குழுக்கள் தற்பாதுகாப்பு என்ற நிலையிலிருந்து விலகி சென்று செயற்படத் தொடங்கியுள்ளன. சர்வதேச இஸ்லாமிய அமைப்புகளுடன் இவர்கள் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது, இதனை உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும்.

பயங்கரவாதத்திற்கு அப்பால் இலங்கை கடந்த கால கிளர்ச்சிகளில் ஈடுபட்ட அமைப்புகளின் ஆபத்தையும் எதிர்நோக்குகிறது. அந்த அமைப்புகள் இலங்கைக்குள் தங்களை மறுபடி ஒன்றிணைத்து தமது இடதுசாரிகொள்கையை முன்னெடுக்க முயல்வதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இவர்கள் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய முகவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதாகவும் தெரிய வருகின்றது என பாதுகாப்பு செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# ஆணைக்குழு முன்வைத்த சட்டப்பிரச்சினைகள் என்ன?

## ரணில் கேள்வி

(கொழும்பு)

காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் தலைவர் ஜனாதிபதிக்கு முன் வைத்த நெருக்கடியான சட்டப் பிரச்சினைகள் என்னவென்பதை அரசாங்கம் இச்சபையில் அறிவிக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபையில் கேள்வியெழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 23 இன் கீழ் இரண்டில் விசேட கேள்வியொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அத்தோடு சட்டமாஅதிபரின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கும் அக்கடிதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதா?

அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதா என்ற கேள்விகளை எதிர்க்கட்சித் தலைவர் சபையில் முன்வைத்தார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி 'வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 200 |
| தக்காளி | 60 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 |
| கோவா | 80 | 60 | 80 |
| கரட் | 80 | 100 | 120 |
| பூசணி | 20 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 60 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 70 | 120 |
| பயற்றங்காய் | 40 | 80 | 60 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 80 | 130 | 120 |
| முருங்கைக்காய் | 20 | 30 | 60 |
| போஞ்சி | 100 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 80 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like (112)


டொறின் மன்மதநாயகம்




டியேமௌலி ஏகாம்பரநாதன்




தர்ஷ் தர்ஷன்




ஜனுஷன் ஜெயபாலசிங்கம்




சச்சி சங்கீத்




ஜது ஜது



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் எபோலா இல்லவே இல்லையாம்

(கொழும்பு)

உலகை ஆட்டிப்படைத்து கொண்டிருக்கின்ற எபோலா வைரஸின் தாக்கம் இலங்கையில் இல்லை என்று பொதுச் சுகாதார பிரதி பணிப்பாளர் நாயகம் சரத் அமுனுகம தெரிவித்தார்.

கண்டி. ரிக்கிலகஸ் கடையைச் சேரந்த பெண்ணொருவர் எபோலா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி மரணமடைந்துள்ளதாக சந்தேகிக கப்படுகின்ற நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட நிலையிலேயே அந்த பெண் உயிரிழந்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அந்த பெண்ணின் சடலத்திலிருந்து எடுக்கப்பட்ட இரத்த மாதிரிகள் மற்றும் உடலுறுப்புகள் என்பன பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில் மரணமடைந்த அந்த பெண், சில வாரங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு சென்று திரும்பிய நிலையிலேயே திடீரென மரணமடைந்துள்ளார்.

அவருடைய சடலம் தாங்கிய சவப்பெட்டி சீல் வைக்கப்பட்ட நிலையில் சுமார் எட்டு அடி குழி தோண்டி புதைக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (இ)

# அச்சுவேலி கைத்தொழில்பேட்டை 27 ஆம் திகதி அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

மஹிந்த சிந்தனை தேசிய அபிவிருத்தி திட்டத்திற்கு அமைவாக அச்சுவேலி கைத்தொழில் பேட்டையானது வடமாகாணத்தினை குறிப்பாக யாழ்.மாவட்டத்தினை கைத்தொழில் மையமாக மாற்றுவதற்கு வசதிப்படுத்தும் ஒரு பாரிய முன்னெடுப்பாக கருதப்படுவதோடு அதிகளவு வாய்ப்பானதும் சாத்தியமானதுமான கைத்தொமில் துறைகளை சிறப்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் ஒரு செயற்பாடாக நோக்கப்படுகின்றது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் புனரமைக்கப்பட்டு நவீன மயப்படுத்தப்பட்ட யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த அச்சுவேலி கைத்தொழில் பேட்டையானது எதிர்வரும் 27 ஆம் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினாலும் இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சிங்ஹாவினாலும் வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்நிகழ்விற்குதலைமை தாங்குவார்.

பிரதி அமைச்சர் வீரக்குமார திசாநாயக்க, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

**கைத்தொழில் மையம்**

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையினை மீளக்கட்டியெழுப்பும் செயற்பாடுகள் இந்திய அரசின் சிறிய நன்கொடை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 225 மில்லியன் ரூபா நிதியுதவியுடனும் இலங்கை அரசின் 50 மில்லியன் ரூபா நிதியுதவியுடனும் ஆரம்பிக்கப்பட்டன.

கருத்திட்டத்தினை முகாமை செய்வதற்கு தொழில்நுட்ப அறிவுரைகளை வழங்குவதற்கும் ஐக்கிய நாடுகள் செயற்றிட்ட சேவைகள் அலுவலம் (UNOPS)நியமிக்கப்பட்டதோடு இந்திய அரசாங்கத்திற்கும் ஐக்கிய நாடுகள் செயற்றிட்ட சேவைகள் அலுவலகத்திற்கும் (UNOPS) இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் பொருளாதார அபிரிவிருத்தி அமை ச்சர் பசில் ராஜபக்ஷவினதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவினதும் இந்திய உயர்ஸ்தானிகரினதும் முன்னிலையில் கடந்த 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி கைசாத்திட்டப்பட்டது.

இந்திய உயர்ஸ்தானிகர் வை. கே.சிங்ஹா மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் சிரேஷ்ர அலுவலர்கள் ,பெறுபேறுகளை இலக்காகக் கொண்ட இந்த அபிவிருத்தி முன்னெடுப்பினை துரித கதியில் அமுல்படுத்துவதற்கு பெரிதும் ஆதரவாக இருந்ததுடன் அரச அலுவலர்களுடனும் நெருங்கிசெயற்பட்டனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமைத்துவத்திலும் முயற்சியிலும் கருத்திட்ட தயாரிப்பு அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் இந்திய நிதியுதவினைப் பெறுவது தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன என அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

# குழந்தையை தாக்கிய நபர் மனநோய் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெல்லியடி பொலிஸ பிரிவிற்குட்பட்ட இராஜ கிராமம் பகுதியில் கடந்த 9ஆம் திகதி குழந்தையொன்றை தலை கீழாகப் பிடித்து தாக்கியதுடன், மனைவியையும் கடுமையாகத் தாக்கிய குடும்பஸ்தரை தெல்லிப்பழை மனநோய் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கும்படி யாழ் சிறுவர் நீதவான் நீதிமன்ற நீதவான் கறுப்பையா ஜீவராணி நேற்று முன்தினம் செவ்வாயக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

அத்தோடு, மேற்படி சந்தேக நபரை 26ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கவும் நீதவான் இதன்போது உத்தரவிட்டார்.

மேற்படி சம்பவத்தில் இராஜேஸ்வரன் தமிழ்ச்செல்வி (வயது 27) மற்றும் அவரது குழந்தை ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேற்படி சந்தேகநபர் கடந்த 11ஆம் திகதி இராஜகிராமம் பகுதியில் வைத்து நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

**தெய்வீக இசையரங்கு**

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளம் கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய தினம் இடம்பெறவுள்ள இசையரங்கத்தில் பாடல் திருமதி குணபூஷணம் நாகராசாவும் வயலின் எஸ்.சோபிதாஸ், மிருதங்கம் ஜி.கண்ணதாஸ், முகர்சிங் என்.சதீஸ்குமார் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

**ஆன்மீக அருளுரை**

நல்லூர் முருகப்பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணிக்கு நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் சின்மயா மிஷன் யாழ். வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வழங்கப்பட்டு வருகின்றது. இன்றையதினம் தியானமும் வாழ்க்கையும்எனும் தலைப்பிலான அருளுரை இடம்பெறவுள்ளது.

**தெய்வீக கலையரங்கு**

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் தெய்வீக கலையரங்கு தினமும் மாலை 4 மணி தொடக்கம் 5.30 மணிவரை நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய நிகழ்வாக யாழ்.பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் என்.வி.எம்.நவரட்ணம், விரிவுரையாளர் என். பரந்தாமன் ஆகியோர் இணைந்து வழங்கும் பண்ணிசை நிகழ்வும் இவர்களோடு அணிசேர் கலைஞர்களாக வயலின் இராதாகிருஷ்ணனும் மிருதங்கம் கெ. கண்ணதாஸனும் வழங்கவுள்ளனர்.

அருணோதய கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் வழங்கவுள்ள நடன நிகழ்வு, இசை நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன.

**இசைப்பேருரை**

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்ற கம்பராமாயண இசைப்பேருரை தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் பிரம்மஸ்ரீ. சிவ.வை.நித்தியானந்த சர்மாவால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இன்றைய தினம் **விபீஷணன் சரணாகதி** எனும் தலைப்பிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

**இசை நிகழ்ச்சி**

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றிய ஆதரவில் பிரமகான சபையினால் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வில் பிரம்ம ஸ்ரீ எ.ஜி. சுவாமிநாத சர்மா வழங்கவுள்ள வயலின் இசை இடம்பெறவுள்ளது.


**ஆன்மீக சொற்பொழிவு**

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சொற்பொழிவும் கலை நிகழ்வும் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.


இன்றைய தினம் மு.நித்தியானந்தன் வழங்கும் ஆலயத் தொண்டும் வழிபாடும் எனும் தலைப்பிலான சொற்பொழிவும் கோண்டாவில் அறநெறிப் பாடசாலை, பெரியபுலம் வடகேசரிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இன்றை விசேட நிகழ்வாக திருமதி புஷ்பமலர் யோகராஜனின் மாணவர்கள் வழங்கும் இன்னிசை கச்சேரி இடம் பெறவுள்ளது.

# நல்லூரான் திருவடிக்கு இன்று இருபத்தொறாம் திருவிழா



## சித்தி முத்தி மைத்துணா



சீர் பெருகு சித்தி முத்தி மைத்துணா
ஆறுபடை வீடு டையோனே
அவலம் தீர்ப்பாய் ஒரு படை மூலம்
கவலை விட்டு விடுவோம்
உன் வேலின் பாதம் பிடிப்போம்
செம்மொழியாம் தமிழால் உன்புகழ்
வாயார பாடிடுவோம் ஆடிடுவோம்
வாராயோ வடிவேல் முருகா!

**கலைஞர் ம.கணேசலிங்கம்(மயிலிட்டி)**

## மயிலோனே வா!



நல்லூரின்நாயகனே தினம்
நாம் கையேந்தும்முருகா
நிதம் உன் தலத்தில் கூடும் அடியாக்கு
நீ அருள்வாய் நல்வரங்கள் கந்தா
இருபத் தைந்து நாள் பெருவிழா
ஈந்தருள் அருளதை வழங்கிடுவாய் முருகா
உன் அடிமை நான் சோதனைகள் நீங்கி
ஊரெல்லாம் உன் புகழ்பாட மயிலோனோ வா!

**க.சுவஸ்திகா(கரவெட்டி)**

## ஞான ஒளி வள்ளல் கந்தன்



பொருளுடையோர் மட்டுமன்றி ஏதிலியும் இரந்திட
பொருந்திய மனத்துடன் புகழ்பாடி தொழுது தினம்
காவல்தனை தாம் வேண்டி காதலாகி உருகி
காவுகின்றமனச்சுமையை சேர்த்தோம் உம் திருவடியில்
திருவடிக்கு கண்களுண்டு ஞானமுண்டு அருள் வழங்கும்
திருவுமுண்டுஞானஒளியுண்டுவள்ளலேவணங்குகின்றோம்

**தமிழமுதக்குருமணி**
**சிவஸ்ரீ க.ஜெயராமக்குருக்கள்**

## நல்லூர் கந்தன்

நல்லூர் பதிதனிலே வீற்றிருக்கும் நல்லூர் பெருமானே
உன் கருணையோ கருணை
உன் திருவடியை வணங்கினால்
துன்பமெல்லாம் தீரும்
உன்னை கந்தன் என்று பெயரால் அழைக்கவே
என் உள்ளம் குளிருதையா
உன்பெயர் சொல்லவே என்
மனம் இன்பம் கொள்ளுதடா
உன்னைத் தேடி வருவோர்க்கெல்லாம்
அருள் புரியும் நல்லூர் கந்தனே

**செ.டர்சாயினி(யா/உரு.சை.த.வி)**



## நல்லைக் கந்தன் நனிவெண்பா

உறங்குகின்ற வேளையிலு முன்நாமம் நெஞ்சினிலே
மறவாத சிறியேனின் மனமிருந்து உறவாட
வந்திடுவா யையா வளமேவும் நல்லை நகர்ச்
சுந்தரனே நீயே துணை

**கலாபூஷணம் சந்தக் கவிஞர்**
**நவ.பாலகோபால்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




...தமனகன் உடனே திரும்பிப் போய்ச் சஞ்சீவனைப் பார்த்து, இகழ்ச்சியாக கொடிய எருதே! வா இங்கே! உடம்பில் பயம் என்பதே இல்லாமல்

நண்பரே நீங்கள் கருணையுடையவராகவும் வாக்கு சாதுர்யமுள்ளவராகவும் காணப்படுகிறீர்.

என்னை அவரிடம அழைத்துச் செல்

ஒரு பழமொழி கூறுவது போல்:

பூமிக்கு ஒரு எல்லை உண்டு. கடலுக்கும் மலைக்கும் கூட எல்லைகள் உண்டு. ஆனால், அரசனின் எண்ணங்

இதைக்கேட்டதும் பயந்து ஆகா இப்பொழுதுதான் புரிகிறது. சிவபெருமான் அருள் இல்லாவிடில் மனித வாசனையே இல்லாத இக்காட்டில்

# நரியும் போர் முரசும்!

ஏன் இப்படி அடிக்கடி கத்துகிறாய்? என்று என் எஜமானர் பிங்களகன் உன்னைக் கோபிக்கிறார் என்று கூறியது.

நண்பனே! யார் அந்தப் பிங்களகன்? என்று கேட்டது சஞ்சீவகன்.

தமனகனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது.


என்ன! எங்கள் எஜமானர் பிங்களகனை உனக்குத் தெரியாதா? என்று கூறிவிட்டு மிகுந்த கோபத்தோடு அது தன் பேச்சைத் தொடர்ந்தது.

உனக்கு ஏற்படப்போகும் கதியிலிருந்து அது யார் என்று நீ தெரிந்து கொள்வாய்; சகல மிருகங்களும் அவரைச் சுற்றி நின்று வணங்குகின்றன.

மிகுந்த வலிமையோடு இந்தக் காட்டுக்கும் மிருகங்களுக்கும் அரசராக இருந்து அவர் ஆட்சி செய்கிறார். பிங்களகன் என்ற பெயருடைய சிங்கம் தான் அவர். அகன்று விரிந்துள்ள அந்த ஆலமரத்தின் அடியில்தான் அவர் வசிக்கிறார் என்று வர்ணித்தது தமனகன்.

தமனகன் கூறியதைக் கேட்டதும், நான் இத்தோடு செத்தேன் என்று சஞ்சீவகன் பயந்து நடுநடுங்கியது.

பின்னர் மிகுந்த கவலையோடு



லுங்கள். அவரிடம் நான் அடைக்கலம் வேண்டுகிறேன் என்றது.

அதுதான் சரி! அதுவே நியாயம்!

கள் எப்படிப்பட்டவை, அவை யாரைப் பற்றியவை, எதைப் பற்றியவை என்று கூறுவதற்கு எல்லையே கிடையாது.

புரி மேந்தபடியே அவர் கத்திக் கொண்டு திரியமாட்டார். சரி நீ அவரிடம் என்ன சொன்னய்?

ஆகையால் முதலில் நான் சென்று அவரிடம் நீ எப்பொழுது வரலாம் என்பதைக் கேட்டு வருகிறேன்.

அதுவரை நீ இங்கேயே இரு என்றது தமனகன். பிறகு, தமனகன் பிங்களகனிடம் சென்று அரசே! அது மண்ணுலகத்தைச் சேர்ந்த மிருகம் அல்ல! சிவபெருமானுக்கு வாகனமாக அது இருந்திருக்கிறது.

அதை நான் விசாரித்தபோது சிவபொருமான் என்னிடம் மகிழ்ச்சியடைந்து புல் மேய்வதற்காக யமுனை நதிக்கரைக்கு என்னை அனுப்பியுள்ளார்.

சுருக்கமாகச் சொன்னால் நான் விளையாடுவதற்காக இந்தக் காட்டையே எனக்குச் சிவபெருமான் வழங்கியுள்ளார் என்று கூறுகிறது என்றது.

பிங்களகன்

அரசே! நான் சொன்னேன். இந்தக் காடு சண்டிதேவியின் வாகனமான பிங்களகனுடையது.

ஆகையால், அவருடைய விருந்தினராக நீங்கள் வந்திருக்கிறீர்கள்.

நீங்கள் சகோதர வாஞ்சையோடு அவருடன் இருந்து உண்டு, குடித்து வேலை செய்து விளையாடி ஒரே இடத்தில் காலம் கழிக்க வேண்டும் என்று தெரிவித்தேன்.

அவரும் அதற்குச் சம்மதித்து தங்களிடம் அடைக்கலம் கோர வேண்டும் என்று சொன்னார்.

இனி அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டியவர் தாங்களே என்றது தமனகன்.

பிங்களகன் மிகுந்த மகிழ்ச்சியோடு ரொம்ப நல்லது. அருமை நண்பனே! நீ புத்திசாலி. என்னுடைய மன நிலையை அறிந்து அவருடன் பேசியிருக்கிறாயே.

அவருக்கு அடைக்கலம் அளிக்கிறேன். ஆனால், என் விடயத்தில் அவரிடம் ஒரு உறுதிமொழி வாங்கிக் கொள். அதன்பிறகு விரைவில் அவரைக் கூட்டிக் கொண்டு வா.

நேர்மையோடு நடப்பது. உறுதியோடு இருப்பது, சோதனைகளில் தேறுவது. பளபளப்பாகப் பிரகாசிப்பது ஆகிய நான்கு பண்புகளும் உடைய அமைச்சர்களே அரசாட்சி நடத்தத் தகுதி உடையவர்கள்.

வீட்டுக்குத் தூண்கள் எப்படியோ அப்படியே அமைச்சர்கள் அரசுக்கும் தூண்கள் போன்றவர்கள்.........
..................

(தொடரும்)




- 1770 - கப்டன் ஜேம்ஸ் குக் கிழக்கு அவுஸ்திரேலியாவில தரையிறங்கி அதனை பெரிய பிரித்தானியாவுக்குச் சொந்தமாக்கி அதற்கு நியூசவுத் வேல்ஸ எனப் பெயரிட்டான்.
- 1821 - ஜார்விஸ் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
- 1831 - கறுப்பின அடிமைகளுக்குத் தலைமை தாங்கி நாடட்ர்னர் கிளர்ச்சியைத் தொடங்கினார்.
- 1842 - டாஸ்மானியாவின் தலைநகர் ஹோபார்ட் நகரம அமைக்கப்பட்டது.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப போர்: கூட்டமைப்புத் தீவிரவாதிகளின் தாக்குதலில் கன்சாஸ் மாநிலத்தில் லோரன்ஸ் நகரம் அழிக்கப்பட்டது.
- 1911 - லியனார்டோ டாவின்சியின் ஓவியமான மோனலிசா பாரிசின் லூவர் அருங்காட்சியகத்திலிருந்து திருடப்பட்டது.
- 1920 - சேர் ஏ. கனகசபை இலங்கையின் அரசியல்நிர்ணய சபைக்கு தமிழ்ப் பிரதிநிதியாகத் தெரிவானார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஸ்டாலின் கிராட் போர ஆரம்பமானது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சாலமன் தீவுகள் தொடர் சமர் முடிவடைந்தது.
- 1959 - ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் 50 ஆவது மாநிலமாக இணைக்கப்பட்டது.
- 1968 - சோவியத் தலைமையிலான வார்சா ஒப்பந்த நாடுகளின் படையினர் செக்கோஸ்லொவாக்கியாவைக் கைப்பற்றின.
- 1969 - ஆஸ்திரேலியனான மைக்கல் டெனிஸ் ரொஹான என்பவன் ஜெருசலேமின் அல் அக்சா மசூதிக்குத் தீ வைத்தான்.
- 1991 - லாத்வியா சோவியத் ஒன்றியத்திடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1991 - சோவியத் தலைவர் மிக்கைல் கொர்பச்சோவ் மீதான ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி தோல்வியடைந்தது.
- 2007 - சூறாவளி டீன் மெக்சிகோவை 165 மைல்/மணி வேகத்தில் தாக்குதலை ஆரம்பித்தது.

பிறப்புகள்

- 1906 - ப. ஜீவானந்தம், பொதுவுடமைவாதி (இ. 1963)
- 1917 - லியோனிடு ஹர்விக்ஸ், ரஷ்யப் பொருளியல் அறிஞர் (இ. 2008)
- 1936 - வில்ட் சேம்பர்லென், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர் (இ. 1999)
- 1986 - உசேன் போல்ட், ஜமேக்காவைச் சேர்ந்த தடகள ஆட்டக்காரர்


இறப்புகள்

- 1901 - அடோல்ஃப் ஃபிக், தொடு வில்லையைக் கண்டுபிடித்தவர் (பி. 1829)
- 1940 - லியோன் ட்ரொட்ஸ்கி, ரஷ்யப் புரட்சியாளர் (பி. 1879)
- 1995 - சுப்பிரமணியன் சந்திரசேகர், இந்திய வானியல இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1910)
- 2006 - உஸ்தாத் பிஸ்மில்லாஹ் கான், இந்திய ஷெனாய் இசைக்கலைஞர் (பி. 1916)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

# 17.08.2014-16.09.2014



## மிதுனம்

**மிருகசீரிடம் 3,4 பாதங்க்ள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**அன்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து அனைவர் மனதிலும் இடம்பிடிக்கும் மிதுன இராசி நேயர்களே!**

**நண்பர்கள் கைகொடுத்துதவும் நேரம்!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும் விதத்தில் தெளிவாகக் கிரகங்கள் உலா வருகின்றன. பணியிலிருந்த தொய்வு அகலும். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும். ராசிநாதன் புதன் சகாய ஸ்தானாதிபதி சூரியனுடன் இணைந்திருப்பது யோகம்தான். எந்தக் காரியத்தையும் எடுத்தோம் முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள்.

குணமறிந்து நடக்காத நண்பர்களை விலக்கிவிட்டு புதியவர்களை தொழிலில் பங்குதாரர்களாக சேர்த்துக்கொள்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குருவின் பரிபூரணமான பார்வை காரணமாக ஆறாமிடம் புனிதமடைவதால் உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும்.

செவ்வாய், சனி சேர்க்கை 5 ஆம் இடத்தில் இருப்பதால் பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு மறையும். நல்ல குணத்தோடிருந்த பிள்ளைகள் நம் சொல்லுக்கு கட்டுப்படவில்லையே என்று ஒரு சிலர் கவலைப்படுவார்கள். எனவே அங்காரகனுக்கும் சனிக்கும் உரிய பரிகாரம் அவசியம் செய்வது நல்லது. குறிப்பாக 6 இற்கு அதிபதியான செவ்வாயும் 8இற்கு அதிபதியான சனியும் ஒன்றாக இணைவது விபரீத ராஜ யோகத்தை உருவாக்கும் என்பார்கள்.

எனவே, எதிர்பாராத விதத்தில் ஒருசில நன்மைகள் ஏற்பட்டாலும், மனகிலேசம் மட்டும் மாறாது. எனவே தியானம், வழிபாடு மற்றும் தெய்வீக காரியங்களில் ஈடுபாடு போன்றவற்றைக் கடைபிடிப்பதன் மூலம் மன அமைதியை வரவழைத்துக் கொள்ள இயலும். குறிப்பாக பூர்வீகச் சொத்துகள் சம்பந்தமாக இருந்த பிரச்சினை முடிவிற்கு வராமல் தாமதப்பட்டுக் கொண்டே செல்லலாம். முன் பின் தெரியாத நண்பர்களை நம்பி முதலீடு செய்ய நினைத்தால் அதில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். கவனம் செலுத்திய காரியங்களில் மட்டுமே கணிசமான வெற்றி கிடைக்கும். இதுபோன்ற அமைப்பு ஆகஸ்டு 30 ஆம் திகதி வரை இருக்கிறது.

**பொருளாதார விருத்தியை வழங்கும் புதன் பெயர்ச்சி!**

ஆகஸ்டு 26 ஆம் திகதி வரை உங்கள் ராசிநாதன் புதன் சுக ஸ்தானத்தில் சஞ்சரித்து உச்சம் பெறப்போகிறார். உச்ச புதன் உங்கள் அச்சத்தை அகற்றும். ஆரோக்கியத்தை சீராக்கும். அன்றாட வாழ்க்கையை ஜோராக்கும். செயற்பாடுகளில் இதுவரை இருந்த தடைகளும், தாமதங்களும் அகலும். தாய்வழி ஆதரவு உண்டு.

**விருப்பங்களை நிறைவேற்றும் விருச்சிகச் செவ்வாய்!**

ஆகஸ்ட் 1 ஆம் திகதி விருச்சிக ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக நல்ல மாற்றங்கள் இல்லம் தேடி வரப்போகின்றது. அதன் பார்வை பிதுர்ரார்ஜித ஸ்தானத்தில் பதிவதால் தந்தை வழிச் சொத்துகளிலிருந்த பிரச்சினை அகலும். தடைக் கற்களைப் படிக் கற்களாக மாற்றிக்கொள்வீர்கள். ஊதிய உயர்விற்காகவும், உத்தியோக உயர்விற்காகவும் விண்ணப்பித்து எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு இனிய தகவல் வந்து சேரும்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**


உங்கள் ராசிக்கு 5,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் செப்டம்பர் 1 ஆம் திகதி சிம்மத்தில் சஞ்சரிக்கப்போகிறார். சகாய ஸ்தானத்தில்-சுக்ரன் சஞ்சரிக்கும் பொழுது ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். உடன்பிறப்புகளின் இல்லங்களில் நடைபெறும் சுபகாரிய நிகழ்வுகளுக்கு கொடுத்து உதவி செய்வீர்கள். இம்மாதம் விநாயகர் மற்றும் மாருதி வழிபாடு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாத உடன்பிறப்புகளின் வழியே ஒத்துழைப்பு கிடைக்கும் மாதமாகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். உடனிருப்பவர்களால் ஏற்பட்ட கலக்கம் அகலும். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்கும் எண்ணம் மேலோங்கும். செப்டம்பர் முதல வாரத்தில் சேமிப்பு உயரும். சிக்கனத்தை விட்டு விட்டு செலவழிக்கத் தொடங்குவீர்கள். குழந்தைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கொடி கட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். கடந்த கால பிரச்சினைகள் நல்ல முடிவை எட்டும். அங்காரக வழிபாடு தங்கு, தடைகளை அகற்றும்.

# நண்பர்கள் கைகொடுத்துதவும் நேரம்

# சிவல்புரி சிங்காரம்



## கடகம்

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**மற்றவர்கள் முடிக்க முடியாத காரியத்தை மறுகணமே முடித்துக் காட்டும் கடக இராசி அன்பர்களே!**

**செவ்வாய் மாற்றம் செழிப்பான வாழ்வு தரும்!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கத்தோடு செவ்வாயும் இணைந்து அல்லல்களையும், ஆனந்தத்தையும் மாறி, மாறி இதுவரை கொடுத்து வந்திருக்கலாம். அந்த நிலை இந்த மாதத்திலிருந்து இனி மாறப் போகின்றது. அறபுதமான பலன்களை அள்ளி வழங்கும் விதத்தில் செவ்வாய் விருச்சிக ராசியல் பெயர்ச்சியாகிச் சென்று உங்கள் விருபங்களை எல்லாம் நிறைவேற்றப்போகிறார்.

அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருக்கும் பொழுது சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். இரவு பகலாக பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்குமா என்பது சந்தேகம்தான். இடம், பூமி விற்பனையால் பிரச்சினைகள் இல்லம் தேடி வரலாம். உறவினர்களால் மனக்கசப்புகளும் உருவாகலாம்.

டிசம்பர் 16 ஆம் திகதி வரை அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருக்கிறது. அது விலகுவதற்கு 3 மாதம் முன்னதாகவே உங்கள் வாழ்க்கையில் எண்ணற்ற திருப்பங்கள் ஏற்படும். இனிய சம்பவங்கள் நடைபெறுவதிலிருந்த தடை அகலும். அதே நேரத்தில் பொன், பொருள் சேர்க்கையும், புதிய பொறுப்புகளும், பதவிகளும்கூட உங்களுக்குக் கிடைக்கலாம்.

பொதுவாகவே மாதத் தொடக்கத்தில் சகோதர ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. குடும்பச் சுமை கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். இடம், பூமி வாங்கும் பொழுது பத்திரப் பதிவில் கவனம் செலுத்துங்கள். நாட்டுப்பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்போடு நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக்கொள்ள இயலும். சனிக்கிழமை தோறும் அருகம்புல் மாலை சூட்டி ஆனைமுகப் பெருமானை வழிபாடு செய்யுங்கள். அதுமட்டும் அல்லாமல் ஶ்ரீராம ஜெய மாலை சூட்டி அனுமனையும் வழிபாடு செய்யுங்கள்.

பொதுவாக சந்திரன் உங்கள் ராசிக்கு அதிபதியாக விளங்குவதால் பௌர்ணமி தோறும் கிரிவலம் வருவதன் மூலம் மகத்தான பலன்களைக் காணலாம். அருகிலிருக்கும் திருக்கோவில்கள் அடங்கியிருக்கும் மலைகளை சுற்றி வந்து நிலை உயர்ந்து வாழ வழி வகுத்துக் கொள்ளுங்கள்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஆகஸ்டு 26 ஆம் திகதி முதல் கன்னி ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். அந்த வீடு புதனுக்கு உச்ச வீடாகும். எனவே சகாய ஸ்தானாதிபதி பலம்பெறும் இந்த நேரத்தில் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவார்கள். வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும். சென்ற மாதத்தில் பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். வியக்கும் வாழ்வு தரும்

**விருச்சிக செவ்வாய்!**

செப்டம்பர் 1 ஆம் திகதி விருச்சிக ராசியில செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். யோககாரகன் செவ்வாய், பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது யோக வாய்ப்புகள் வந்து கொண்டே இருக்கும். விருந்துகளிலும், விழாக்களிலும் கலந்துகொண்டே இருப்பீர்கள். விருதுகள் உங்களைத் தேடி வரும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். கூட்டு முயற்சிகள் வந்து விலகி தனித்து இயங்க முற்படுவீர்கள். கொள்கைப் பிடிப்போடு செயற்பட்டு குடும்பப் பெரியவர்களின் வாழ்த்துக்களையும், பெற்றுக்கொள்வீர்கள். குழந்தைகளின் உதிரி வருமானங்கள் வந்து சேரும்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 1 ஆம் திகதி சிம்ம ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இது ஒரு உன்னதமான காலமாகும். உங்கள் ராசிக்கு இரண்டாம் இடத்தில் சுக்ரன் சஞ்சரிக்கும் பொழுது தனவரவு திருப்தி தரும். தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். பெண குழந்தைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். இம்மாதம் சதுர்த்தி விரதமிருந்து ஐங்கரனை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வரவும், செலவும் சமமாகும் மாதமாகும். வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். செவ்வாய் பெயர்ச்சிக்குப் பிறகு சேமிப்பு உயரும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். டி.வி. பிரிட்ச், போன்ற விலையுயர்ந்த மின்சாதனப் பொருட்களை வாங்குவதற்கான சூழ்நிலை அமையும். குழந்தைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. ஒரு சிலருக்கு உடல்நிலையில் சோர்வு ஏற்பட்டு அகலும். கடல் பயண வாய்ப்புகள் சிலருக்கு கைகூடும். செவ்வாய் தோறும் துர்க்கையை வழிபடுவது நல்லது. சனிக்கிழமை தோறும் சனிபகவானை வழிபாடு செய்வது சாலச் சிறந்தது.

# செவ்வாய் மாற்றம் செழிப்பான வாழ்வு தரும்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ். மண்டைதீவு வீதிப் புனரமைப்பில் கவனிக்கப்பட வேண்டிய சில விடயங்கள்

புவியின் மீது காணப்படும் நிலத் தோற்றத்தையும் வாழும் மக்களையும் மக்களுக்கு ஏற்டும் நன்மை தீமைகளையும் விரிவாக அறிந்து கொள்ள உதவுவது புவியியல் எனப்படும். இது பௌதீகப் புவியியல், மானிடப் புவியியல் எனும் இரு பெரும் பிரிவாக அறியப்பட்டுள்ளது. பௌதீகப் புவியிலானது தன்னுள் நிலக் கோளம், நீர்க் கோளம், வளிக்கோளம், உயிர்க்கோளம்எனும் பிரிவுகளைக்கொண்டது. இதனை இயற்கை எனவும் அழைக்கலாம்.

ஆதியில் மனித இனம் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்தது. சிந்தனை ஆற்றல் கொண்ட மனிதன் தன் தேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில் உணவு, உடை, உறையுள், போக்குவரத்து போன்ற பல்வேறு காரணிகளால் இயற்கையின் சமநிலையை அச்சுறுத்தும் வகையில் தான் செய்யும் கருமங்களைஅபிவிருத்தி என குறித்துக் கொண்டான்.

அபிவிருத்திக்கு முதற்படியாக துறைசார் வல்லுநர்கள் ஒன்று கூடி ஒரு திட்டத்தின் நன்மை, தீமைகளை ஆராய்ந்து செயல் வடிவம் கொடுக்க முனைவதை Fesibilily Study என அழைக்கப்படும்.

ஐரோப்பியர் காலத்தில் தீவக மக்களின் போக்குவரத்துச் சிரமங் களையும் இதில் தடையாக இருந்தவர்கள் பற்றியும் அகிலேஸ்வர சர்மா அவர்களின் பண்ணை கும்மி மூலம் நன்கு அறிந்து கொள்ள முடியும்.

தற்பொழுது மண்டைதீவு வீதியானது உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் துரித புனரமைப்பு செய்யப்படுகிறது. இவ் வீதி வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் ஆவணப் பதிவில் 6.40 கிலோ மீற்றர் தூரம் கொண் டது. ஆனால் கிராமத்து பெரு மக்களில் எதிர்ப்பினால் 6.25 கிலோ மீற்றர் தூரம் செப்பனிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வீதியானது 1.950 கிலோ மீற்றர் வரை மிகவும் தாழ்வானதும் ஒரு புறம் பண்ணைக் கடலையும்




மறுபுறம் இரண்டு வீதிகளுக்கு இடைப்பட்ட நீண்ட தொடு கடலையும் கொண்டது. மேலதிக நீர் மண்டைதீவு- அல்லைப்பிட்டி வீதியூடாக கடலுக்குச் செல்லும் இதன் தற்காலிக தவிசுபீட இளிவு மட்டம் கடல் மட்டத்தில் இருந்துTemporary bench mark 0.673மீற்றர் உயரம் கொண்டது.

மண்டைதீவு வீதியினது 1.90 கிலோ மீற்றர் வரையான தாழ்வான பகுதியில் மதவுகள் Culverts-06 தாம்போதி Causeway -02+.

முதலாவது மதவானது 150 மீற்றரில் இருந்து தற்போது 3 மீற்றர் அகலம் கொண்ட பெட்டி உருவம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் அடி மட்டம் Sill Level மிகவும் பதிவாக உள்ளதுடன் மேல் மட்டம் Lacey's Formula லெசியின் விதிக்கு ஒப்ப நிலைக்குத்து திறப்பு வெளி அமைக்கப்படவில்லை. தற்போதைய பெருக்கு வேளையில் சுமார் 150 மில்லி மீற்றர். இடை வெளியும் வற்றின் போது மதவின் கொங்கிரீற் மேற் பரப்பின் கீழ் மட்டத்தில் இருந்து 440 மீற்றர் ஆகவுள்ளது. எதிர் வரும் மழை காலத்தில் கடலின் நீர் மட்டமானது சுமார் 600 மில்லி மீற்றர். உயர்ச்சி அடையும் போது நீரானது வீதியை மேவிப்பாயக்கூடிய சாத்தியம்உள்ளது.

இரண்டாவது மதவு 350 மீற்றரில் இருந்தது. தற்போது 6.56 மில்லி மீற்றர். விட்டம் கொண்ட இரண்டு குழாய்கள்கொண்டுஅமைக்கப்பட்டுள்ளது. மூன்றாவது நீர் புகவளி 630 மீற்றர் தூரத்தில் உள்ளதுடன் கொண்ட பெட்டி 2.40 மீற்றர் அகலமும் 1.50 மீற்றர் உயரமும் உருவ அமைப்பு நீர் வளி அமைக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவது நீர் புகுவளி 1.700 மீற்றர் தூரத்தில் உள்ளது.இது 6.56 மில்லிமீற்றர் விட்டம் கொண்ட குழாய் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

1.630 மீற்றர் தூரத்தில் உள்ள 9.84 மில்லி மீற்றர் விட்டம் கொண்ட 15 குழாய்த் தொகுதியாக இருந்த மதவு தற்போதைய வடிவமைப்பில் பாலமாக மாற்றப்பட்டுள்ளது. இதன் நீர் வளியானது y வை வடிவ அமைப்பான இரு ஓடைகளினால் வரும் நீரை கடத்துவதற்கு அமைக்கப் படவுள்ளது. இதன் கடல் மட்டத்தில் இருந்து தவி சுபீட உயரம் சுமார் 0.8 மீற்றர்.

முதலாவது தாம்போதியானது முதலாவது கிலோ மீற்றரின் அல்நதத்தி ஆரம்பமாகி 160 மீற்றர் நீளம் கொண்டது. மழை காலத்திலும் கோடையிலும் சில வேளைகளிலும் இதில் சுமார் 300 மில்லி மீற்றர் குறையாத நீர் மேவிப் பாய்ந்ததுண்டு .மாரியில் இது சில நாட்கள் தொடர்ந்தும் கோடையில் சில மணி நேரமும் மேவிப் பாய்ந்தது அறியக் கூடியதாக இருந்தது. இது தற்போதைய வடிவமைப்பில் 6.56 மில்லி மீற்றர் விட்டம் கொண்ட 3 குழாய்கள் பொருத்தப்பட்டு தாம்போதி தவிர்க்கப்பட்டுள்ளது.

இதன் கிழக்குப் பகுதியானது பண்ணை கடலுடன் தொடர்பு உடையதும் சுமார் 10-15 கெக்டேயர் பரந்த நீர்ஏந்து பிரதேசத்தை கொண்டது.160 மீற்றர் இடைவெளி உடைய தாம் போதியினால் ஓடிய நீர் 6.56 மீற்றர் விட்டம் கொண்ட 3 குழாய்களின் ஊடாக கடத்தப்படுமா என்பது தொழில்நுட்பரீதியாகவினாவுக்குரியது.

இவ்வாறே 1.390 கிலோ மீற்றரில் ஆரம்பமாகி 1.510 கிலோ மீற்றரில் முடிவுறும் இரண்டாவது தாம்போதியும் சுமார் 10-15 கெக்ரேயர் விஸ்தீரணம் கொண்ட நீர் ஏந்து பிரதேசம் கொண்டது. இதில் மாரியில் 300 மில்லி மீற்றர் அளவான நீர்மேவிப்பாய்வதுண்டு. தற்போதைய வடிவமைப்பில் இப் பிரதேசம் சுமார் 600 மில்லி மீற்றர் உயர்த்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. இதன் காரணமாக மேவிப் பாயும் நீர் மேவிப் பாய்வது தவிர்க்கப்பட வாய்ப்புள்ளது. ஆனால் தொழில் நுட்பரீதியில் குறைபாடானது.

மண்டைதீவு வீதியின் ஆரம்பப்புள்ளியானது கடல் மட்டத்தில் இருந்து 1.22 மீற்றராகவும் 1.950 மீற்றர் தூரமாகிய கோவிலடி 1.026 மீற்றாகவும் உள்ளது. இதற்கு இடைப்பட்ட தாழ்ந்த பகுதியானது 350 மீற்றருக்கும் 1800 மீற்றருக்கும் இடைப் பட்ட பிரதேச தவிசுபீட மட்டம் 0.673 ஆகவுள்ளது.இப்பகுதி முழுவதும் சுமார் 600 மில்லி மீற்றர் உயர்த்த உத்தேசித்துள்ளது. சிறந்தது ஆனால் நீர் ஓடிகளின் தடையானது வீதியின்தளத்தைபாதிக்கக் கூடியதன்மை உடையதை அறியக் கூடியதாய் உள்ளது.

இது சார்பில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய கவனம் எடுப்பார்கள் என எதிர்பார்க்கலாம். மழை வீழ்ச்சியின் அளவையும் திட்டம் கடற் பெருக்கின் அளவை மனிதர்களினால் தீர்மானிப்பது சிரமமானது. எனவே தான்பொருத்தமான மதவுகள்,பாலங்கள் ,அமைத்து நீர் தடையின்றி ஓட நீர் ஓடிகள் அமைக்கப்படுவது உண்டு.

**க.ஸ்ரீராஜகுமார்**

---

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

### இவன் சொர்க்கத்தில் இருந்து வந்தவன்




...எனவே, அன்றைய சூழலில் பல நாடுகளின் கிரிக்கெட் வாரியங்கள் கெர்ரி பேக்கரின் ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்றால் இனி சொந்த நாட்டிற்காக டெஸ்ட் போட்டிகளில் விளையாட முடியாது என்று தன் நாட்டு வீரர்களை எச்சரித்துப் பார்த்தன. ஆனால், அனைத்துத் தடைகளையும் மீறி இன்றைக்கு ஒருநாள் போட்டிகள் தவிர்க்க முடியாதவை ஆகிவிட்டன. ஐந்து நாட்கள் டெஸ்ட் போட்டிகள் நடந்தால் கூடவே ஒருநாள் போட்டிகளும் சேர்த்தே இப்போது நடத்தப்படுகின்றன. எனவே, நன்றி மிஸ்டர் கெர்ரி பேக்கர்.

இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இவற்றிலுள்ள மைதானங்கள் அமைப்பிலேயே பெரிதும் வித்தியாசப்படும். அங்குள்ள மைதானங்கள் வேகப் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்கும். வேகமாக வீசப் படும் பந்து முகத்திற்கு நேரே எழும்பி முடிந்தால் என்னை அடித்துவிளையாடு; இல்லை என்றால் முகத்தைப் பதம் பார்த்து விடுவேன் என்று சவால் விடும். இந்தியா சுழற் பந்து வீச்சாளர்களை உருவாக்கி வருவதுபோல் ஆஸ்திரேலியா வேகப் பந்து வீச்சாளர்களை உருவாக்கி வருகிறது. தாம்சன், வில்லி தொடங்கி அப்போது விளையாடிக் கொண்டிருந்த மெக்டெர்மாட், விட்னி, ஹ்யூஸ்வரை இது தொடர்கதைதான். எனவே, இந் திய அணி ஒருவித பதற்றத்துடனேயே ஆஸ்திரேலியா வந்திறங்கியது. பயந்தபடியே டெஸ்ட் ஆட்டங்களுக்கு முன்பு மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் நியூசவுத் வேல்ஸ் ஆகியவற்றுடன் நடந்த ஒருநாள் போட்டிகளில் இந்தியா படுதோல்வி அடைந்தது.

சச்சின் ஆஸ்திரேலியாவின் ஆடுகளம் பற்றி நன்றாக அறிந்திருந்தான். முற்றிலும் மாறுபட்ட ஆடுகளம் மற்றும் குளிர்ப் பிரதேசம் ஆகியவை நம்மவர்களுக்குப் புதிது. இந்திய அணியில் ஆடிக்கொண்டிருந்த சாஸ்திரி, கபில்தேவ், வெங்சர்கார், ஸ்ரீகாந்த் ஆகியோர் நல்ல பேட்ஸ்மேன்கள் என்றாலும் முப்பது வயதைக் கடந்தவர்கள் என்பதால் அந்த வயதிற்கு ஏற்ற இய லாமை அவர்களிடம் இருக்கவே செய்தது. கேப்டன் அசாருதீன், சச்சின், பிரபாகர், மஞ்சுரேகர் ஆகிய பேட்ஸ்மேன்கள், கும்ப்ளே, ஸ்ரீநாத் ஆகிய பௌலர்கள் ஆகியோர் மட்டுமே இளைஞர்கள். ஆனால், ஆஸ்திரேலிய அணியிலோ கேப்டன் ஆலன் பார்டர், டேவிட்பூன், டெய்லர், ஜோன்ஸ், மார்ஷ், ஸ்டீவ் மற்றும் மார்க்வா சகோதரர்கள். வார்னே, ரீட் என வலுவான வீரர்கள். பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் போட்டியில் ஆஸ்திரேலியா 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இரண்டு இன்னிங்சிலும் சச்சின் எடுத்த ரன்கள் 16 மற்றும் 7. சரியாக விளையாடவேயில்லை. கபில்தேவின் பௌலிங் மட் டுமே பத்திரிகைகளில் பாராட்டப் பட்டது. ஆடாமல், எதிர்முனையில் நின் றிருந்த டேவிட் பூன் இந்திய அணியின் கபில்தேவ் வீசிய மூன்று பந்துகளை வாயாரப் பாராட்டினார். இரண்டாவது டெஸ்ட் போட்டி மெல்போர்னில் தொடங்கியது. ஆஸ்திரேலியா இதிலும் வெற்றி பெற்றது . ஒரே வித்தியாசம். முதல் டெஸ்டில் 10 விக்கெட் வித்தியாசத் தில் வெற்றி. இந்த போட்டியில் 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி.



ஆஸ்திரேலிய வீரர்கள், பத்திரிகை கள் அனைவரும் சச்சினைப் பாரா ட்டித் தள்ளினர். ஆஸ்திரேலிய முன் னாள் பேட்ஸ்மென் ஓ நீல் இது வயதை மீறிய திறமை, இவனது ஸ்ட்ரோக்கு கள் அனைத்து சர்வதேச ரகத்தில் இருக்கிறது. புதியவன் போன்று தெரி யவே இல்லை என்றார். ஆஸ்திரே லிய கேப்டன் பாார்டரோ, 19 வயதி லும் இவன் இந்தப் போடு போட்டால் 25 வயதில் என்ன செய்வானோ என் பதை நினைத்தால் உதறலாக இருக் கிறது என்றார்.ஆஸ்திரேலிய வானொலி வர்ணனையாளர் டிம் லேன் ஒருபடி மேல் சென்று இவன் சொர்க்கத்தில் இருந்து வந்தவன், இவன் எது வேண் டு மானாலும் செய்வான் என்றார்.

**கே. ரமேஷ்** (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசாங்கமானது தற்பொழுது எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய ஆளுமையும் ஆற்றலுமுள்ள மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு க.பொ.த (உ/த) பாடப்பிரிவில் தொழில்நுட்ப பாடத் துறையைஉள்ளடக்கியுள்ளது.

இப்பாடத்துறையை கலைத் திட்டத்தில் சேர்த்ததன் மூலம் மாணவர்கள் இலகுவாக வேலை வாய்ப்பினையும் பெற முடியும். இது பற்றிய கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

# சவால்களுக்கு முகங்கொடுக்கும் இலங்கையின் கல்விச்சீர்திருத்தம்



ஆரம்ப மற்றும் இரண்டாந் தரக் கல்வியை உயர்ந்தளவிலும் சிறந்த தர நிலையிலும் மாணவர்கள் பெற்றுக் கொள்வதையே இலங்கை அரசு விரும்புகின்றது. அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான அத்திவாரமொன்றினை இக்கல்வி வழங்குகின்றது. கல்வியில் சமத்துவத்தையும் தரத்தையும் அடைந்து கொள்வதில் அரசாங்கம் மகிந்த சிந்தனை மற்றும் அது மட்டிலான எதிர்காலம் தொலைநோக்கு என்ற கொள்கை ஆவணத்திலும் எதிர்பார்த்தவாறான அறிவு மையத்தை உருவாக்குகின்ற விதத்தில் நாட்டினை மாற்றியமைக்கும் கல்வியையும் அறிவு முறைமைகளையும் பொருத்தமான விதத்தில் மீளமைக்கின்ற அரசாங்கத்தின் நோக்கம் காரணமாக இலங்கை உலகில் முக்கிய அறிவு மற்றும் பயில்தலுக்கான மையமாக மாறும். இது முன்னைய கல்விச் சிந்தனையில் கருதுகோள் மாற்றமொன்றிற்கு வழிவகுக்கும். அத்துடன் இது இத்துறையில் பாரிய செயல்விளைவுகளைக் கொண்ட மாற்றங்களைக் கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இம் மாற்றத்திற்கு ஆற்றல் மிக்க உயர் கல்வி முறையினூடாகவும் தரம், அங்கீகாரம் மற்றும் தொழில் வாய்ப்புத் தன்மை என்பவற்றுடன் தொடர்புபடுத்தப்பட்ட விதமான தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி துறைகளினதும் ஆதரவு அவசியமாகும்.

சமமான மூலவளப் பங்கீடு மற்றும் வாய்ப்புக்களை வலுப்படுத்துவதற்காக அரசாங்கம் அண்மைய ஆண்டுகளில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. கல்வி அமைச்சு தேசிய கல்வி முகவர்களுடன் இணைந்து இலங்கையில் கல்வி நிலையை உயர்த்துவதற்காக நடுத்தரக் காலக் கல்வித்துறை அபிவிருத்திக் கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித் திட்டம் 2012-2016 போன்ற ஒழுங்குகளை வடிவமைத்திருக்கின்றது. இந் நிகழ்ச் சித்திட்டமானது வாய்ப்புக்களை மேம்படுத்துவதனூடாக ஆரம்ப மற்றும் இரண்டாம் தரக் கல்வியை பெறுவதையும் அதன் தரத்தினையும் உயர்த்தப் பணியாற்றுகின்ற பள்ளிக்கூடக் கல்வியை மாற்றியமைக்கின்ற செயற்றிட்டத்தினால் ஆதரவளிக்கப்படுகின்றது.



கல்வித் தரிசனம்

பாடசாலைக்கல்வியை மாற்றியமைக்கின்ற செயற்றிட்டமானது கல்விக்கான வாய்ப்புக்களையும் அதன் தரத்தையும் மேம்படுத்துவதனூடாக ஆரம்ப மற்றும் இரண்டாம் தரக்கல்வியைப் பெறுவதனை ஊக்குவிக்கின்ற வேளையில் கல்விப் பணிகளின் ஆளுகையினையும் வழங்கி வலுப்படுத்துகின்றது. சிறப்புக் கல்வித் தேவைகளுடன் பிள்ளைகளுக்கு போதுமான வசதிகளுடன் கல்வி வாய்ப்புக்களையும் வழங்குகின்றது. ஆயிரம் இரண்டாந் தரப் பாடசாலைகளையும் 5 ஆயிரம் ஆரம்பப்பாடசாலைகளையும் உருவாக்கும் கல்வி உபாயத்தின் கீழான சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் 2013 இல் தொடர்கின்றது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் வறுமைச் சுட்டெண்ணின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 100 பாடசாலைகள் க.பொ.த உயர்தரத்தில் அனைத்துப்பிரிவுகளுடனும் இரண்டாந் தரப் பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்படும். இரண்டாந்தரப் பாட சாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 20 புதிய பாடசாலைகளின் கட்டுமான வேலைகள் நிறைவடைந்துள்ள வேளையில் கட்டுமானத்தின் கட்டம் II இன் கீழ் 415 மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்களின் கட்டுமான வேலைகள் 2013 ஜூனிலிருந்து ஆரம்பமாகின. 50 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 2012 இலும் 1580 ஆகக் காணப்பட்டது. அத்தகைய பாடசாலைகளின் மூலவள அளிப்பு தேசிய மட்டத்துடன் ஒப்பிடுகையில் சமநிலையற்றதாக காணப்படுவதா னது ஏற்கனவேயுள்ள வளங்களின் பயன்பாட்டினை ஒழுங்கு முறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தினை பிரதிபலிக்கின்றது. 2013 இல் க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்ப பாடநெறி அறிமுகப் படுத்தப்பட்டதனூடாக இலங்கையின் கல்வித்துறையில் மிகப்பெரும் மாற்ற மொன்று இடம்பெற்றது. இது மூன்றாம் நிலையில் பல்கலைக் கழக அல்லது தொழில்நுப்மற்றும்தொழிற்பயிற்சிக் கல்வியைத் தொடர எதிர்பார்க்கின்ற மாணவர்களுக்கான கல்வி வாய்ப்பினை அதிகரித்து செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு மிகவிரைந்தவளர்ச்சியொன்றினை தொடர்ந்து 2016 அளவில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவில் 75 சதவீதத்தினை அடைந்து கொள்ளுதல் என்ற இலக் கினை நோக்கி பயணிக்கின்றது. இலங்கையின் வலையமைப்பு ஆயத்த நிலை சுட்டெண்ணின் தர நிலை குறிப்பிடத்தக்க அளவிற்கு மேம்பட்டது.

கல்வி அமைச்சிற்கும் இளைஞர் அலுவல்கள் மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி அமைச்சிற்குமிடையில் கையெழுத்தான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றிற்கிணங்க தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத் திட்டமொன்றின் ஊடாக க.பொ.த (உ/த) மற்றும் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த பாடசாலைப் பிள்ளைகளுக்கு தேசிய தொழிற் பயிற்சி தகைமையினை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதன்பிரகாரம் க.பொ.த (உ/த) மாணவர்களுக்கு தேசிய தொழிற்பயிற்சியினை நடத்துவதற்காக 175 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டதுடன் பாடசாலையிலிருந்து விலகுவோருக்கான தேசிய தொழிற்பயிற்சி பாடநெறி களை வழங்குவதற்காக 47 மாகாண மற்றும் வலய தகவல் தொடர்பூட்டல் நிலையங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பன்னாட்டு கணனி ஆரம்ப அடிப்படைப் பயிற்சி கணனி உதவி யுடனான பயில்தல் மற்றும் பன்னாட்டு தகவல் தொடர்பூட்டல் தொழில் நுட்ப கற்பித்தல் கலை என்பவற்றை பெற்றுக் கொள்வதற்காக புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன. மேலும் பாடசாலை அதிபர்களுக்கும் கல்வி அலுவலர்களுக்கும் இ-பிரசைகள் பயிற்சி புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன. குறுங்கால தொழில் சார் பயிற்சி மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் பாடசாலை விட்டுச் சென்ற வர்களும் மாணவர்களும் பெறுவ தற்கு புலமைப்பரிசில்கள் வழங்கப் பட்டன. சுறுசுறுப்புமிக்க புதிய உலகின் 6 பிரச்சினைகளுக்கு விடைகண்டு இசைந்து செல்லும் பொருட்டு இலங்கையின் உயர் கல்வித்துறையில் மிகப்பெரும் மாற்றமுறும் தன்மை யொன்று இடம்பெற்று வருகின்றது. எனவே கல்வித்துறையானது பாரம் பரிய மாதிரிகளிலிருந்து விலகி எந் நாட்டிற்கும் செல்லக்கூடிய தொழிற் படையொன்றினை உருவாக்குவ தற்கு வழிவகுக்கின்றது உருவாகிய ஊழியர்களின் தேவையுடன் இணைகின்ற தொரு விதத்தில் தகுதியை அடிப்படையாகக்கொண்ட கல்வி முறைமையொன்றிற்கு மாறுவதற் கான நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது உயர்கல்விக்கான தேவையுடன் இணைந்து செல்வதற்கு அரசாங்கத்தினால் மாத்திரம் முடியாததாகையால் உயர் கல்வியில் அரசின் தனியுரிமை பாரிய அழுத்தங்களுக்கு உட்படுவது தவிர்க்க முடியாததாகவுள்ளது மேலும் மாணவர்களினால் எதிர்பார்க்கப்படும் கல்வியின் தரத்திற்கும் பல்கலைக் கழகங்களினால் வழங்கப்படும் தரங்களுக்கிடையே இடைவெளி உருவாகின்றது இதனை கிடைக்கத்தக்க வளங்களின் மூலம் தேவையை நிரப்புவது இடர்பாடான தாகும் ஆகவே இலங்கைப் பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் பாடநெறிகளை பன்முகப்படுத்துவது அவசியமாகவுள்ள வேளையில்உலகசந்தையின்உச்சநிலையினை மாண வர்கள் அடைவதற்கு மாணவர்கள் வெளிப்படுத்த வேண்டிய தேர்ச்சி மட்டத்தினை விரிவாக்க வேண்டிய தேவை காணப்படுகிறது.

உயர் கல்வியில் அரசின் ஏகபோகத்தினைக்குறைக்கும் நோக்குடன் முறைமை சார்ந்த இரு அடுக்கு முறைமையொன்றினை நோக்கி நகர்வது பெருந்துணையாகும் இதில் கல்வியியல் சார்ந்த விசேட தகை மைக்காக அரசாங்கமும் தனியார் துறையும் ஒன்றுடன் ஒன்று போட்டியிடும் தன்மை காணப்படுகிறது அரசு அல்லாத துறை நிறுவனங்களினால் பேணப்படுவதற்கு தேவைப்படும் தகைமைத்தரங்கள் தொடர்பில் உயர் கல்வி அமைச்சில் அரசு அல்லாத துறைப்பிரிவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக அங்கீகாரம் மற்றும் தகைமைச் சான்று தொடர்பில் துணை நிலை குழுவொன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. மேலும் ஆட்கள் நிறுவனங்கள் ஏதேனும் பட்டம் அல்லது கல்விசார் சான்றிதழ்களும் வழங்குவதனை குறிப்பாக தடைசெய்கின்ற விதத்திலமைந்த 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 128 ஆவது பிரிவிற்கு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

**மத்திய வங்கி அறிக்கை 2013**

| விடயம் | 2012 | 2013 |
|---|---|---|
| 1. பொதுக்கல்வி | | |
| அ.மொத்த பள்ளிக்கூடங்கள் | 10737 | 10,852 |
| அரச பள்ளிக்கூடங்கள் | 9 905 | 10 012 |
| இதில் தேசிய பள்ளிக்கூடங்கள் | 342 | 350 |
| ஏனைய பள்ளிக்கூடங்கள் | 832 | 840 |
| தனியார் | 98 | 104 |
| பிரிவேனா | 734 | 736 |
| ஆ.மாணவர் எண்ணிக்கை ('000) | 4 194 | 4 231 |
| இ.ஆசிரியர் எண்ணிக்கை ('000) | 236 | 236 |
| ஈ.மாணவர்/ஆசிரியர் விகிதம் | | |
| அரச பாடசாலை | 18 | 18 |
| ஏனைய பாடசாலை | 16 | 16 |
| 2.பல்கலைக்கழக கல்வி (அரச) | | |
| அ.பல்கலைக்கழகங்கள் | 15 | 15 |
| ஆ.மாணவர் எண்ணிக்கை | 70,222 | 78 442 |
| இ.விரிவுரையாளர் எண்ணிக்கை | 5 176 | 5457 |
| ஈ.பட்டதாரிகள் எண்ணிக்கை | 11, 614 | |
| உ. பட்டப்படிப்புகளுக்கு புதிதான அனுமதி | 28, 908 | 24 299 |

பல்கலைக்கழக முறைமையின் உச்ச நிறுவனமாகத் தொழிற்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உயர்கல்வி நிறுவனங்களை முகாமைத்துவம் செய்து சீரான நடவடிக்கைகளை உறுதிப்படுத்தியது.

2013 இல் 2011/12 கல்வியாண்டிற்கான வழமையான மற்றும் சிறப்பு ஏற்பாடுகளின் கீழ் பல்கலைக்கழக முறைக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 28, 908 ஆகும். மேலும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு தற்பொழுது க.பொ.த.(உ/த) பாடப் பிரிவாக உள்வாங்கப்பட்டுள்ள தொழில் நுட்பவியல் பாடங்களை பல்கலைக்கழக நுழைவுப்பாடங்களாக ஒப்புதலளித்திருப்பதுடன் 2016 இல் மாணவர்களை அனுமதிப்ப தற்காக தொடர்பான பீடங்களில் தொழில் நுட்பவியல் திணைக்களங்களை உருவாக்க பல்கலைக்கழகங்களைதூண்டி வருகின்றது. பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு 2013 இல் 26 புதிய பட்டப்பின் படிப்பு பாட நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. உயர் கல்வி அமைச்சு பட்டம் வழங்குவதற்கு பல உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஒப்புதல் வழங்கி யுள்ளது. இதற்கமைய இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், வியாபார முகாமைத்துவ தேசிய பாடசாலை, இலங்கை பன்னாட்டு பௌத்த கல்வி நிறுவனம் கொழு ம்பு பன்னாட்டு கப்பல் துறை பொறி யியல் கல்லூரி என்பன இளமானி மட்டத்தகைமைகளை வழங்குவதற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. இள மானி மட்டத்தகைமைகளை பெறுவதற்கு அதிகரித்துள்ள வாய்ப்புக்கள் தொழில் துறையின் தேவைகளுக்கும், தகைமை பெற்ற தொழில் அபிலாசைகளுக்குமிடையில் இப்பொழுது அகன்ற அளவில் காணப்படுகின்ற இடைவெளியினை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் என்பனவற்றின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முயற்சிகளை பயன்படுத்திக் கொள்வதற்காக உயர்கல்வி அமைச்சும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் புதுமையான ஆராய்ச்சி கொடைத் திட்டம் ஒன்றினை கூட்டாக ஆரம்பித்துள்ளன. இத்திட்டம் அடிப்படை பிரயோகம், பொருத்தமான ஆராய்ச்சி என்பவற்றிற்கு உதவுவதற்கும் அதே வேளையில் மனிதவள மூலவளங்களின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற் கும் எதிர்பார்க்கின்றது.

தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சிக் கல்வி மற்றும் பயிற்சித் துறை 2013 இல் மூன்றாம் தரக் கல்வியைத் தொடர்ந்தும் பயன்படுத்தியது. கல்வி சார்ந்த மற்றும் கல்வி சாராத அலுவல்கள் தொடர்பில் வரையறைகள் காணப்பட்டபோதும் பயன்படுத்திக் கொள்ளப்படாத அநேக தன்மைகளின் காரணமாக தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி கல்வித்துறை அதிகரித்து வருகின்ற உத்வேகத்தினைக் கொண்ட துறையாக விளங்குகின்றது. 2013 இல் நாட்டில் தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சிக் கல்வியில் 519 அரச துறை நிறுவனங்களும் 562 தனியார் மற்றும் அரசுசாரா நிறுவனங் களும் 1601 அங்கீகரிக்கப்பட்ட பாடநெறிகளை வழங்கின. தேசிய தொழிற்பயிற்சி தகைமை முறையின் கீழ் இவ்வாண்டு பகுதியில் மூன்றாம் தர மற்றும் தொழிற்பயிற்சிக் கல்வி ஆணைக்குழுவினால் மாணவர்களுக்கு 22, 833 தேசிய தொழிற்பயிற்சி தகைமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக் களம் இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் தகவல் மற்றும் தொடர்பூட்டல் மற்றும் பல ஊடக தொழில் நுட்பம் மற்றும் மொழிகள் போன்ற பன்முகப்படுத்தப்பட்ட துறைகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொண்டது.

குமாரசாமி யோகன்ராஜ்

கல்வித் தரிசனம் பகுதிக்கு துறைசார்ந்தவர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3,2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இந்திய அரசியலில் விநோதம் பிறந்திருக்கிறது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஆளுங்கட்சியும், எதிர்கட்சிகளும் இணைந்து செயற்பட்டுள்ளன. குறிப்பாக துணை சபாநாயகர் தேர்தல், நீதித்துறை நியமனம் தொடர்பான நீதிபதிகள் ஆணையம் அமைப்பது போன்ற விடயங்களில் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சிகளும் தோளோடு தோள் நின்று பணியாற்றியுள்ளன. ஆனால், அவைக்கு வெளியில் வழக்கமான அரசியல் போரில் குதித்துள்ளன. இந்த வித்தியாசமான நாகரிகம் நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு வலுவூட்டும் வகையில் அமைந்திருப்பது வியக்கத்தக்க முன்னேற்றம்.

**சுதந்திர தின உரை வேற்றுமை!**

அவைக்கு வெளியில் என்றால் இந்தியாவின் சுதந்திர தின விழா உரை பற்றி எதிர் கட்சிகள் கூறியிருக்கும் கருத்துக்களை எடுத்துக் கொள்ளலாம். இந்தியாவின் 68ஆவது சுதந்திரதின விழாவில் பிரதமர் நரேந்திர மோடி சிறப்புரையாற்றியிருந்தார்.

இதற்கு முன்பு பல பிரதமர்கள் இது போன்ற உரை நிகழ்த்தியிருந்தாலும், மோடியின் உரை பற்றி பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் பெரிய அளவில் பேசப்பட்டது இதுதான் முதல்முறை. குறிப்பாக கடந்த பத்தாண்டுகளில் பிரதமராக இருந்த டாக்டர் மன்மோகன் சிங்கின் சுதந்திர தின உரை பற்றிக்கூட இவ்வளவு பிரபல்யமாகப் பேச்சு எழுந்தது இல்லை. அந்த அளவுக்கு மோடியின் உரை நாடு முழுவதும் ஒரு மோகத்தை உருவாக்கியிருக்கிறது.

அவர், தனது உரையில் ஏற்கனவே குடியரசுத் தலைவர் உரையிலும், பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் நிதியமைச்சர் அருண்ஜெட்லி தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையிலும் சொல்லப்பட்ட விடயங்களைத்தான் விவரித்துப் பேசினார் என்றாலும், சுதந்திர தினத்தன்று நாட்டின் உயர் பதவியிலிருக்கும் பிரதமரிடமிருந்து வந்த நம்பிக்கையூட்டும் அந்த வார்த்தைகள் இந்திய மக்களுக்கும் சரி, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களுக்கும் சரி பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது.

குண்டு துளைக்காத உடை அணியாமல் இந்த முறை டெல்லி செங்கோட்டையிலிருந்து உரையாற்றினார் நரேந்திரமோடி. மழை பெய்தால்கூட எனக்கு குடை பிடிக்க வேண்டாம் என்று முன்கூட்டியே அறிவித்தார். இந்திய தேசியக் கொடியான மூவர்ணக் கொடியை ஏற்றும் வைபவத்தில், சாதாரண மனிதர்களும் பங்கேற்க முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில் சுதந்திர தின விழாவைக் கொண்டாடினார் பிரதமர் நரேந்திர மோடி.

# புதிய பயணம்!

நான் பிரதமர் அல்ல. இந்த நாட்டின் முதல் வேலையாள் என்று மோடி கூறியது அர்த்தம் பொதிந்த வார்த்தைகள். இன்னும் சொல்லப்போனால் சுதந்திர தின உரையில் ஒரு நல்ல பெற்றோர் பிள்ளைகளுக்குச் சொல்ல வேண்டிய அறிவுரை என்ன என்பதை ஆசிரியர் ஒருவர் கல்வி நிலையங்களில் வகுப்பு எடுப்பதைப் போல் எடுத்தார் மோடி என்றே சொல்ல வேண்டும்.

அவரது உரையில் மிக முக்கியப் பங்கு வகித்தது நாடு முழுவதும் கழிப்பிட வசதிகள் உடனடியாக செய்து கொடுக்கப்படும் என்பதாகும். ஏனென்றால், பெண்களின் பாதுகாப்புக்கு அது மிக முக்கியம். சுகாதாரமான இந்தியாவுக்கு அது மிகவும் முக்கியம் என்பதை உணர்ந்திருக்கின்ற மோடி, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதி வளர்ச்சி நிதியை கழிப்பிடங்கள் அமைப்பதற்கு முதற்கட்டமாக முன்னுரிமை கொடுத்துப் பயன்படுத்த வேண்டும் என்று கூறியிருக்கிறார். குறிப்பாக இந்த ஆண்டு இறுதிக்குள் பெண்கள் பள்ளிகள் அனைத்திலும் கழிப்பிடங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதை தீர்க்கமான முடிவாக அறிவித்துள்ளார்.

அடுத்து பெண் சிசுக்கள் கொலை செய்யப்படுவது பற்றி பேசியிருக்கிறார். இந்தியாவில் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையேயான பிறப்பு சதவீதம் குறைந்து கொணடே வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டிய பிரதமர், பெண் சிசு கொலைகளை அறவே கைவிடுங்கள் என்று வலியுறுத்தியிருக்கிறார.

அதேபோல், கற்பழிப்பு என்பது இந்த நாட்டுக்கு ஏற்படும் அவமானம் என்பதைச் சுட்டிக்காட்டி, அதுபோன்ற குற்றங்களில் எந்த ஆண்மகனும் ஈடுபடாத வகையில் பெற்றோர் ஆண் பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என்று பாடம் எடுத்துள்ளார்.

பெற்றோரைப் பார்த்து, நீங்கள் பெண் குழந்தைகளிடம் எங்கே போகிறாய், எதற்காக இதைச் செய்கிறாய் என்றெல்லாம் கேள்வி எழுப்புகிறீர்கள். அதே கேள்வியை ஆண் குழந்தைகளைப் பார்த்தும் எழுப்புங்கள். நற்குணங்கள் தானாகவே வந்துவிடும். கற்பழிப்புச் சம்பவங்கள் நடக்காது. இளைஞர்கள் தீவிரவாதிகளாகவோ, நக்ஸலைட்டுகளாகவோ மாறும் ஆபத்து உருவாகாது என்று ஆலோசனை வழங்கியிருக்கிறார்.

பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்தியுள்ள அதே நேரத்தில் மாவோயிஸ்டுகள், வன்முறைப் பாதையை விட்டு அமைதிப் பாதைக்கு திரும்ப வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

நாம் ஏன் இறக்குமதிக்காக காத்திருக்க வேண்டும். நம் நாட்டில் இளைஞர்கள் இல்லையா என்று கேள்வி எழுப்பியிருக்கும் பிரதமர், எங்கு வேண்டுமானாலும் இருங்கள். ஆனால், இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள். அதுவும் தரமான பொருட்களை உற்பத்தி செய்யுங்கள். நமக்கு இறக்குமதியும் தேவைப்படாது. ஏற்றுமதியும் அதிகரிக்கும் என்பதையும் சுட்டிக்காட்டிருக்கிறார். அதனால் வாருங்கள். இந்தியாவை படைப்போம் என்பதுதான் நரேந்திரமோடியின் சுதந்திர தின முழக்கம்.

அதுமட்டுமின்றி, வறுமையை ஒழிக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வெளியிட்ட சுதந்திர தின விழாப் பேருரையைப் பின்தொடர்ந்துள்ள மோடி, வறுமை ஒழிப்பை இந்தியா முன்னெடுத்துச் செல்லும். அனைத்து சார்க் நாடுகளும் இணைந்தால் இந்த பிரதேசத்திலேயே வறுமையை ஒழித்து விடலாம் என்று எடுத்துரைத்துள்ளார்.

இப்படி மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிப் பேசியுள்ள நரேந்திரமோடியின் பேச்சு பற்றி பா.ஜ.க.வினர் பாராட்டியிருக்கிறார்கள். கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சியோ, இதில் எதுவும் புதிதாக இல்லை என்று சாடியிருக்கிறது.

தேர்தல் பிரசார மூடிலேயே பிரதமர் இருக்கிறார். அவர் எப்போது அரசு நிர்வாகத்தைக் கவனிக்கப் போகிறார் என்று கேள்வி எழுப்பியிருக்கிறது. மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான சீதாராம் எச்சூரி, மோடியின் நடைக்கும் (walk), அவரது பேச்சுக்கும் (talk) நிறைய வித்தியாசம் இருக்கிறது. விலைவாசியை கட்டுப்படுத்துவது, ஊழலை ஒழிப்பது போன்றவற்றில் இந்த அரசின் செயற்றிட்டங்கள் என்ன என்பது வெளியிடப்படவில்லை என்று வாதிட்டுள்ளார். ஆனால், சட்ட அமைச்சராக இருக்கும் ரவிசங்கர் பிரசாத்தோ, சுதந்திரதின உரையில் அனைத்து பாலிஸி முடிவு களையும் அறிவித்து விட முடியுமா. மோடி பிரதமரான பிறகு நிர்வாகத்தைச் சீர் செய்திருக்கிறார்.

ஆளுக்கொரு திசையில் பணியாற்றிக் கொண்டிருந்த அரசு துறைகளை ஒரு முகப்படுத்தியிருக்கிறார் என்று கூறி இதை மறுத்துள்ளார். சுதந்திரதின உரை விவகாரத்தில் ஆளுங்கட்சிக்கும், எதிர்கட்சிகளுக்கும் இப்படியொரு வேற்றுமை. ஆனால், இவர்களுக்குள் இனம் புரியாத ஒற்றுமை நீதித்துறையின் சுதந்திரத்தை குறைப்பதில் ஏற்பட்டிருக்கிறது.

**நீதிபதிகள் நியமனத்தில் ஒற்றுமை!**

நீதிபதிகள் நியமிக்கும் முறையில் இந்தியாவின் உச்சநீதிமன்றத்துக்கு உள்ள அதிகாரத்தைக குறைக்கும் வகையிலும், ஆட்சியிலிருக்கும் அரசின் அதிகாரத்தைக் கூட்டும் வகையிலும் கொண்டு வரப்பட்ட நீதிபதிகள் நியமன தேசிய ஆணையம், மசோதாவை அனைத்துக் கட்சிகளும் ஒரே நின்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றியிருக்கிறது.

குறிப்பாக அந்த மசோதாவைக் கொண்டு வந்த சட்ட அமைச்சர் ரவிசங்கர் பிரசாத்தை ஒஹோவென்று புகழ்ந்துள்ளார்கள். இந்த மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து பேசிய ரவிசங்கர் பிரசாத், இது நீதித்துறையின் சுதந்திரத்தை பறிக்கும் செயல் அல்ல. மாறாக குடியரசுத்தலைவருக்கு மரியாதை அளிக்கும் விதத்தில் அவருக் குள்ள அதிகாரத்தை நீதிபதிகள் நியமனம் விடயத்தில் மீட்கும் மசோதா என்று கூறினார். இதை காங்கிரஸ் கட்சியும் ஆதரித்தது. கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஆதரித்தன.

மாநிலக் கட்சிகளான அ.தி.மு.க., திரிணாமூல் காங்கிரஸ் போன்ற கட்சிகள் மாநில அளவிலும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதற்கு இது போன்றதொரு ஆணையம் உருவாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தாலும், தேசிய அளவில் கொண்டு வரப்பட்ட நீதிபதிகள் நியமன ஆணையத்திற்கு வரவேற்பு வழங்கின. குறிப்பாக காங்கிரஸ் கட்சி சார்பில் பேசிய சுதர்ஸனன் நாச்சியப்பன், 1993க்குப் பிறகு நீதிபதிகள் நியமனம் என்பது ஆட்சி அதிகாரத்திலிருந்து மாறி, நீதித்துறை வசம் போய்விட்டது. கூட்டணி அரசுகள் நடைபெற்றதால் அதை மீட்க முடியவில்லை. இப்போதாவது ஆட்சிக்கு இதுபற்றி உள்ள அதிகாரத்தை சட்ட அமைச்சர் மீட்டிருக்கிறார். அவரை பாராட்டுகிறேன் என்றே கூறியிருக்கிறார்.

இப்படி ஏகோபித்த பாராட்டு, வரவேற்பு ஆகியவற்றுடன் இந்தியாவில் நீதிபதிகள் நியமன தேசிய ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது. இது ஆறு உறுப்பினர்கள் கொண்ட அமைப்பு. இதன் தலைவராக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி இருப்பார்.

அவருக்கு துணையாக இரு மூத்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இருப்பார்கள். அரசு சார்பில் இந்திய சட்ட அமைச்சர் உறுப்பினராக இருப்பார். அது தவிர பிரதமர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, எதிர்கட்சி தலைவர் அல்லது அதிக எம்.பி.க்கள் உள்ள எதிர்கட்சி ஆகியோர் அடங்கிய குழு இரு எமினென்ட் பெர்ஷன்களை நியமிக்கும். மொத்தத்தில் அரசு பக்கம் மூன்று பேர், நீதித்துறை பக்கம் மூன்று பேர் என்ற அளவில் நீதிபதிகள் தேசிய ஆணையம் உருவாகியிருக்கிறது.

இந்த புதிய நீதித்துறை நியமனத்தின் ஒரு சிறப்பு என்னவென்றால், ஆணையத்திலுள்ள ஆறு பேரில் யாராவது இரண்டு பேர் ஒரு நீதிபதியின் நியமனத்தை எதிர்த்தால் அவர் பெயரை குடியரசுத் தலைவருக்கு அனுப்பக் கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது.

ஆகவே நீதித்துறை பரிந்துரைக்கும் ஒருவரை ஆட்சித்துறையில் இருக்கும் இரு உறுப்பினர்கள் எதிர்க்கலாம். ஆட்சித்துறை பரிந்துரைக்கும் ஒருவரை நீதித்துறையில் உள்ள இருவர் எதிர்க்கலாம். நீதித்துறையும், ஆட்சித்துறையும் கருத்தொற்றுமை அடிப்படையில் செயற்பட்டால் மட்டுமே நீதிபதிகள் நியமனம் எந்த விவகாரமும் இன்றி நடைபெறும் என்ற அளவுக்கு புதிய நீதிபதிகள் ஆணையம் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக வருவோர் சேவை மூப்பு அடிப்படையில் மட்டுமல்ல அவருக்கு திறமையும், நேர்மையும் இருக்க வேண்டும் என்று 1998 முதல் இரகசியமாக இருந்து வரும் நடைமுறை இப்போது அரசியல் சட்டத்திலேயே இடம்பெற்றிருக்கிறது.

அதுதான் நீதிபதிகள் நியமனம் குறித்த 121 ஆவது இந்திய அரசியல் சட்ட திருத்தத்தின் நிஜ பின்னணி, இதில் இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், மாநிலங்களிலுள்ள உயர்நீதிமன்ற நீதிபதி பதவிக்கு, மத்தியில் அமைக்கப்பட்டுள்ள நீதிபதிகள் ஆணையம் ஒருவரை நேரடியாக பரிந்துரைக்கலாம் என்று இருக்கும் ஷரத்து பற்றி கவலையே படாமல் அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் (இந்த கட்சிகள் பேசும் மாநில சுயாட்சி கொள்கைக்கு எதிரானது) இந்த மசோதாவை போட்டி போட்டுக் கொண்டு ஆதரித்துள்ளன என்பதுதான்.

**துணை சபாநாயகர் தேர்தலிலும் ஏற்பட்ட ஒற்றுமை!**

நீதித்துறை விடயத்தில் ஒற்றுமை போல் இன்னொரு விடயத்திலும் எதிர்கட்சிகளுக்கும், ஆளுங்கட்சிக்கும் ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. அது நாடாளுமன்ற துணை சபாநாயகர் தேர்வு செய்வது குறித்தது. வழக்கமாக ஆளுங்கட்சிக்கு சபாநாயகர் என்றால் எதிர் கட்சிக்கு துணை சபாநாயகர் பதவி போகும். இப்போது பா.ஜ.க.வின் சார்பில் சுமித்ரா மகஜன் சபாநாயகராக இருப்பதால், துணை சபாநாயகர் பதவி காங்கிரஸ்"க்கு கொடுக்க முன்வந்தது ஆளும் பா.ஜ.க.. ஆனால், எதிர்கட்சி தலைவர் அந்தஸ்து கொடுப்பதில் பா.ஜ.க. தயக்கம் காட்டிவிட்டு, இப்போது துணை சபாநாயகர் பதவி கொடுக்க முன் வருவது ஏன் என்று சுட்டிக்காட்டி அக்கட்சி அப்பதவியை மறுத்துவிட்டது.

அதனால் காங்கிரஸ்"க்கு அடுத்தபடியாக 37 எம்.பி.க்களை வைத்திருக்கும் அ.தி.மு.கவுக்கு துணை சபாநாயகர் பதவி வழங்கப்பட்டு, மு.தம்பித்துரை ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். அ.தி.மு.கவின் வேட்பாளரை காங்கிரஸ் வழி மொழிந்திருக்கிறது. எதிர்கால தமிழக அரசியலில் இந்த ஒற்றுமை கூட்டணியாகக் கூட மாறும் போக்கு தென்படலாம்.

ஆக சமீப காலமாக அரசியல் கட்சிகளுக்குள் உருவாகியுள்ள இந்த புதிய வகை கூட்டணி (அவைக்குள் ஒற்றுமை, வெளியில் வேற்றுமை) இன்னும் எத்தனை நாளைக்குத் தொடரும் என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. நான் பெரும்பான்மை அடிப்படையில் எந்த முடிவையும் எடுக்கப் போவதில்லை. கருத்தொற்றுமை அடிப்படையிலேயே முடிவுகளை எடுக்கப் போகிறேன்.

அனைவரும் இந்திய வளர்ச்சிக்கு கட்சி வித்தியாசமின்றி போராடுவோம் என்று கூறி, முன்னாள் பிரதமர்களையும், இதற்கு முன் இருந்த ஆளுங்கட்சிகளையும் இந்திய வளர்ச்சிக்கு காரணமானவர்கள் என்று பாராட்டியிருக்கிறார் நரேந்திரமோடி. இந்த துவக்கம், பிரதான கட்சியான காங்கிரஸ்"க்கு எதிர்கட்சி தலைவர் பதவியையும் வழங்கி அரவணைத்துச் சென்றால், இந்திய அரசியலில் ஆளுங்கட்சிக்கும், எதிர்கட்சிக்கும் இடையே ஒரு புதுவிதமான அரசியல் பயணம் தொடரும்.



-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் வெளிநாடுகளில் இயங்கு நிலையில்

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி எச்சரிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டமைப்புக்கள் தொடர்ந்தும் வெளிநாடுகளில் இயங்கிக் கொண்டு இருப்பதாகவும் இது குறித்து சர்வ தேச நாடுகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் ஐ.நா விற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி கலாநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வெளிநாடுகளில் இலங்கையர்களுக்கு அடைக்கலம் வழங்கும்போது அவதான!மாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர் விடுதலைப்புலி சந்தேக நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு மலேசியா உதவியுள்ளதாகவும், இவ்வாறு கைது செய்யப்பட்ட சிலர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மூலமாக அவர்களுக்கு ஐ.நா அடைக்கலம் வழங்கியுள்ளது தெரியவந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டமைப்புகள் தொடர்ந்தும் வெளிநாடுகளில் இயங்கி வருகின்றன. இதனால் ஐ.நா. அமைப்புகள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என தெரிவித்துள்ளார். (இ)

# தமிழ் அரசியல் கைதிகளின் சடலம் பார்க்கவே அனுமதி

## கைதிகளின் பெற்றோருக்கு அதிகாரிகள் கூறிய பதில்

(கொழும்பு)

அநுராதபுரத்தில் தடுத்து வைககப்படுள்ள தமிழ் அரசியல் கைதிகள் ஐந்தாவது நாளாக தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் நிலையில் உடல் சோர்வடைந்துள்ளார்கள்.

இந்த நிலையில் அவர்களை பெற்றோர்கள் பார்க்க அனுமதிக்கப்படாத நிலையில், உண்ணாவிரதம் இருக்கும் இவர்கள் மரணித்தால் அநுராதபுரம் வைத்தியசாலையில் ஒப்படைப்பதாகவும் அங்கு சென்று பார்வையிடலாம் எனவும் சிறைச்சாலை அதிகாரிகள் கூறுவதாக பெற்றோர்கள் கண்ணீருடன் தெரிவிக்கின்றனர். தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஜெயராஜ் ,அன்ரன் ,சாம்சன், ராகவன் சுரேஸ், கோபாலகிருஸ்ணன் மற்றும் கோபி ஆகிய ஏழு அரசியல் கைதிகளே உண்ணாவிரதத்தில் இறங்கியுள்ளனர்.

தம்மை தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரிவிற்கு மாற்றக்கோரியே அவர்கள் இப்போராட்டத்தை மேற்கொள்கின்றனர்.


தாங்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிங்கள தண்டனை கைதிகள் பகுதியில் தொடர்ச்சியான சித்திரவதைகளை எதிர்கொண்டிருப்பதாகவும் தமது உணவினைக்கூட அவர்கள் பறித்து உண்டுவிடுவதாகவும் தமிழ் கைதிகள் தெரிவிக்கின்றனர். (இ)

# அரசாங்க திணைக்களத்தின் ஊழல் அம்பலப்படுத்தப்படும்

## பொதுபல சேனா எச்சரிக்கை

இலங்கை சுங்கப் பிரிவினரின் ஊழல் மோசடிகள் குறித்து அம்பலப்படுத்தப்படும் என பொதுபல சேனா அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை சுங்கத் திணைக்களத்தில் இடம்பெற்று வரும் ஊழல் மோசடிகள் மற்றும் பால்மா வர்த்தகம் தொடர்பில் விரைவில் அம்பலப்படுத்தப்படும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அறிவித்துள்ளார்.



சுங்கத் திணைக்களத்தில!ால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஊழல் மோசடிகள் குறித்து எழுத்து மூல ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பால்மா மோசடி வர்த்தகம் தொடர்பிலான முக்கிய தகவல்கள் காணப்படுகின்றன.

இந்த விடயங்கள் தொடர்பில் விரைவில் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும்.

சுங்கத் திணைக்களத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வரும் அதிகாரிகளின் பெயர் பட்டியலும் வெளியிடப்படும் என ஞானசார தேரர் சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இந்த உண்மைகளை அம்பலப்படுத்தும் விசேட செய்தியாளர் சந்திப்பு விரைவில் நடத்தப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# காணாமற்போனவர்கள் எங்கே? அரசு புதுக்கதையை கூறக்கூடாது

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் காணாமற்போனவர்கள் புலம்பெயர்ந்து விட்டதாக போலியான பிரசாரங்களை அரசு மேற்கொண்டு வருவதோடு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மீது திட்டமிட்டு வீணாக பழி சுமத்தி வருவதை சிங்கள ஊடகங்கள் நிறுத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவுடனே மக்கள் புலம்பெயர்ந்து மேற்கத்தேய நாடுகளில் !சிப்பதாகவும், எமது வேண்டுகோளின் படியே மக்கள் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளிப்பதாகவும் இந்த சிங்கள நாளேடுகள் குறிப்பிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதிகட்டப் போரில் சரணடையுமாறு அறிவித்ததை நம்பி நேரடியாக இராணுவத்திடமும், பொலிஸாரிடமும் தமது உறவினர்களை கையளித்தார்கள். இவர்களுக்கு என்ன நேர்ந்தது என்று இன்று வரை மர்மம் நீடிக்கின்றது.

அதைப்போல் வெள்ளை வான் கடத்தல்களில் எத்தனையோ இளைஞர்கள் காணாமற் போய் விட்டார்கள். மாறாக புலம்பெயர்ந்து சென்றவர்கள் யாரும் முறைப்பாடு செய்யவில்லை என்பது இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஜனாதிபதி அமைத்த ஆணைக்குழு வடக்கு ,கிழக்கில் முறையாக செயற்படுகின்றதா? என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

எனவே காணாமற் போனவர்கள் விடயத்தில் இவ்வாறான புதுக்கதைகளை மக்களிடம் கூறி உண்மை நிலையை அரசு மூடி மறைக்கும் செயலுக்கு சிங்கள பத்திரிகைகள் முன்னுரிமை கொடுக்கின்றன.

இந்த ஆணைக்குழ உண்மையான விசாரணைகளை நடத்தி காணாமற் போனோர் குடும்பங்களுக்கு உதவ வேண்டிய நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதோடு இழந்து கொண்டிருக்கும் அவர்களின் எதிர் காலத்தை சுயாதீன முறையில் விசாரித்து உலகிற்கு உண்மையை கொண்டுவர சிங்கள ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இன்று ஒரு தகவல்

## சித்தர்களின் சிந்தனை

மனித உடம்பில் 72 ஆயிரம் நாடி நரம்புகள் இருப்பதாக சித்தர்கள் சொல்கிறார்கள்.

இதில் முக்கியமானவை 24 நாடி நரம்புகளாம். இந்த 24 நாடி நரம்புகளும் மற்ற நரம்புகள் போலல்லாமல் உறக்கத்திலேயே இருக்கிறதாம்.

இவற்றில் 10 நாடிகள் மேல் நோக்கியும் 10 நாடிகள் கீழ் நோக்கியும் இருக்கும். எஞ்சிய 4 நாடிகளும் இரு பக்கமும் இரண்டாக பிரிந்து போய் பாம்பு போன்று சுற்றி வளைத்துக் கொண்டிருக்கிறதாம்.

இத்தகைய நாடி நரம்புகளில்தான் உயிரின் ஜீவ ஆற்றல் அறிதுயில் செய்கிறதாம்.

இந்த 24 நாடிகளிலும் 10 நாடிகள் மிகவும் முக்கியம். அந்த 10 நாடிகளிலும் 3 நாடிகள் மிகமிக முக்கியம்.

இந்த 3 நாடிகளுக்குள்தான் அந்த இரகசியமான உறக்கம் பொதிந்து கிடக்கிறதாம். இவை நம் உயிரை உடம்புடன் இணைத்துக் கொண்டு இயங்குகிறதாம்.

இந்த நாடிகளின் 3 வாயுக்களுக்கும் 3 பெயர் உண்டு. இடகலை, பிங்கலை, சுழுமுனை.

சந்திரன் – சூரியன் – அக்கினி என்றும் இதைச் சொல்வதுண்டு.

இடது நாசியில் இழைகிற மூச்சு இடகலை.

வலது நாசியில் இயங்கும் மூச்சு பிங்கலை.

சுழுமுனை என்பது இரண்டு நாசியிலும் வந்து போய் இயங்கும் சுவாசம்.

இந்த 3 மூச்சுக்களின் இயக்கத்தைப் பற்றி நம் சித்தர் கள் சொல்லியிருக்கும் இரகசியத்தையெல்லாம் வெளி நாட்டவர்கள் ஆராய்ச்சி செய்கிறார்கள்.

சிறிது காலத்துக்கு முன் லெனின் கிராட் பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் மெஸ்ஸிங் என்று ஒருத்தர் இந்தியாவுக்கு வந்தாராம்.

விஞ்ஞானப் பேராசிரியரான அவர் இமயமலைச் சாரலில் வந்து சிறிது காலம் தங்கினாராம். அங்குள்ள சில யோகிகளிடம் பழகினாராம். Self induced cataleptic state என்ற மூச்சு வித்தையைப் பற்றி தெரிந்து கொண்டு போனாராம். அவர் என்ன சொல்கிறார் தெரியுமா?

“இந்தியாவில் இருக்கும் சித்தர்கள் பல வாரங்கள் மூச்சுவிடாமல் – மரக்கட்டை மாதிரி – உயிர் இருந்தும் இல்லாதது போன்று – ஒரு யோக சமாதி நிலையில் இருக்கிறார்கள். என்னால் இப்பொழுது 3 நாட்கள் வரைக்கும் அப்படி இருக்க முடிகிறது. அதற்கு மேலேயும் அது மாதிரி இருப்பதற்கு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறேன்” என்று சொன்னாராம்.

இந்த 3 மூச்சுக்களைப் பற்றி சித்தர்களின் நூலில் இன்னும் சில இரகசியம் இருக்கிறதாம்.

வளர்பிறை முதல் 3 நாட்கள் – அதாவது அமாவாசை கழித்து மறுநாளிலிருந்து 3 நாட்கள் – காலையில் எந்தநாசி எப்படி இயங்கும் என்ற கணக்கை கண்டுபிடி த்து சொல்லியிருக்கிறார்களாம்.

நான்காம் நாளிலிருந்து 6 ஆம் நாள் முடிய இது மாறும். அதன் பின் 7 ஆம் நாளிலிருந்து முதல் 3 நாட் கள் மாதிரி மறுபடியும் இயங்கும். இப்படியே மும் மூன்று நாட்களுக்கு இந்த இடகலையும் பிங்கலையும் மாறி மாறி ஒரு சட்டதிட்டத்தின்படி வேலை செய்கிறது.

இப்படி இருந்தால் அந்த உடம்பு ஆரோக்கியமாக இருக்கிறது என்று அர்த்தம்.

இந்த இரண்டும் தவிர சுழுமுனை என்ற மூன்றாவது மூச்சு எப்படி இயங்குகிறது என்பதற்கும் ஒரு வாய்ப்பாடு இருக்கிறது. அதெல்லாம் இருக்கட்டும். காலையில் எழுந்ததும் மூச்சு எந்த நாசியில் எப்படி இழைகிறது என்பதை வைத்து சில விடயங்களை புரிந்து கொள்ள முடியுமாம்.

இப்பொழுது உதாரணத்துக்கு ஒருநாள் இரவு முழு வதும் ஒரு நாசியில் மூச்சு ஓடிக்கொண்டிருந்தால் அந்த உடம்புக்கு 3 வருடத்துக்கு மேல் உயிராற்றல் இல்லை என்று முடிவு செய்து கொள்ளலாமாம்.

இரவு முழுவதும் இடகலையும் – பகல் முழுவதும் பிங்கலையும் மாறாமல் நடந்து கொண்டிருந்தால் அந்த மனிதன் 6 மாதத்தில் மரணத்தை நெருங்குகிறான் என்று அர்த்தம்.

ஆகாயத்திலுள்ள நட்சத்திரம் பார்வைக்கு தெரியாவிட்டால் ஐந்து நாட்களில் மரணமாம். மூக்கு நுனி தெரியவில்லை என்றால் 3 நாட்களில் முடிவாம் இப்படியெல்லாம் சொல்லுதாம் சித்தர் இலக்கியம்.

நாமெல்லாம் இதை முடிந்தளவுக்கு புரிந்து கொண்டால் நீண்ட நாட்களுக்கு ஆரோக்கியமாக இருக்க முடியுமாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுர்த்தி வங்கி சங்கம் நிரந்தர கட்டடத்தில்

(கண்டாவளை)

கண்டாவளை சமுர்த்தி வங்கிச் சங்கம் தனது சேவை நடவடிக்கைகளை நிரந்தர கட்டடத்தில் ஆரம்பித்துள்ளது.

புளியம்பொக்கணைச் சந்தியில் நேற்றையதினம் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் தனது வாடிக்கையாளர் சேவையை ஆரம்பித்து வைத்து நடத்தி வருகின்றது.

கடந்த காலங்களில் குறித்த சங்க நடவடிக்கைகள் நிரந்தர கட்டமின்றி தற்காலிக கட்டடத்தில் ஒன்றரை வருடகாலமாக இயங்கி வந்தது.

இந்நிலையில் மேற்படி சங்கத்திற்கான கட்டடம் 25 இலட்சம்ரூபாசெலவில் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-263)




# ஆளணி பற்றாக்குறைகளுடன் இயங்கும் மாந்தைகிழக்கு பிரதேசசபை அலுவலகம்

## தேவைகளை பூர்த்தி செய்ய முடியாதுள்ளதாக மக்கள் தெரிவிப்பு

(மல்லாவி)

**தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் கீழுள்ள மாந்தை கிழக்கு பிரதேச சபை அலுவலகத்தில் கடமைகளை நிறைவேற்ற 36 உத்தியோகத்தர்கள் இல்லாது இயங்குவதால் பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்ற முடியாது உள்ளதாக குறித்தபிரதேச மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் குற்றம் சாட்டுகின்றனர்.**

இது தொடர்பாக அவர்கள் தெரிவிக்கையில் மாந்தை கிழக்கு பிரதேச சபையானது 20 கிராம சேவையாளர் பிரிவுகளையும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்களையும் உள்ளடக்கிய பிரதேச சபையாகும்.

இங்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் இன்றி இருப்பதுடன் ஏழு வருடங்களுக்கு மேலாக வரி அறவீட்டாளர் நியமிக்கப்படாது காணப்படுகிறது.

இதனால் பிரதேச சபையிடம் அனுமதி பெற்று அமைக்கப்பட வேண்டிய கட்டடங்கள் மற்றும் வேலைத் திட்டங்களுக்குதொழில் நுட்ப உத்தியோகத்தர் இன்றி காணப்படுகிறது

வரி அறவீட்டாளர் நியமிக்கப்படாமையால் குறித்த பிரதேச சபைக்குட்பட்ட சந்தைகள், வியாபார நிலையங்கள் உட்பட வரி அறவிடக்கூடிய இடங்களில் வரி அறவீடு செய்ய முடியாதுள்ளது.

இப்பிரதேச சபையில் முகாமைத்துவ உதவியாளர்கள் ஐவர் தேவையானவிடத்து மூன்று பேரும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆறு பேர் தேவையான இடத்து ஒருவர் மட்டும் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இவற்றோடு வரி அறவீட்டாளர் இருவர், சாரதிகள் மூவர், அலுவலக உதவியாளர்கள் இருவர், காவலாளி ஒருவர், ஆயுள் வேத மருத்துவ அலுவலர் ஒருவர், மின்னிணைப்பாளர் ஒருவர், ஆயுள் வேத மருந்தாளர் ஒருவர் ஆகிய பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றது.

சுகாதார உதவியாளர்கள் ஐவர் தேவைய ானஇடத்து மூன்று பேரும் தொழிலாளர்கள் ஐவர் கடமையாற்ற வேண்டிய போது இருவரும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் இருவரும் தேவையாகவுள்ளனர்.

இவ்வாறு மொத்தமாக 36 ஆளணிப்பற்றாக்குறைகளுடன் குறித்த பிரதேச சபை இயங்குவதால் இருக்கின்ற உத்தியோகத்தர்களும் மேலதிக அதிகாரிகளின் பணிப்பின் பேரில் ஏனைய மாவட்டங்களில் நடைபெறும் கூட்டங்களுக்கு சென்று விடுவதால் அலுவலகம் முற்றாகவே செயலிழந்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக உத்தியோகத்தர்கள் வெளியிடங்களுக்குசெல்லும்வேளைகளில் மக்கள் தமது தேவையின் நிமிர்த்தம் அலுவலகத்திற்கு நீண்ட தூரங்களில் இருந்து வரும்போது உத்தியோகத்தர்கள் பற்றாக் குறையினால் தமது தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது திரும்பிச்செல்லும் அவல நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவ வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள இப்பிரதேச மக்களும் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளும் கோரிக்கையொன்றை விடுத்துள்ளனர்.(2-15)

## நிதியமைச்சின் அதிகாரிகள் குழு முல்லை.நீதிமன்றிற்கு விஜயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு நிதியமைச்சின் அதிகாரிகள் மற்றும் பொறியியலாளர்கள் நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்டனர்.

அவர்கள் முல்லைத்தீவு நீதிமன்ற கட்டட வசதிகளை பார்வையிட்டதுடன் ஆலோசனைகளையும் வழங்கினர்.


அத்துடன் புதிதாக சகல வசதிகளுடனும் கூடிய நீதிமன்ற கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக முல் லைத்தீவு அரசாங்க அதிபரினால் நீதிமன்ற தேவைக்கு ஒதுக்கப்பட்ட காணியையும் பார்வையிட்டனர்.

நீதிமன்ற கட்டடம் அமைப்பது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா அரச அதிபருடனும் கலந்தாலோசனை நடத்தி மிகவிரைவில் கட்டடப் பணிகள் ஆரம்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக உறுதியளித்துள்ளார்.

மேற்படி விடயம் குறித்து மாவட்ட நீதிபதி, சட்டத்தரணிகள் சங்கம் ஆகியவை ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்திற்கு பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அண்மையில் வருகை தந்திருந்த போது இது தொடர்பாக கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# மன்னார் பொது வைத்தியசாலையை வசதிகளுடன் தரமுயர்த்த நடவடிக்கை

## வடமாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



(குருமன்காடு அடம்பன்

வைத்தியசாலை சுகாதார சேவைகளைப் பார்வையிடுவதற்காக வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி பத்மநாதன் சத்தியலிங்கம் கடந்த 18 ஆம் திகதி திடீர் விஜயமொன்றை மேற் கொண்டு குறை நிறைகளை கேட்டறியும் முகமாக நிர்வாகத்துடன் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது வைத்தியசாலையின் உடனடி தேவைகளை அறிந்து கொண்ட அமைச்சர் அதனை நிவர்த்தி செய்வதற்காக தனது நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒரு தொகை பணத்தை தருவதாக உறுதியளித்தார்.

இவ்விஜயத்தின் பின்னர் கருத்துரைத்த அமைச்சர்,

வடமாகாணவைத்தியசாலைகளில் ஆளணி மற்றும் பௌதீக வளங்களுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது.

குறிப்பாக வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்களுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனை நிவர்த்தி செய்வதற்காக 100 தாதியபயிற்சி முடித்தவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் ஏனைய சேவைகளுக்கான நியமனங்கள் வழங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளது. ஓரிரு மாதங்களில் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படும்.

அத்துடன் உயிலங்குளம் பகுதியில் மாகாணத்திற்கென குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து கிராமிய வைத்தியசாலை அமைக்கப்படவுள்ளது.

இதே வேளை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையை வசதி வாய்ப்புக்களுடன் சுவுயவைத்தியசாலையாக தரமுயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

இதேவேளை அன்றையதினம் மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் முதலில்மன்னார்மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையை ஆயர் இல்லத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது மன்னார் ஆயர் மாவட்டத்தில் நிலவும் பொதுவான சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சருக்கு எடுத்துக் கூறினார்.

இதனைத்தொடர்ந்து மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதில் மாவட்டத்தில் நிலவும் பொதுவான சுகாதார பிரச்சினைகள் தொடர்பில் வைத்திய அதிகாரிகளால் கூறப்பட்டது.

அதற்கான தீர்வினை பெற்றுத் தருவதாக கூறினார். அதனைத்தொடர்ந்து தலைமன்னார் வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட அவர் சுற்றுச்சூழல் சுகாதார பிரச்சினைகளை கவனத்தில் கொண்டார். (2-250)

## பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தொண்டு நிறுவனத்தின் உதவிகள்

(மல்லாவி)

புலம்பெயர் வாழ் உறவான எ.ரஜீவனின் நிதியுதவியுடன் புஸ்பராணி தொண்டு நிறுவனமொன்று அகில இலங்கை ரீதியில் ஆரம்பிக்கப்பட்டு தனது சேவையை தற்போது போரினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு முன்னெடுத்து வருவதாக இத்தொண்டு நிறுவனத்தின் இலங்கைக்கான தலைவி திருமதி ஸ்ரீதர் பவிதா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகஅவர்கூறுகையில்,

தற்போது ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் வன்னி யுத்தத்தின் போது பெற்றோரை இழந்த பிள்ளைகளையும் பிள்ளைகளால் கைவிடப்பட்ட வயோதிபர்களையும் மாற்றுத்திறனாளிகளையும் மற்றும் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்டுள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களை உள்ளடக்கியதுமான 30 குடும்பங்களை தெரிவு செய்து அவர்களுக்கு மாதாந்தம் 4 ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டுவருவதாக அவர் தெரிவித்தார்.

அத்தோடு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அரை ஏக்கர் திட்டக்குடியிருப்பில் வாழும் 135 குடும்பங்கள் குடிநீருக்காக அல்லற்படுகின்றனர்.

இதனை கருத்திற் கொண்டு, இவர்களுக்கான தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஒட்டுசுட்டான் நீர் வழங்கல் பிரிவினால் இக்கிராமத்திற்கு குடிநீர் வழங்குவதற்கு தடையாக இருந்த இரு கிலோமீற்றர் தூரத்திற்கு குழாய்கள் பொருத்துவதற்கான வாய்க்கால் அமைப்பதற்குரிய வேலையை தாம் பொறுப்பெடுத்து அவ் வேலையை முடிவுக்கு கொண்டு வரும் காலம் நெருங்கி விட்டதாக அவர் கூறினார்.

இதேவேளை நீர் வழங்கல் சபையினரும் துரித கதியில் குழாய்களை பொருத்தி வருகின்றனர்.

எதிர்வரும் செப்டெம்பர் மாத நடுப் பகுதிக்குள் இதனூடாக இவர்களுக்கான குடிநீர் வழங்குவதற்கு வழி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (2-15)

# சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளர்கள் தெரிவு

(கிளிநொச்சி)

வடமாகாண விவசாய கமநல சேவைகள் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய வடமாகாண விவசாயத்திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட விரிவாக்க அலுவலகத்தினால் இவ்வாண்டிற்கான சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளர்களை மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் அ.செல்வராசா அறிவித்துள்ளார்.

வீட்டுத்தோட்ட தெரிவுக்கான மதிப்பீட்டில் நீர், நிலம் வளங்களின் வினைத்திறனான பயன்பாடு, சேதன விவசாய, ஒருங்கிணைந்த விவசாய செயற்பாடுகள், இயற்கை கழிவுகளின் மீள்சுழற்சி நடவடிக்கைகள், தொடர் உற்பத்தியை பெறுவதற் கான நடவடிக்கைகள், சூழலோடு நட்பான பீடை, நோய் முகாமைத்துவ முறைகள், தேனீ வளர்ப்பு, காளான் செய்கை, பெறுமானம் சேர் உற்பத்திகளின் தயாரிப்பும் பயன்பாடும் ஆகிய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை சம்பந்தப்பட்ட விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் அல்லது மாவட்ட விவசாய (விரிவாக்கம்) காரியாலயத்தில் இருந்து பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம்திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

முதற்கட்ட தெரிவானது விவசாயப் போதனாசிரியர் மட்டத்தில் இடம் பெற்று 3 சிறந்த செய்கையாளர்கள் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இரண்டாம் கட்ட தெரிவானது விவசாயப்போதனாசிரியர் மட்டத்தில் முதலிடம் பெற்றவர்கள் மத்தியில் நடத்தப்பட்டு மாவட்ட மட்டத்தில் 3 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பெறுமதி வாய்ந்த பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

இது தொடர்பாக மேலதிகவிபரங்களை பெற 0773640331, 0771270455, 0212285726 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறிந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளின்றி இயங்குகிறது கரணவாய் அந்திரான் சந்தைத்தொகுதி

கரணவாய் அந்திரான் சந்தைப் பகுதியில் அடிப்படை வசதிகள் எதுவும் செய்து தரப்படவில்லை என வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த சந்தையில் மலசலகூடம், குடி தண்ணீர் வசதி என்பன இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


நீண்ட காலமாக அடிப்படை வசதிகள் எதுவுமின்றி இயங்கிக் கொண்டிருக்கும் குறித்த சந்தைத் தொகுதியில் தற்போது வியாபாரிகளின் நடவடிக்கை குறைவாகவே உள்ளது என நுகர்வோரினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வியாபாரிகளின் தொழில் நடவடிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் சந்தைகளில் கொள்வனவு செய்யும் மரக்கறிகளின் விலையும் உயர்வடைந்துள்ளது.

இதனால் நுகர்வோர் மரக்கறிகள் மற்றும் மீன்களை கொள்வனவு செய்வதில் மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பல தடவைகள் கரவெட்டி பிரதேச சபைக்கு வியாபாரிகளால் கோரிக்கை விடப்பட்டிருந்தும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே குறித்த சந்தைத் தொகுதிக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அங்குள்ள வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் கரவெட்டி பிரதேச சபைக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)




# வடக்கு விவசாய அமைச்சினால் தீவகத்திற்கு நீர்விநியோக திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சால் ஊர்காவற்றுறை தம்பாட்டி கிராமத்துக்கான குடிநீர் விநியோகம் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் நிலவும் வழமைக்கு மாறான வரட்சியால் பல்வேறு இடங்களிலும் குடிநீருக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவி வருகிறது. உள்ளூராட்சி மன்றங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகள் குடிநீர் வழங்கலை பவுஸர்கள் மூலம் மேற்கொண்டு வந்தபோதும் குடிநீருக்கான தட்டுப்பாடு இன்னும் தீர்ந்தபாடில்லை.

இந்நிலையில் அண்மையில் வடமாகாண விவசாய அமைச்சில் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளுடன் குடிநீர் வழங்குதலை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.



இதில் உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொள்ளும் குடிநீர் வழங்கும் சேவைக்கு மேலதிகமான உதவி தேவைப்படின் அதனை வடக்கு மாகாண விவசாய அமைச்சு வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையிலேயே தம்பாட்டி கிராமத்துக்கு பவுஸர்கள் மூலம் நீர் வழங்கும் திட்டத்தை வடமாகாண விவசாய கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு ஊர்காவற்றுறை பிரதேச சபையுடன் இணைந்து கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தீவகத்திலுள்ள ஏனைய பகுதிகளுக்குமான குடிநீர் விநியோகத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படுமெனவும் மாகாண சபை உறுப்பினர்கள் உறுதியளித்துள்ளனர்.

தம்பாட்டி கிராமத்துக்கு நீர்வழங்கும் நிகழ்ச்சி அக்கிராமத்தின் பொதுநோக்கு மண்டபத்தில் சம்பிரதாயபூர்வமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அமைச்சர் ஐங்கரநேசன், வடமாகாணசபை உறுப்பினர்களான பா.கஜதீபன், விந்தன் கனகரட்ணம், இ.ஆனோல்ட், ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் செயலாளர் என். சுதர்ஜன், தம்பாட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் அ.அனனராசா, நீர் வழங்கல் திட்டத்துக்கு நிதி உதவி வழங்கிய அன்பே சிவம் அமைப்பின் வடகிழக்கு மாகாண இணைப்பாளர் கு.குமணன் உட்பட கிராமத்து மக்களும் கலந்து கொண்டிருந்தனர். (இ)

## நோயற்ற வாழ்வு சுகாதார கண்காட்சி நல்லூரில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் கண்காட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

நோயற்ற வாழ்வு எனும் கருப்பொருளில் அமைந்துள்ள கண்காட்சி நல்லூர் கந்தசுவாமி கோவிலின் பின்புறமாக சிவன் கோயிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள இந்து விடுதியில் கடந்த 15 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஆரோக்கிய வாழ்வு, போசணை, பதாதை கண்காட்சி (போஸ்ரர்) என்று மூன்று பிரிவுகளாக இக்கண்காட்சி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

ஆரோக்கிய வாழ்விற்கான எட்டு படி முறைகள்,தொற்றாநோய்களைஎவ்வாறு ஆரம்பத்திலேயே தடுத்தல், அபாய நிலையை எவ்வாறு அறிவது, சராசரியாக ஒருவர் பாவிக்கக்கூடிய சீனி, உப்பின் அளவுகள் கணிப்பிடும் முறை, உடற்பயிற்சியின் நன்மைகள், இதயத்திற்கு தீங்கான உணவுகள், அன்று எம் முன்னோர் எவ்வாறு தொற்றாநோய்களிலிருந்து தப்பித் துக் கொண்டார்கள், விபத்து தடுப்பு, பாது காப்பான வீடு, புகைத்தல், மதுபானங்களால் ஏற்படும் குடும்பப்பிறள்வுகள், போதைக்கு அடிமையாகாமல் இளம் பிள் ளைகளை வளர்ப்பது எப்படி, தற் கொலை ஏன், பாலைவனமாக மாறும் யாழ்ப்பாணத்தின் நிலக்கீழ் நீரை பேண நாம், எம்மட்டத்தில் என்ன செய்ய வேண்டும் என்று, வாழ்வியலின் பல மட்டங்களையும் இக்கண் காட்சி உள்ளடக்கி நிற்கின்றது. மிக இலகுதமிழில்நடைமுறையில் கடைப்பிடிக்கக்கூடிய பல விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ)

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வாகனப் பாதுகாப்பு தரிப்பிடத்தில் மோசடிகள் இடம்பெறுவதாக புகார்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் வண்டி பாதுகாப்பு தரிப்பிடத்தில் அறவிடப்படுகின்ற கட்டணங்களில் மோசடி இடம்பெறுவதாக பாவனையாளர்களினால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த பாதுகாப்பு தரிப்பிடத்தில் வைத்தியசாலைக்கு செல்லும் வெளிநோயாளர்கள் மற்றும் நோயாளர் விடுதியை பார்வையிடச் செல்வோர் என பலர் தமது துவிச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் வண்டிகளை நிறுத்தி விட்டு செல்கின்றனர்.

ஆனால் இங்கு அறவிடப்பட்ட கட்டளைகளில் பகல்வேளை ஒரு கட்டணமாகவும் இரவுவேளை இன்னொரு கட்டணமாக அறவிடப்படுவதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

பகல் வேளையில் துவிச்சக்கர வண்டிக்கு 5 ரூபாவும், மோட்டார் வண்டிக்கு 10 ரூபாவும் அறவிட நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இரவு வேளையில் துவிச்சக்கர வண்டிக்கு 10 ரூபாவும், மோட்டார் வண்டிக்கு 20 ரூபாவும் அறவிடப்படுகின்றது என மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் தொடரக் கூடாது எனவும் இத்தகைய நடவடிக்கைகள் உடன் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

இச் செயற்பாட்டினை வைத்தியசாலை நிர்வாகம் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் பொதுமக்கள் பலரும் கேட்டுள்ளனர். (இ-60)




## புகைத்தல் பொருட்களை தவிர்க்கும் வர்த்தகர்கள்

தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி பிரிவிலுள்ள உணவகங்கள் உள்ளிட்ட வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் புகைத்தல் பொருட்கள் விற்பனை செய்வதைத் தவிர்த்து வருவதை காணக் கூடியதாகவுள்ளதென தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி எஸ்.நந்தகுமார் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி பிரிவிலுள்ள வர்த்தக நிலையங்கள், உணவகங்களின் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன், சுகாதார வைத்தியதிகாரி பணிமனை, சைவ மகா சபை, சுகாதார அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், மற்றும் பொது மக்கள் உள்ளிட்டவர்கள் இணைந்து புகைத்தலுக்கு எதிரான பேரணி யையும் நடத்தியிருந்தனர்.

இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக தற்போது தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி பிரிவிலுள்ள பல வர்த்தக நிலையங்கள் புகைத்தல் பொருட்களை விற்பனை செய்வதை தவிர்த்துள்ளதாகத் தெரிவித்தார்.

ஏனைய வர்த்தகர்களும் புகைத்தல் பொருட்கள் விற்பனை செய்வதை தவிர்க்க முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-23)





யாழ்.நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன தெய்வீக அரங்கில் கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய மாணவிகளதும் நல்லை கலாமன்ற சாரங்கா இசை மன்றம் இணைந்து நடத்திய பரதநாட்டிய நிகழ்வும் குழு இசை நிகழ்வும் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போது (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்றையதினம் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி யாழ். மாவட்ட செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டமொன்று இடம் பெற்றுள்ளது.

முற்போக்கு தமிழ்த்தேசியக்கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்திற்கு தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் ஆதரவு வழங்கி போராட்டத்தில் இணைந்திருந்தனர்.

யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாக நேற்றுமுற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகிய இவ் ஆர்ப்பாட்டம் 11மணிவரை இடம்பெற்றது.

பல வருடங்களாக காரணமின்றியும் வழக்குத் தொடரப்படாமலும் அரசியல் நோக்கங்களுக்காகவும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரியே மேற்படி ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளது.

அரசியல் கைதிகள் தொடர்பில் நீண்டகாலமாக எவரும் குரல் கொடுக்காத நிலையிலேயே தாம் இவ் ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்து நடத்தியுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

பொலிஸார், இராணுவத்தின் கெடுபிடிகள் எவையுமின்றி ஒரு மணிநேரம் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் கணிசமானோர்கலந்துகொண்டு அரசியல்கைதிகளைவிடுதலை செய்யுமாறு கோசம் எழுப்பியிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், அழிக்காதே அழிக்காதே எதிர்காலத்தை அழிக்காதே, துரோகிகளுக்கு சிம்மாசனம்அப்பாவிகளுக்கு சிறைசுவமா?, விளையாடாதே விளையாடாதே அரசியல் கைதிகளின் வாழ்வில் விளையாடாதே, விடுதலை செய்விடுதலைசெய், அரசியல் கைதிகளை விடுதலை செய், மன்னிப்புக் கொடு மன்னிப்புக்கொடு அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்புக் கொடு என எழுதப்பட்ட பதாகைகளை தமது கைகளில் ஏந் தியிருந்தனர்.

எவ்வித குற்றச்சாட்டுகளுமின்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியற் கைதிகளின் குடும்பங்கள் நிர்க்கதி நிலையிலுள்ளன. அவர்களது பிள்ளைகள் பாடசாலைக்கும் செல்லாது சிறுவயதிலேயே தொழிலுக்குச் சென்று தமது குடும்பத்தின்வறுமையை போக்கமுயல்கின்றனர்.

ஆகவே இது தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கையெடுக்கவேண்டும். அவர்களைவிடுவிக்கும் வரை எமது போராட்டம் தொடர்ந்த வண்ணமிருக்கும் என ஆர்ப்பாட்டத்தில்உரையாற்றியோர்தெரிவித்தனர். (இ-4-23)

## பாதுகாப்பான புகையிரத பாதை அமைக்க வேண்டும்

### மக்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பான புகையிரதப் பாதை அமைக்கக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டம் நேற்று காலை 9 மணியளவில் யாழ்.நந்தாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சிறு வீதியை ஊடறுத்துச் செல்லும் புகையிரதப் பாதையில் பாதுகாப்பான புகையிரதக் கடவை அமைத்து மக்கள் போக்குவரத்தினை ஏற்படுத்தக்கோரியே இப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(இ-4)

# முதலமைச்சர் குழுவின் விசாரணையை எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளேன்

## யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் இடம்பெற்றதாக குற்றம் சாட்டப்படும் ஊழல்கள், மோசடிகள் தொடர்பில் வடக்கு முதலமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவினை எதிர்கொள்ளத் தான் தயார் என யாழ். மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகரசபையினால் யாழ்.நகரில் கடைகள் பகிரங்க கேள்வி அறிவித்தல் மூலம் குத்தகைக்கு கொடுக்கப்பட்டன.

அவற்றை சில கடைக்காரர்கள் உபகுத்தகைக்கு கொடுத்துள்ளனர்.

அவ்வாறானவற்றைமாநகரசபை கண்டறிந்து சில கடைகளை மாத்திரம் மீள் கேள்வி கோரல் மேற் கொண்டது.

எனினும் ஏனைய கடைகள் உபகுத் தகைக்காரர்களுக்கேகேள்வி கோரலின்றி வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாநகர சபையில் இடம் பெற்றமோசடிகள் குறித்து விசாரிக்கப்பட வேண்டுமென்று வடக்கு மாகாண சபையில் இரு தடவை தீர்மானம்நிறைவேற்றப்பட்டும் இருந்தன.

இவ்வாறான தொரு நிலையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரும் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் மாநகர சபையின் ஊழல் மோசடிகளை விசாரணைசெய்ய விசாரணைக்குழுவொன்றை நியமித்திருந்தார்.

இதுதொடர்பில்யாழ். மாநகரசபை முதல்வரிடமும் நேற்றைய தினம்கேட்டபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


யாழ்.மாநகர சபையில் கடந்த 5 வருட காலம் எவ்வித ஊழல் மோசடிகளும்இடம்பெறவில்லை.

கடந்த5வருடகாலத்திற்கும் யாழ்.மாநகர எல்லைக் குள் காணப்பட்ட அனைத்து இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களும் விடுவிக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் விசாரணை குழுவுக்கு நான் பயப்படப் போவதில்லை. அக்குழு உண்மைகளை கண்டறியட்டும் அதனைநான்எதிர்கொள்ளத் தயார் என்றார் மாநகர முதல்வர். (இ-4)

# ஆறாத்துயர நினைவில்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 1988 | 2008 |
| 05 | 08 |
| 05 | 26 |



## சிவானந்தசுந்தரம் பிறேமதர்ஷன் (தர்ஷன்)

(யாழ்/ இந்துக் கல்லூரி 2007 - உயிரியல் மாணவன்)

திதி 2014.08.21

அன்புயிராய் வந்து பண்பே உருவாய் வளர்ந்து
ஆருயிராய் திகழ்ந்து எம் பாச உயிரே தர்ஷனே
நோய் நொடியென பாய்படுக்காது
எமக்கோர் வார்த்தை கூறாது
ஆவணி அபர ஏகாதசித்திதிதனில் அவலமாய் போனீரோ
எமை தவிக்கவிட்டுச் சென்று ஆண்டாறானதோ
காலங்கள் விரைந்தாலும் உன் நினைவுகள் அழிந்திடுமோ
எம் நெஞ்சம் தான் தேறிடுமோ

*உன் நினைவால் தவிக்கும்*

*அம்மா, அப்பா, தம்பி*

நெல்லியோடை, புலியனை,
அச்சுவேலி (7459) உடுப்பிட்டி

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532

## வலம்புரி- சங்குநாதம் செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

**வடமாகாணத்தில்**

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- முல்லைத்தீவு
- வவுனியா
- மன்னார்

ஆகிய மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு பிரதேசங்கள் மற்றும் ஊர்களுக்கான செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் மூலை முடுக்குகளில் உள்ள அத்தனை பிரச்சினைகளையும் வெளிக்கொண்டுவந்து தீர்விணைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தல் என்ற நோக்கில் வடபிராந்தியம் முழுமைக்கும் செய்தியாளர்களை இணைக்கும் இத்திட்டத்தில்,

ஆர்வம், எழுத்தாற்றல், சமூக நோக்குள்ள- நேர்மையுடன் பணியாற்றக்கூடிய இருபாலாரும் இச் செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

முழுப்பெயர், தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ . இல, தொலைபேசி இல, மின்னஞ்சல், விவாக நிலைமை, கல்வித் தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் தங்களைக் கேட்டறியக் கூடிய, உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசம் உள்ளடங்கலாக, சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

**பிரதம ஆசிரியர்**
**வலம்புரி**
**இல.3,2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண்வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**விண்ணப்ப முடிபுத் திகதி: 21.08.2014**

குறிப்பு:-நேர்முகத் தேர்வு அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும்

**பிரதம ஆசிரியர், வலம்புரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏர் நடக்கும் எனில் இயல், இசை, நாடகம் நடக்கும்;
பார் நடக்கும்; பசி நடக்க மாட்டாதே.
– கம்பர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அறிவியலைப் பரப்புரை செய்யுங்கள்

விவசாயத் துறையில் அறிவியலைப் புகுத்துவதில் தமிழ்நாடு பாரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இதன் காரணமாக அங்கு விவசாய உற்பத்தி பெருக்கம் அடைந்து, வர்த்தகம் மற்றும் கைத் தொழில் முயற்சிக்கு ஈடான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.

விவசாயத்துறையை விருத்தி செய்யும் பொருட்டு ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் அறிவியல் பரப்புரை; விவசாயிகளிடையே பாரிய மாற்றத்தை – முன்னேற்றத்தை ஏற்படுத்தி, தமிழகம் தனித்துவமான வெற்றியடைந்துள்ளது.

இந் நிலைமை இலங்கையின் முழுமையிலும் மந்தமாகவே இருக்கிறது எனலாம். அதிலும் போர்க் காலச் சூழல் வடக்கு மாகாணத்தின் விவசாயத் துறையை நலிவடையச் செய்து விட்டது.

எந்தவொரு நாடும் தனித்து தனது காலில் நிற்க வேண்டுமாயின் அந்த நாடு விவசாயத்தில் கணிசமான அளவு அபிவிருத்தியடைந்திருக்க வேண்டும்.

விவசாயத்திலிருந்து விடுபடுகின்ற நாடுகள், பிரதேசங்கள் வறுமையைச் சந்திக்கும் ஆபத்தை எந்நேரமும் கொண்டிருக்கும் என்பது தவிர்க்க முடியாத உண்மை. எனவே விவசாயம் என்பது எங்கள் ஒவ்வொரு வருக்கும் தேவையானதும் அவசியமானதுமாகும் எனினும் யுத்தத்தால் பாதிப்படைந்த வடமாகாணம் விவசாயத்திலேயே பெரும் பின்னடைவைச் சந்தித்தது எனலாம்.

ஆகவே வடக்கு மாகாணத்தில் விவசாயத்துறை மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும். இந்த முயற்சியில் வடக்கு மாகாண விவசாய அமைச்சு பாடுபடுவது பாராட்டுக்குரியது.

அதேநேரம் வடக்கு மாகாணத்தின் விவசாயத் துறைக்கு மக்களை உள்வாங்குவது என்பது பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக விவசாயத்துறை சார்ந்த அறிவியலை; தொழில்நுட்பத்தை; சந்தைப்படுத்தும் வாய்ப்புகளை; பதனிடல் முயற்சிகளை அறிமுகம் செய்வதோடு கடுமையான பரப்புரைகளும் செய்யப்பட வேண்டும்.

பல்கலைக்கழகப் பட்டதாரி ஒருவர் குறைந்தது மூன்று ஏக்கர் நிலத்தில் விவசாயச் செய்கையில் ஈடுபடுவதான ஏற்பாடுகளைச் செய்வதும் அவசியம். இதற்கான ஒரேவழி விவசாய அறிவியலை – தொழில்நுட்பத்தை தாராளமாக இறக்குமதி செய்வ தாகும்.

முன்னைய காலத்தில் மூன்று பரப்பில் விவசாயம் செய்வதில் செலவிட்ட மனித வலுவைக் கொண்டு மூன்று ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யக் கூடியதான தொழில்நுட்பத்தைப் பிரயோகிப்பதே வீழ்ந்து போன எங்கள் விவசாயத் துறையை எழுச்சிகரமாக மீட்டெடுப்பதற்கான ஒரே வழியாகும்.

இவையாவற்றுக்கும் மேலாக விவசாய அறிவியலை மிகப் பெருமெடுப்பில் பரப்புரை செய்ய வேண்டும். இல்லையேல் பழமைவாத மூட நம்பிக்கைகள் களத்தில் இருக்கக் கூடிய விவசாயிகளையும் வெளி யேற்றிவிடும்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஓர் அன்பர் ஒரு மயானத்திற்கு அருகில் அங்கும் இங்கும் திரிவதாக இருந்தார். கூடவே அவரின் கையில் ஒரு பொலித்தீன்பை. ஏதோ ஒன்றைத் தேடுவது போல அவரின் பாவனை நமக்கு உணர்த்தியது.

ஐயா! ஏதாவது பிரச்சினையா? என்று கேட்டோம். அதற்கு அவர் இந்தப் பையை ஆலமரத்தில் கட்ட வேண்டும் என்றார். நிலைமையைப் புரியாமல் என்ன சங்கதி என்று வினவினோம். அதற்கு அவர் பின்வருமாறு பதில் தந்தார்.

எங்கள் வீட்டு மாடு கன்று போட்டுள்ளது. இது மாட்டின் இளங்கொடி. இதனை ஆலமரத்தில் கட்டினால் தான் மாடு நன்றாகப் பால் கறக்கும் என்றார் அந்த அன்பர்.

கடவுளே! மில்க் மாஸ் விற்பனைக்கு வந்து பல வருடமாகிவிட்ட போதிலும் இப்போதும் மாட்டின் இளங்கொடி கட்ட ஆலமரம் தேடும் எங்கள் அவலம் போகவே இல்லை.

இந்த அறியாமை மாட்டின் பாலையும் குறைத்து மயானத்தையும் அசுத்தமாக்கும் செயல் என்பதையும் மாட்டிற்கு மில்க்மாஸ் வைத்தால் பால் உற்பத்தி அதிகரிக்கும் என்பதும் பகிரங்கமாகப் பரப்புரை செய்யப்பட வேண்டும் அல்லவா?

ஓ! மயானத்து ஆல மரங்களே! விக்கிரமாதித்தர்கள் இல்லாததால் ஆடு, மாடுகளின் இளங்கொடி தான் உங்களில் தொங்கும் வேதாளங்கள் போலும்.

# இலவச வகுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன

## இணைய விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள 3 மாதகால இலவச சிங்கள, ஆங்கில வகுப்புக்கள் கடந்த 9 ஆம் திகதியில் இருந்து நடத்தப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலெட்சுமி அறிவித்துள்ளார்.

இக்கற்கை நெறிகள் யாழ். ஆனைப் பந்தி பருத்தித்துறை வீதியிலுள்ள குருகுலத்தில் இடம்பெற்றுவருகிறது.

சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்களில் மட்டும் இவ் வகுப்புக்கள் நடைபெற்று வருகிறது.

இதில் சனிக்கிழமையில் முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 10.35 மணி வரை ஆங்கில வகுப்புக்களும் தொடர்ந்து முற்பகல் 10.45 மணி தொடக்கம் நண்பகல் 12.15 மணி வரை சிங்கள வகுப்புக்களும் இடம் பெறுவதோடு ஞாயிற்றுக் கிழமையில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணிவரை சிங்கள வகுப்பும் தொடர்ந்து முற்பகல் 10.45 மணி தொடக்கம் நண்பகல் 12.15 மணி வரை ஆங்கில வகுப்பும் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இக்கற்றை நெறியில் இந்து குருமார் அறநெறி ஆசிரியர்கள் ஆலய நிர்வாகத்தினர் அறநெறி உயர் தர மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் போன்ற பிரிவினர் இணைந்து கொள்ள முடியும்.

மேற்படி கற்கை நெறிக்கு புதிதாக இணைய விரும்புவோர் யாழ். மாவட்ட இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ

# தெய்வீக சுகானுபவம் III

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் கோவில் மஹோற்சவத்தினை முன்னிட்டு வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு யாழ். இந்திய துணைத் தூதுவராலயத்தின் அனுசரணையில் தென்னிந்திய பிரபல பரத நாட்டிய பேரொளி ஸ்ரீமதி லாவண்ஜா ஆனந் குழு வினரும் பிரபல கர்நாடக இசைப்பாடகர் ரி.வி.ராம் பிரசாத் குழுவினரும் இணைந்து வழங்கும் தெய்வீக சுகானுபவம் III இசை நிகழ்வும் பயிற்சிப்பட் டறை யும் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் மறுநாள் 25 ஆம் திகதி திங்கட்கிழமையும் இடம் பெறவுள்ளது.

இதற்கமைய 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் ஸ்ரீமதி லாவண்ஜா ஆனந்தின் நாட்டிய ப் பயிற்சிப்பட்டறையும் மாலை 6.30 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பில் நாட்டிய நிகழ்வும் இடம் பெறவுள்ளதோடு மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் ஸ்ரீ ரி. வி.ராம் பிரசாத்தின் இசைப் பயிற்சிப் பட்டறையும் மாலை 6.30 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பில் இசைக் கச்சேரியும் இடம் பெறவுள்ளது. (இ

# சனிக்கிழமை இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் நல்லூர் மத்தியஸ்த சபை அமர்வு இம்முறை நல்லூர் தேர்த்திருவிழா வருவதனால் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறாது என்றும் குறித்த தினத்திற்கு முதல் நாள் 23 ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெறு மெனவும் மத்தியஸ்த சபைத் தலைவர் நா.நித்தியானந்தன் அறிவித்துள்ளார். (இ

# பொது பல சேனாவிற்கு வாசுதேவ சவால்

(கொழும்பு)

பொது பல சேனா அமைப்பிற்கு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சவால் விடுத்துள்ளார். அமைச்சர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருந்தால் அதனை சந்திக்கு சந்தி சென்று கூறுவதில் பயனில்லை.

ஊழல் மோசடிகளில் அமைச்சர்கள் ஈடுபட்டிருந்தால் லஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ய வேண்டும். அல்லது நீதிமன்றில் வழக்குத் தொடர முடியும். குற்றம் செய்யும் அமைச்சர் ஒருவருக்கு எதிராக எவரும் முறைப்பாடு செய்ய முடியும். குற்றச்சாட்டுக்களை முன வைப்பது ஜனநாயகரீதியான உரிமையாகும்.

எனக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருந்தால் என்னை வீட்டுக்கு அனுப்புமாறு பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு சவால் விடுகின்றேன்.

குற்றச் செயல்களில் ஈடுபடும் எந்தவொரு அமைச்சருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சிங்கள ஊடகமொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். (எ-11)

# சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம்

**21.08.2014 இற்கான வினா**

**"ஸரஸ்வதி நமஸ்துப்யம்
வரதே காம ரூபிணி
வித்யாரம்பம் கரிஷ்யாமி
ஸித்திர்பவது மே ஸதா" என்ற ஸரஸ்வதி மந்திரத்தின் பொருள் யாது?**

**20.08.2014 இற்குரிய கேள்வியும் விடையும்**

**அஹிம்சை என்னும் விழுமியம் மூலம் நீர் விளக்கிக் கொள் வது யாது?**

☞ ஜீவராசிகள் அனைத்திற்கும் எண்ணம்,சொல்,செயல் என்பன வற்றால் எவ்வித தீங்கும் விளைவிக்காமல் **வரையறையின்றி**

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும்


சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,

# சத்திய தரிசனம்



## பெற்றோரே தெய்வம்

- உலகில் உள்ள அனைத்தும் மாறுதலுக்கு உட்பட்டது. மாற்றம் ஒன்றே, என்றைக்கும் மாறாதது.
- மனித உடலை நமக்களித்த பெற்றோரை, கடவுளாக மதித்துப் போற்றுங்கள்.
- குழந்தைகளை சிறுவயதிலிருந்தே பஜனை, தியானம் போன்றவற்றில் ஈடுபட வழிகாட்டுங்கள்.
- "நான்" என்ற ஆணவம் கொண்டவனை என்றென்றும் துன்பம் தொடர்ந்து கொண்டிருக்கும்.
- மற்றவர்களின் வற்புறுத்தலுக்காக தொண்டில் ஈடுபடக் கூடாது; அன்புக்காக தொண்டாற்றுவதே சிறந்தது.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## மன அமைதி

✦ மனதில் எவ்வித சஞ்சலமும் இல்லாமல் குழப்பமும் இல்லாமல் மிகத் தெளிவான மனதுடன் இருப்பதுதான் வாழ்க்கை. சுருக்கமாகக் கூறினால் வாழ்க்கையின் அர்த்தமே மன அமைதி.

✦ மன அமைதியுடன் செய்யும் எந்தக் காரியமும் வெற்றி பெறும். இதனால் மனம் வலுவடையும். மன வலிமையால் சாதிக்க முடியாத காரியம் எதுவுமே இல்லை.

✦ மெதுவான ஆழ்ந்த மூச்சு விடுபவர்கள் சாதனையாளர்களாகவும் வெற்றி பெறுபவர்களாகவும் இருப்பார்கள்.

✦ வேகமாக இலேசான மூச்சு விடுபவர்கள் கூச்சலிடுபவர்களாகவும் பிறரை நம்பியே வாழ்க்கை நடத்துபவர்களாகவும் இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானை எதிர்த்து களமிறங்கும் ஒரு நாள் போட்டிக்கான இலங்கை அணி




பாகிஸ்தானுக்கு எதிரான சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான இலங்கை அணியின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுழற்பந்து வீச்சாளர் சுராஜ் ரந்திவ், வேகப் பந்து வீச்சாளர் தம்மிக பிரசாத், சகலதுறை வீரர் திசர பெரேரா ஆகியோர் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

சுராஜ் ரந்திவ் 2011 ஆம் ஆண்டுக்கு பின்னர் இலங்கை ஒருநாள் குழாத்தில் இடம் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**இலங்கை அணி:**

அஞ்சலோ மத்யூஸ் (கப்டன்), திலகரட்ன டில்ஷான், உபுல் தரங்க, குமார் சங்கக்கார (விக்கெட் கீப்பர்), மஹேல ஜெயவர்தன, தினேஷ் சந்திமால், அஷான் பிரியன்யன், லகிரு திரிமன்னே, லசித் மலிங்கா, நுவான் குலசேகர, தம்மிக்க பிரசாத், ரங்கன ஹேரத், சேகுகே பிரசன்னா, ரந்திவ், திசாரா பெரேரா. (க)

# முன்னேறியது இலங்கை; முடங்கியது இந்தியா



இங்கிலாந்து - இந்தியா மற்றும் இலங்கை-பாகிஸ்தான் டெஸ்ட் தொடர்கள் முடிவடைந்த நிலையில், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

புதிய தரப்படுத்தலின்படி தென் ஆபிரிக்க அணி முதலிடத்திலும், அவுஸ்திரேலிய அணி இரண்டாமிடத்திலும், இங்கிலாந்து அணி மூன்றாமிடத்திலும் உள்ளன.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட தொடரில் தோல்வி அடைந்த இந்திய அணி 6 புள்ளிகளை இழந்து நான்காவது இடத்திலிருந்து ஐந்தாவது இடத்திற்கு பின்னடைந்துள்ளது.

இந்தியாவுக்கு எதிரான தொடரை கைப்பற்றி அசத்திய இங்கிலாந்து அணி இரண்டு இடம் முன்னேறி மூன்றாமிடத்திற்கு முன்னேறியுள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை 2-0 என்ற கணக்கில் தன்வசப்படுத்திய இலங்கை அணி ஐந்தாமிடத்திலிருந்து நான்காமிடத்திற்கு முன்னேறியுள்ளது.

இலங்கையிடம் படுதோல்வி அடைந்த பாகிஸ்தான் அணி 7 புள்ளிகளை இழந்த நிலையில் மூன்றாமிடத்திலிருந்து ஏழாமிடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் தலா 96 புள்ளிகள் பெற்ற போதிலும் மயிரிழையில் இந்தியா பாகிஸ்தானை விட முன்னிலையில் இருக்கிறது. (க)

# இங்கிலாந்து அணியில் அலெக்ஸ் ஹேல்ஸ்




இந்திய அணியுடன் ஒருநாள் போட்டித் தொடரில் மோதவுள்ள இங்கிலாந்து அணியில் தொடக்க வீரராக அலெக்ஸ் ஹேல்ஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அறிமுக வீரரான ஹேல்ஸ், கப்டன் அலஸ்டர் குக்குடன் இணைந்து இனிங்சை தொடங்கவுள்ளார். ஆல் ரவுண்டர் ரவி போபாரா அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார். நட்சத்திர வேகப் பந்துவீச்சாளர் ஸ்டுவர்ட் ப்ராட் முழங்கால் மூட்டு காயத்துக்கு அறுவை சிகிச்சை செய்து கொள்ளவுள்ளதால், அவருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது. அவருக்கு பதிலாக ஸ்டீவன் பின்னுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. முதல் ஒருநாள் போட்டி பிரிஸ்டல் கவுன்டி மைதானத்தில் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இங்கிலாந்து அணி: அலஸ்டர் குக் (கப்டன்), அலெக்ஸ் ஹேல்ஸ், கேரி பேலன்ஸ், ஜோ ரூட், இயான் பெல், ஜோஸ் பட்லர், இயான் மார்கன், மொயீன் அலி, ஜேம்ஸ் ஆண்டர்சன், ஸ்டீவன் பின், ஹாரி கர்னி, கிறிஸ் ஜோர்டான், பென் ஸ்டோக்ஸ், ஜேம்ஸ் டிரெட்வெல், கிறிஸ் வோக்ஸ். (க)

## உதைபந்தாட்ட போட்டி யங்கம்பன்ஸ் வெற்றி

வடமராட்சி கிழக்கு உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமராட்சி கழகங்களுக்கிடையிலான 9 நபர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுத்தொடரின் முதலாம் போட்டி கடந்த திங்கட்கிழமை உடுத்துறை செந்தமிழ் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இவ் ஆட்டத்தில் வடமராட்சி கிழக்கு வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மோதிய V.V.T கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

யங்கம்பன்ஸ் சார்பாக ரதன், பிரகாஸ், காந்தன், ரூபன் தலா ஒவ்வொரு கோல்களை போட்டனர். (க-23)

# மன்னார் உதைபந்தாட்ட லீக் வெற்றி

(குடத்தனை)

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி கொலின்ஸ் விளையாட்டு மைதானத்தில் வடமராட்சி லீக் உதைபந்தாட்ட லீக் அணிக்கும் மன்னார் உதைபந்தாட்ட லீக் அணிக்கும் இடையில் நடைபெற்றது.

இப் போட்டியில் 2 கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றால் மாத்திரமே அடுத்த சுற்றுக்கு செல்லலாம் என்ற நிர்ப்பந்தத்தில் வடமராட்சி லீக் அணியும் இப்போட்டியை சமனிலைப்படுத்தினாலே அடுத்த சுற்றுக்கு தெரிவாக முடியும் என்ற நிலையில் மன்னார் லீக் அணியும் களமிறங்கின.

ஆட்டம் தொடங்கியதும் இரு அணி வீரர்களும் உத்வேகத்துடன் மோதிக்கொண்டனர்.

ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் மன்னார் லீக் அணி வீரர் பி.ஜெபானேசன் எதிரணி வீரர்களின் தடுப்புக்களைத் தகர்த்து முதலாவது கோலினை அடித்து தனது அணியை முன்னிலை வகிக்கச் செய்தார். இதனைத் தொடர்ந்து ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்தது.

வடமராட்சி லீக் அணியின் வீரர்களின் சாதுரியமான விளையாட்டினால் அவ் அணியின் வீரர் குவேரதன் அடித்த கோலின் மூலம் இரு அணிகளும் சமனிலை பெற்றன. தொடர்ந்து அடுத்த மூன்றாவது நிமிடத்தில் வடமராட்சி லீக் அணியின் கோல்ப்பரப்பை ஆக்கிரமித்த மன்னார் அணியின் வீரன் எஸ்.சஜீவன் தனது அணிக்கான இரண்டாவது கோலைப் பதிவு செய்ய மன்னார் லீக் அணி ஒரு கோலினால் முன்னிலை வகித்தது. தொடர்ந்து இரு அணிகளும் போராடிய போதும் முதற்பாதி ஆட்டத்தில் மேலதிக கோல்கள் எதனையும் போடமுடியவில்லை. இதனால் முதற்பாதி ஆட்ட நேர முடிவில் மன்னார் லீக் அணி 2:1 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகியது முதலே இரண்டு அணியினரும் மிகுந்த உற்சாகத்துடன் மோதிக்கொண்டனர். ஆனாலும் மன்னார் லீக் அணி வீரர்கள் வடமராட்சி லீக் அணியினரின் கோல்ப்பரப்பிற்குள் ஊடுருவி கோல்க்கம்பத்தை நோக்கித் தாக்குதல் ஆட்டத்தைத் தீவிரப்படுத்தினர்.

வடமராட்சி லீக் அணிவீரர்கள் சுதாகரிப்பதற்குள் மன்னார் லீக் வீரர்கள் ஆட்டம் தொடங்கி 52 ஆவது நிமிடத்தில் ஏ.கிசாந்தும் 54 ஆவது நிமிடத்தில் பி.ஜெபானேசனும் 55 ஆவது நிமிடத்தில் ஏ.கிசாந்தும் கோல் மழை பொழிய மன்னார் லீக் 5:1 என்ற கோல்களின் அடிப்படையில் முன்னிலை வகித்தது. தொடர்ந்து போராடிய வடமராட்சி லீக் அணி வீரர்கள் மன்னார் லீக் அணியினரின் கோல்ப்பரப்பிற்குள் ஊடுருவி தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர்.

இரண்டாம் பாதி ஆட்டத்தின் 62 ஆவது நிமிடத்தில் வடமராட்சி லீக் அணியின் வீரர் வனியராஜ் அடித்த அற்புதமான கோலின் மூலம் ஆட்டம் மேலும் விறுவிறுப்படைய அடுத்த 67 ஆவது நிமிடத்தில் வடமராட்சி லீக் அணியின் வீரர் சாருஜன் மன்னார் லீக் அணி வீரர்களின் தடுப்புக்களைத் தாண்டி லாவகமான முறையில் தனது அணிக்கான மூன்றாவது கோலைப் பதிவு செய்தார்.

இதனால் இரண்டாம் பாதி ஆட்டம் விறுவிறுப்படைந்திருந்த வேளையில் ஆட்டத்தின் 73 ஆவது நிமிடத்தில் மன்னார் லீக் அணி வீரன் எஸ்.சஜீவன் தனக்கு கிடைத்த வாய்ப்பினை கோலாக மாற்றினார். தொடர்ந்தும் இரு அணி வீரர்களும் கடும் போராட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் மேலதிகமாக கோல்கள் எதனையும் பெற முடியாமையினால் மன்னார் லீக் அணி 6:3 என்ற கோல்களின் அடிப்படையில் பருத்தித்துறை லீக் அணியைத் தோற்கடித்து அடுத்த சுற்றுக்குத் தெரிவானது.

இதில் பருத்தித்துறை லீக் அணி வீரர்கள் பல இலகுவான கோல் பெறும் வாய்ப்புக்களைத் தவறவிட்டமை குறிப்பிடத்தக்கது. (க-20)








# ஆவரங்கால் இந்து இளைஞர் வெற்றி

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்திய 2014 ஆம் ஆண்டுக்கான கரப்பந்தாட்ட போட்டியின் இறுதிப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதியது.

இப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் 3:2 என்ற வீதத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தை வென்றது. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் கைலாய வாகனத் திருவிழாவில் முருகன், வள்ளி தெய்வானை யுடன் வெளிவீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்...

# இலங்கை அரசாங்கத்தை பலவந்தப்படுத்த முடியாது

## சுப்பிரமணிய சுவாமி தெரிவிப்பு

(சென்னை)

13-ம் திருத்தச்சட்டத்தை அமுல் படுத்துமாறு இந்தியா, இலங்கையை பலவந்தப்படுத்த முடியாது என பார திய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலை வர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித் துள்ளார்.

13-ம் திருத்தச் சட்டத்தின் 95 வீத மான பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் அமுல்படுத்தியுள்ளதா கக் குறிப்பிட்டுள்ளார்.

13-ம் திருத்தச் சட்டம் குறித்த உன்படிக்கையானது இந்தியா - இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடை யிலான இருதரப்பு உடன்படிக்கை யாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முடிவடைந்த பாதுகாப்பு மாநாட்டின் மூன்றாவது நாள் அமர்வின்போது அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய அரசாங்கம் இலங்கை யுடன் உறவுகளை மேம்படுத்திக் கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்படு வதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியா, காங்கிரஸ் கட்சியின் வெளியுறவு கொள்கைகளை தொட ராது அயல்நாடுகளுடன் சிறந்த உறவுகளை பேண விரும்புகிறது.

அண்மையில் பாகிஸ்தானுடன் உறவை பலப்படுத்திக்கொள்ள எடுக்கப பட்ட முயற்சிகளும் இதில் அடங்கும்.

காங்கிரஸும் அதன் தமிழக தோழமைக் கட்சிகளும் இலங் கையை இழக்க தமது ஆதரவை வெளியிட்டன. இந்தநிலையில் சர்வ தேச அழுத்தத்தின் காரணமாகவே இலங்கை அரசாங்கம் சமாதான பேச்சுவார்த்தைக்கு சென்றது.

இதேவேளை புதிய பாரதிய ஜன தாக்கட்சி அரசாங்கம், தமது வெளி யுறவுக் கொள்கையில் பல யோச னைகளை முன்வைத்துள்ளது.

இதன் அடிப்படையில் உள்ளு ரின் குறுகிய நோக்கத்தை கருத்திற் கொள்ளாமல், அயல் நாடுகளுடன் உறவுகளை பலப்படுத்துவதை அந் தக்கட்சி முன்னோக்கி செயற்படுத்தி வருகிறது .



இரண்டாவது ஐக்கிய நாடுகளின் சாசனத்தை ஏற்றுக்கொண்ட நாடு என்ற அடிப்படையில் நியாயமற்ற வகையில் மேற்கொள்ளப்படும் இலங்கைக்கு எதி ரான போர்க்குற்ற விசாரணைகளை இந்தியா ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்தியாவில் செயற்படும் இலங் கைக்குஎதிரான அரசியல்வாதிகளை இந் திய தேர்தல்களில்மக்கள்நிராகரித்தனர்.

வர்த்தக நோக்கத்தை கொண்ட வர்களின் உந்துதல் காரணமாகவே தமிழக மீனவர்கள், இலங்கை கடற் பரப்பில் அத்துமீறி செயற்படுகின்றனர் என்றும் சுவாமி குறிப்பிட்டார். (எ-11)

# தென்னாபிரிக்கா வெற்றி

சிம்பாவேக்கு எதிரான இரண் டாவது ஒருநாள் போட்டியில் தென் னாபிரிக்க அணி வெற்றிபெற்றுள் ளது.

தெனாபிரிக்க கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப்பயணம் செய்து மூன்று ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

கடந்த 18-ம் திகதியில் நடந்த முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றி பெற்றது. இந் நிலையில் நேற்று 2-வது ஒரு நாள் போட்டி புலவாயோவில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற சிம்பாவே முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 49.4 ஓவர்களில் 257 ஓட் டங்களை எடுத்து ஆட்டமிழந்தது.

வெற்றிக்கு 258 ஓட்டங்கள் தேவை என்ற இலக்குடன் சிம்பாவே அணி களமிறங்கியது. சென்ற போட டியில் விளையாடியதை போலவே இந்த ஆட்டத்திலும் தனது சொதப் பல் ஆட்டத்தை வெளிப்படுத்தினர் சிம்பாவே வீரர்கள்.

அந்த அணியில் வில்லியம்ஸ் மட்டும் 55 ஓட்டங்கள் குவித்தார். மற்ற வர்கள் யாரும் 25 ஓட்டங்களைக் கூட தாண்டவில்லை. இறுதியில் 49.1 ஓவரில் 196 ஓட்டங்களுக்குள் ஆட்ட மிழந்தது சிம்பாவே. தென்னா பிரிக்க அணி 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக பந்துவீச்சில் 3 விக்கெட்டுகளை வீழ்த்திய தென் னாபிரிக்காவின் பார்னெல் தேர்ந் தெடுக்கப்பட்டார். (க)

## யார் மறுத்தாலும்...

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் விசா ரணைகளை மேற்கொள்ளும் ஐ.நா விசாரணைக்குழுவுக்கு நுழைவு அனுமதி வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அறி வித்துள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிபபிட்டுள்ளார்.

இது தொடர்பில் நவநீதம்பிள்ளை மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ஸ்கைப், செய்மதிப் புகைப்படங்கள மற்றும் இணையத் தொலைபேசிகள் போன்ற நவீன தொழில்நுட்ப வசதி களைப் பயன்படுத்தி விசாரணைக் குழுவால் தகவல்களைத் திரடடவும், விசாரணைகளை மேற்கொள்ள வும் முடியும்.

சிரியா மீதான போர்க்குற்றச் சாட் டுக்கள் தொடர்பிலான விசாரணை களை மேற்கொண்ட போது அங்கு செல்வதற்கு எமக்கு நுழைவு அனு மதி மறுக்கப்பட்ட போதிலும், எமது விசா ரணைக்குழு நம்பகத்தன்மை வாய்நத முறையில் விசாரணைகளை நடத்தி அறிக்கை ஒன்றை முன்வைத்தது.

இலங்கை விடயத்திலும் இது சாத்தியமாகவே அமையும். எனவே எமது நடவடிக்கைக்கு எவருமே தடையாக இருக்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஐ.நா மனிதவுரி மைகள் ஆணையாளரின் பணியத் தினால் முன்னெடுக்கப்படும் விசா ரணைகளுக்கு அரசாங்கம் ஒத்து ழைப்பு வழங்க வேண்டும் என்று ஐ.நா செயலாளர் நாயகம் பான்கீமூன கோரிக்கை விடுத்துள்ளார் என்று அவரது பேச்சாளர் ஸ்ரீபன் துஜாரிக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து பான் கீ மூனின் பேச்சாளர் ஸரீபன் துஜாரிக் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா மனிதவுரி மைகள் ஆணையாளர் பணியகத் தால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவுடன் ஒத்துழைக்குமாறு செய லாளர் நாயகம் அரசாங்கத்தை கேட் டுக்கொள்கிறார்.

அரசாங்கமும் அதன் மக்களும் ஐ.நாவின் முழுமையான கட்டமைப் புடன் ஆக்கபூர்வமாக இணைந்து செயற்பட வேண்டும். இதுவே இலங் கையின் தொடர்ச்சியான அபிவி ருத்தி, நிரந்தர சமாதானம், மற்றும் மனிதவுரிமைகள் பாதுகாப்பிற்கு உத வும் எனவும் பான்கீமூன் கோரிக்கை விடுத்துள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

## பாதை நிர்மாணி...

வியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

வடக்கு ரயில்வே பாதையை நிர் மாணிக்க ஒரு கிலோ மீட்டருக்கு 34 கோடி ரூபாய் என்ற பெருந்தொகை பணம் செலவிடப்பட்டுள்ளது.

இலங்கை நாணய பெறுமதியில் 1937 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப் படும் இந்த ரயில் பாதையை எகோன, ரை யிட்ஸ் ஆகிய தனியார் நிறுவனங்கள நிர்மாணித்து வருகின்றன.

பளை முதல்காங்கேசன்துறை வரை யான 56 கிலோ மீற்றர் ரயில் பாதையை அரசாங்கத்தின் தலைமையின் கீழ் நிர்மாணித்தால், ஒரு கிலோ மீற்றருக்கு 800 லட்சம் முதல் 1000 லட்சம் ரூபாயே செலவாகியிருக்கும்.

எனினும் வடக்கு ரயில் பாதை நிர்மாணிப்பின் ஊடாக அரசாங்கம் பெருந்தொகை பணத்தை மோசடி செய்துள்ளது.

அரசாங்கத்திற்கு நெருக்கமான இந்திய நிறுவனம் ஒன்று, ஒரு கிலோ மீற்றர் ரயில் பாதையை நிர்மாணிக்க 345. 8 மில்லியன் ரூபாவை செலவிடு கிறது. இதனடிப்படையில், ஒரு கிலோ மீற்றர் ரயில் பாதையை நிர்மாணிப் பதில் 2 700 லட்சம் ரூபாய் மோசடி செய யப்படுகிறது.

மோசடி செய்யப்படும் இந்த பணத்தில மாத்தறை - கதிர்காமத்திற்கு இடை யிலான ரயில் பாதையை நிர்மாணிக்க முடியும் எனவும் விதானகே குறிப் பிட்டுள்ளார். (எ-11)

## கூட்டமைப்பின் இந்தியப்...

ப்பால் முடியும்.

இந்தியாவில் ஒரு நகரசபை உறுப் பினராக கூட மக்களின் வாக்குகளை பெறாத, பெற முடியாத சுப்பிரமணிய சுவாமிக்கும் இங்கே அவரை அழைத்து வந்து, ஊதிப்பெருப்பித்து காட்டி நாடகமாடியவர்களுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய பயணம் நல்ல ஒரு சாட்டையடி என ஜனநாயக மக்கள் முன்னணி தலை வர் மனோ கணேசன் கூறியுள் ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப் படும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு சிங்கள, தமிழ் மொழிகளில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

பிரதமர் நரேந்திர மோடியை சநதிக்க, தமிழத் தேசியக் கூட்டமைப்பு குழுவினர் இந்தியா செல்கின்றனர. இந்த ஊவா தேர்தல் களத்தை பயன்படுத்தி, கூட்டமைப்பின் டெல்லி பயணத்தை, திரித்து பேசி, நாட்டை குழப்ப, இனி ஒரு குழ கிளம்பும். இந திய துணையுடன் நாட்டை இரண் டாக பிரிக்க முயற்சி என்று கூச்சல் அடுத்த சில நாட்களுக்கு கேட்கும்.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வில் இந்தியா ஒரு தவிர்க்க முடியாத அங்கம் என் பதை இலங்கை அரசு தன் செயல் கள் மூலம் இன்று ஏற்றுக்கொண் டுள்ளது.

இந்திய அரசு , இலங்கையின் உண்மை யதார்த்தத்தை உணர்நது செயல்படும் என நாம் எதிர்பார்க்கி றோம். அதிகாரத்தை பகிர பிடிவாத மாக இலங்கை அரசு மறுப்பதே, இலங்கையில் தேசிய இனப்பிரச் சினை தீர்வுக்கான பிரதான முட்டுக் கட்டை என்பதை இந்திய அரசு உணர வேண்டும்.

இலங்கை அரசு, சுப்பிரமணிய சுவாமியை ஒப்பந்த அடிப்படையில கொழும்புக்கு அழைத்து வந்து, அவருக்கு எழுதி கொடுத்து, அதை வாசிக்க சொல்கிறது. இந்த அரசு சொல்வதை அவரும் செய்கிறார்.

இவரை பயன்படுத்தி சிங்கள மக்கள் மத்தியில் ஒரு போலியான அபிப்பிராயத்தை ஏற்படுத்த இந்த மகிந்த அரசு முயல்கிறது. சுப்பிரமணிய சுவாமி, இந்திய அரசின் பிரதிநிதி என றும், அவர் வாயில் வரும் கருத்து கள், இந்திய அரசின் கருத்துகள் என்றும் காட்ட இலங்கை அரசு முயல்கிறது.

அமைச்சர் மேர்வின் சில்வா, புதுடில்லி சென்று இந்திய அரசு சொல்லிக்கொடுத்ததை பேசி னால் எப்படி இருக்குமோ, அப்படித் தான் இந்த சுவாமி டெல்லியில் இருந்து இங்கே வந்து இந்த அரசு சொல்லிக் கொடுத்ததை பேசுவதாகும்.

இந்தியாவில் இருந்து இறக்கு மதி செய்யப்படும் தமிழ், ஹிந்தி திரைப்படங்கள் இலங்கையில் பாரம்பரியமாக ரசிக்கபடுகின்றன. இவற்றில் நடிக்கும் காமெடி நடிகர் கள் இங்கே ரொம்ப பிரபல்யம். இத் தகைய ஒரு காமெடி நடிகர்தான் சுப்பிர மணிய சுவாமி.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன் னணி தலைவர் மனோ கணேசன் தனதுரையில் தெரிவித்தார் (எ-11)

## விசாரணை...

டுக்கொண்டுள்ளதாக பேச்சாளர் ஸ்ரீபன் டுஜாரிக் தெரிவித்துள் ளார்.

இலங்கை அரசாங்கமும் அதன் மக்களும் ஐக்கிய நாடுகளின் முழு மையான கட்டமைப்புடன் ஆக்க பூர்வமாக இணைந்து செயற்பட வேண்டுமென பான் கீ மூன் கேட் டுக்கொள்வதாகவும், இது நாட்டி னது தொடர்ச்சியான அபிவிருத்தி, நிரந்தர சமாதானம், மற்றும் மனித உரிமை பாதுகாப்பிற்கு உதவும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படுவதனை உறுதி செய்ய வும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வும் ஐக்கிய நாடுகள் மனித உரி மைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எடுத்து வரும் முனைப்புக்கள் பாராட்டுக்குரியது என வும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## மோடியை...

சந்திக்கவுள்ளதாக அவர் குறிப்பிட் டார்.

இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புகளை பேணவேண்டாம் என்று இந்திய மத்திய அரசாங்கத் துக்கு தமிழகத்தில் அழுத்தம் கொடுக்கப்படுவது குறித்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி மகிந்த, அனைத்தும் அரசியல்.

அவற்றுக்கு தாம் முக்கியத் துவம் கொடுத்து பார்ப்பதில்லை என்று குறிப்பிட்டார்.

இதேவேளை விடுதலைப் புலி களின் அச்சுறுத்தல் இன்னும் இருப்பதால் வடக்கு மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாதென ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கடந்த காலங்களில் நான்கு ஐந்து தடவைகள் விடு தலைப்புலிகள் மீளெழுச்சி பெற்ற மையை மறக்கமுடியாது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (எ-11)

## கூட்டமைப்...

கள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின தலைவர் சம்பந்தன் தலைமையிலான இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப் பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் பொன்.செல்வராசா ஆகியோர உள்ளடங்கியுள்ளதாக குறிப்பிடபபட் டுள்ளது.

இப்பயணத்தின் போது இக்குழு வினர் பாரதிய ஜனதாக் கட்சி தலை மையிலான அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களையும் சந்தித்து கலந் துரையாடவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இந்தச் சந்திப்புக்களின் போது அரசியல் தீர்வு, 13-வது திருத்தச்சட் டம், மாகாண சபை அதிகாரங்கள், இருநாட்டு மீனவர் விவகாரம், உள் நாட்டில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பில் இந்தியத் தலைவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் விளக கம் அளிப்பார்கள் எனவும் இச்செய் திகள் மேலும் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பிரதிநிதிகளை இந்தியப் பிரத மர் நரேந்திர மோடி உடனடியாகச் சந் திக்க வாய்ப்புகள் இல்லை என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இரு தினங்களுக்கு முன்னர் செய்தி வெளியிட்டிருந்த நிலையில், இச்செய்தி வெளியாகியுள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

நிலாவரையில் தொடராக உள்ள சகல வசதியுடைய மூன்று கடை உடனடியாக விற்பனைக்குண்டு.

உங்கள் விண்ணப்பங்களை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பவும்


விளம்பர இலக்கம் 7440
வலம்புரி அன்கோ, இல.03,
2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(7440)


## காலநிலை...

அதிகரிப்பு, வரட்சி மற்றும் மழைவீழ்ச்சி முறைகளில் ஏற்படும் மாற்றம் ஆகியவை அவர்களது உணவுப் பாதுகாப்பு, வாழ்வாதாரம் ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார். மழை வீழ்ச்சி குறைவதால், தாழ்நாட்டு மற்றும் மத்திய மலைநாட்டில் உள்ள தேயிலை உற்பத்தியும் பாதிபடையும் நாட்டின் பரந்துபட்ட கரையோரப் பிரதேசத்தில், மீன்பிடிக்கு கணிசமான பாதிப்பு ஏற்படுவதுடன் யாழ்ப்பாணம், மற்றும் கம்பஹா பகுதிகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படும். (எ-11)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் செல்லையா கதிரேசன் (தீத்தி)

(கோணாவில் மத்தி, கிளிநொச்சி)

எம் உள்ளமெல்லாம் நிறைந்திருக்கும் மைத்துனரே
கள்ளமில்லாமல் யாவருடனும் கலந்திருந்தீர் ஐயா
ஓடி ஓடி உழைத்து உயர்ந்த உத்தமரே
வாடி நாம் துவள வானகம் சென்றதேனோ?

திடீரென எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி மறைந்து விட்ட எம் அருமை மைத்துனர் செல்லையா கதிரேசனின் (தீத்தி) பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்

மண்ணில் 11-05-1956
விண்ணில் 19-08-2014

வின்சன் பான்சி அன் புத்தகசாலை
விசுவமடுச் சந்தி, விசுவமடு.

மச்சான்
சசி குடும்பத்தினர்.

(சி-4953)


## அகவை நிறைவில் அகம் மகிழ்ந்த வாழ்த்துக்கள்



### கௌரவ கல்வியமைச்சர் வட மாகாணம்
### ஸ்ரீமான் தம்பிராசா குருகுலராஜா
அவர்கள்

தேசியத்தின் உணர்வுக்காய்
கல்வியின் பெருமைக்காய்
பெரும் விழுமியத்தின் காவலனாய்
எங்கள் மண்ணின் உணர்வாய்
வெளிவந்த செம்மலே
உம்மை மனம், மொழி, மெய்யால்
அகமகிழ்ந்து வாழ்த்துவமே
பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாண்டு
வாழியவே!

இங்ஙனம்
உண்மையுள்ள
தங்களின் சேவையின் கீழ்
சைவசித்தாந்த பண்டிதா
சிவஸ்ரீ. தியாகசோமாஸ் கந்தராஜாக்குருக்கள்
(B.A Dip.in.Edu, M.A-பிரதியதிபர்)
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் நெல்லண்டை
ஸ்ரீ வீரமாகாளியம்மன் வடபத்திரகாளியம்மன்
தேவஸ்தானம்-ஆதீனஹர்த்தா, தும்பளை, பருத்தித்துறை.

(C-8254)

## நல்லூரான் அருள் பரவட்டும் அகிலமெலாம்

உங்கள் அபிமான புதிய தலைமுறை ஐஸ்கிறீம் நிறுவனமாகிய

# SYLO ICE CREAM
(Sweet your Life orbit)

நல்லூர் முன் பருத்தித்துறை வீதியில் இல. 521 C கட்டடத்தில் விழாக்கால விற்பனை நிலையத்தை அமைத்துள்ளது.

நம்பகமான Pasterzed மற்றும் Homeginezed முறைப்படி 100% சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் பல வகை ஐஸ்கிறீம் வகைகளை சுவைத்து மகிழுங்கள்.



521 C, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

இல. 76, அம்மன் வீதி,
கொக்குவில்.
021-4926003


# மரண அறிவித்தல்



## அமரர் இளையதம்பி துரைசிங்கம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் சிவன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி துரைசிங்கம் நேற்று (20.08.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவனேஸ்வரியின் கணவரும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் கந்தசாமி நல்லபிள்ளையின் அன்பு மருமகனும், கனகம்மா, நல்லம்மா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் மைத்துனரும் சுந்தரலிங்கத்தின் சகலனும் மற்றும் இரத்தினத்தின் மைத்துனரும் தங்கராசாவின் சகலனும், நவரட்ணராணி (U.K), மனோன்மணி (உப தபாலதிபர்-ஆவரங்கால்), அமரர் சிவராஜா (முன்னாள் பிரதேச சபை செயலாளர்-பச்சிலைப்பள்ளி), விநாயகலிங்கம் (U.K), வரதலக்ஷ்மி (U.K), இரவீந்திரா (சுவிஸ்), கருணாகரன் (சுவிஸ்), நிமலா (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீஸ்கந்தராஜா (Appex Engineering(PVC)Ltd ), தங்கராஜா (மலேசியா), கேதீஸ்வரி (ஆசிரியை- ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), கணேஸ்வரி (U.K) மாணிக்கவாசகர் (U.K), திருச்செல்வம் (சுவிஸ்), கஜந்தினி (சுவிஸ்), சிவகுமார் (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்சிகா (U.K) துளசிஜா (U.K), நீபன் வைஸ்ணவி (ஸ்ரீ புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி), விதுர்சனா (நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), சிந்துஜன் (*Royal Institute - Colombo*), விதுர்ஷா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), விதுஜென் (சென் ஜோன்ஸ் கல்லூரி), சியானிஷா (நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), கோபிகன் (U.K), துசிகன் (U.K), பிரகலை (U.K), வேணுகானன் (U.K), ஆதவன் (U.K), திருசினி (சுவிஸ்), வேணுஜன் (சுவிஸ்), துசாந்தன் (சுவிஸ்), துசிந்தன் (சுவிஸ்), துசான் (சுவிஸ்), அஸ்வின் (U.K) ஆகியோரின் அன்புப் பேரனும், சுந்தர்ராஜன், சுசீந்திரா, சுகுமார், சுரேந்திரன், சுரேஸ்குமார், தயானந்தன், ஜெயந்தினி, ஜெயந்தன் ஆகியோரின் பெரிய தகப்பனும் அமரர்களான செல்வராஜா, சரஸ்வதி, சரோஜினி தேவி மற்றும் செல்வரத்தினம், தங்கராஜா, சகுந்தேஸ்வரி, யோகராஜா, விமலராணி, வரதராஜா, பத்மராணி யோகசிவம் மற்றும் காலஞ்சென்ற வாமதேவன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (22.08.2014) வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன்வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

தகவல்:-குடும்பத்தினர்
0212058017, 0770220683

(7463)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.